www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
செப்.29—ஒக்.05,1996

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 172

## போருக்குள் வாழ்க்கை

## அஷ்ரப்புக்கு தலையிடி

## புலிகள் திரள்கிறார்கள்



## அட்லாண்டாவில் சிவாஜி

## பூலான் தேவி

## பிரபா-ராஜீவ் சந்திப்பு



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தேவையானது உண்மை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

யாழ்-குடாநாட்டில்-
மீண்டும் காணாமல் போவோர் பட்டியல்!

தெற்கில்- கடந்த கால ஆட்சியில்
காணாமல் போனோரின் கதி அறிய
தொடரும் விசாரணைக் கமிஷன்கள்!

வடக்கு-கிழக்கிலும்
காணாமல் போனோர் பட்டியல்
இருக்கத்தான் செய்கிறது.
ஆனால்- கமிஷன்களின் கவனம்
தென் பகுதியோடு நின்றுவிடுகிறது!

எனவே- எவர் பதவிக்கு வந்தாலும்
வடக்கு-கிழக்கு புதைகுழிகளுக்குள்
காணாமல்போன உயிர்களும்
உரத்த உண்மைகளும்
ஒரு நாளும் வெளிவரப்போவதில்லை!

அதனால்தான் அங்கெல்லாம்
அத்துமீறல்கள் துணிச்சலாகத்
தொடர்ந்து கொண்டிருக்கின்றன!

தமிழ் இளைஞர்களை திருகி
ஏரிகளில் வீசியெறிந்ததாக
கைது செய்யப்பட்ட
அதிரடிப்படையைச் சேர்ந்தவர்களுக்கு
எதிராக எடுக்கப்பட்ட
நடவடிக்கை என்ன?

ஆதாரங்கள் இருந்தும்கூட
சம்பந்தப்பட்டவர்கள் எப்படி
சுதந்திரப் பறவைகளானார்கள்?

தண்டிக்கப்படமாட்டோம்
என்ற துணிச்சலோடு
கண்டிக்கப்படவேண்டிய காரியங்களை
செய்வதற்கு உற்சாகம் தருவது
இதுபோன்ற அணுகுமுறைகள்தானே!

பதவிக்கு வந்தபோது
மனித உரிமை அமைப்புக்களால்
பாராட்டப்பட்டது புதிய அரசு!

பாராட்டப்பட்டபோது
மகிழ்ந்த அரசாங்கம்
அந்தப் பாராட்டுக்களை
தக்கவைத்துக் கொள்ளும் வகையில்
அத்துமீறல்களை
முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கலாம்.

மனித உரிமை அமைப்புக்கள்
தட்டிக் கொடுக்கும் போது
புன்னகைப்பதும்,-தவறுகளைச்
சுட்டிக்காட்டும்போது
சுள்ளென்று கோபப்படுவதும்-
'அரசு புதிது
அணுகுமுறை பழையது'
என்று நினைக்க வைத்துவிடுகிறது!

இன்று யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல,
நாடெங்குமே
தமிழ் பேசும் மக்களுக்கு
மனித உரிமை பற்றிய பேச்சுக்கள்
கடும் சலிப்பையே தருகின்றன.

கடந்தகால மனித உரிமை
மீறல்கள் பற்றிய
விசாரணைக் கமிஷன் செய்திகளை
தமிழ் மக்களும் படித்தறிகிறார்கள்.
'இப்போது மட்டும் என்ன வாழ்கிறது?'
என்ற உணர்வுதான்
அவர்களிடம் ஏற்படுகிறது.

அரசாங்கத் தலைமைக்குக்கூட
அத்துமீறல்களில் ஈடுபடுகிறவர்கள்
தவறான தகவல்களைக் கொடுக்கலாம்.
காணாமல் போகிறவர்கள் யாவரும்
புலிகள்தான் என்று
பொய்யான தகவல் கிடைக்கலாம்.

அரசாங்கத் தலைமை
ஆணையிட்டுத்தான் அனைத்தும்
நடப்பதாக நினைப்பது தவறுதான்!

ஆனால், அரசாங்கத் தலைமை
தனக்கு கிடைக்கும் தகவல்களை
சரிபார்க்க வேண்டாமா?
அது முடியுமா? முடியும்!

கடந்தகால ஆட்சியின்
புதைகுழிகள் எங்கிருக்கின்றன,
என்பதை காலம் கடந்தபின்னரும்
கண்டறிய முடிகிறபோது,
நிகழ்கால அத்துமீறல்களை
கண்டறிவதோ கடினம்?
மனமுண்டானால் இடமுண்டு!

சொற்களைவிட செயல் முக்கியம்.
காணாமல் போனோர் பற்றிய
கேள்விகளுக்கு தேவையானது
சம்பிரதாயபூர்வமான பதில்களல்ல;
நேர்மையான விசாரணைமூலம்
உண்மைகளைக் கண்டறிவதே!

'உலைவாயை மூடலாம்
ஊர்வாயை மூடமுடியாது.'
மனித உரிமைகள் விடயத்தில்
உண்மைகளை ஒளித்துவைத்திருக்க
அரசு முயலுமானால் -அது
தன் நம்பகத்தன்மையை
இழப்பதாகிவிடும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## வீண் வார்த்தைகள்

குற்றங்கள் செய்யாமலே வீண் வார்த்தைகள் சுமத்தப்பட்டு வேதனைப்படும் உள்ளங்களே! கவலைப்படாதீர்கள். மத் 12:36, 37 கூறுவதைப் பாருங்கள்: "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி எனத் தீர்க்கப்படுவாய்" என்றார்.

வீணான வார்த்தைகள் கேட்டு கலங்காதிருப்போம். அவரவர் பேசும் வீணான வார்த்தைகளுக்கு அவரவர் கணக்கு ஒப்புவிக்கப்பட வேண்டும். எம் வார்த்தைகளினால் நாம் குற்றவாளியாகத் தீர்க்கப்படாதிருக்க வீணான வார்த்தைகள் பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மத் 12: 34– இதயத்தின் நிறைவினால் வாய் பேசும் எனக் கூறுகிறது.

மத் 12:35- "நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான். பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்." என்று கூறுகிறது.

எனவே வீண் வார்த்தைகள் கேட்டு நாம் கலங்காதிருப்போமாக.

ஜே. புளோரன்ஸ், அம்பக் கோட்டை, கெங்கல்ல.

## ஆன்மீகம்



## குர்ஆனின் மூலம் உலகைச் சம்பாதிப்பதன் தண்டனை?

ஹஜ்ரத் புரைதா(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: "எவரேனும் ஒருவர் குர் ஆனைக் கொண்டு மனிதர்களிடம் வாங்கிச் சாப்பிடுகின்ற எண்ணத்தில் அதனை ஓதினால் கியாமத்து நாளில் அவருடைய முகத்தில் சதையில்லாது வெறும் எலும்பாக வருவார்" என ரசூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

(நூல்: ஷுஃபுல் ஈமான்).

முகத்தில் சதை இருக்காது என்பதின் கருத்து, அனைத்திலும் மிகச் சிறப்பான குர் ஆனை மிகத்தாழ்ந்த பொருளைச் சம்பாதிப்பதற்காகப் பயன்படுத்தும்பொழுது உறுப்புக்களில் சிறப்பிற்குரிய முகத்தின் அழகு அவனுக்குப் போக்கப்பட்டு விடுகிறது என்பதாகும்.

மேலும் திருமறை அல்குர் ஆன் இவ்வாறு கூறுகிறது: "அவர்கள் நேர் வழிக்குப் பகரமாக வழிகேட்டை விலைக்கு வாங்குகிறவர்கள். அவர்களின் வியாபாரம் இலாபம் தரமாட்டாது. அவர்கள் நேர்வழி பெறுபவர்களாகவும் இல்லை."

மேலும் இன்று எத்தனையோ மனிதர்கள் அரசியல், வியாபாரம் போன்றவற்றிற்காக புனித வேதத்திற்கு களங்கமிழைக்கிறார்கள். இவற்றை விட்டு விட்டு உண்மை மார்க்கத்திற்கு புத்துயிரிடுங்கள்; வெற்றிபெறுவீர்கள்.

எம்.எம். முஹம்மது ஆஸிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல.169

### பரிசுக்குரிய கவிதை

### ஒற்றுமை

ஒன்றாய் வாழ
மறந்துவிட்டோம்;
ஒரே குழிக்கே
வந்துவிட்டோம்!

உம்மு ஸலீமா ராபி- பாலையூற்று, திருகோணமலை.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



**மனித மொழி**

தோண்டு தோண்டு!
இன்னும் மண்டை ஓடுகள்
கிடைக்கும்.....!
இவர்கள் எந்த மொழியின்
உயிர் எழுத்துக்களில்
ஓலமிட்டிருப்பார்கள்....?
எல்லாம் மனித மொழி!

செல்வி ச. சாந்தி- அக்கரைப்பற்று.

**அறுவடை**

துப்பாக்கிக் கலாசாரம்
தொடர்ந்து வளரும் வரை
இப்புவியில் எங்களுக்கு
இவைதான் அறுவடையோ?

கி. குலசேகரன்- கொஸ்லந்தை.

**எச்சம்**

2000ம் ஆண்டில்
பார்வைக்கு வைக்க இருக்கும்
மனித எச்சம்.

செல்வி எஸ்.எம்.எஸ். பைறோஸ்-
சாய்ந்தமருது-11.

**ஆயத்தம்! அடுத்த முறை**

இது மட்டுமல்ல,
இன்னும் இருக்கிறது ஏராளம்!
அடையாளம் காண்பதற்கு,
அமெரிக்கா அனுப்பவில்லை
கொம்பியூட்டர்!
அதன் பிறகு மறு கும்பம்!
அடுத்த முறை தோண்ட
ஆயத்தம் மண் வெட்டி!

நிஜந்திக்கா கனகசிங்கம்- கல்லடி,
மட்டக்களப்பு.

**சமரசம் உலாவுமிடம்!**

மனிதராயிருந்தவரை
மறையாத வேற்றுமைதான்;
மண்டையோடாய் ஆனபின்னர்
மகத்தான ஒற்றுமைதான்!

பழ. சச்சிதானந்தன், ஜோய்ஸ்லீன்- செங்கலடி.

**உற்பத்தி**

இறக்குமதி செய்த
இயந்திர துப்பாக்கி கொண்டு
ஏற்றுமதிக்கு தயாரான
எம் நாட்டு உற்பத்தி.

சி.மு. சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

**அடையாளம்**

அதிகாரம்
ஆணையிட்டதால்,
ஆயுதம்
அரவணைத்ததோ?
எதிர்கால மனிதம்
இப்படி எலும்பு
மேடானதோ?

வை. சித்திக்கிருஷ்ணா-
பாண்டிருப்பு-01.

**தலையுதிர்காலம்**

இது—...
இலையுதிர் காலமல்ல;
தலையுதிர்காலம்—..!
சாட்சிக்கு-சில.....
உதாரணங்கள்!

ரவிந்திரகுமார்-
துறைநீலாவணை-05.

**இனி.....**

புதைத்தவை தோண்டப்பட்டு
புதியவை புதைக்கப்படும்
எலும்புகளும்- மண்டை ஓடுகளும்
சண்டை நடந்ததற்குச் சாட்சியாக
சந்ததிக்கு விடப்படும்......!

எஸ். பிரபா- கொக்காகல.

## கவிதைப் போட்டி இல-172



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் **கவனியுங்கள்!**
எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 05.10.1996

– முகவரி –
கவிதைப் போட்டி இல.172 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**ஊரும்–காடும்**

குண்டுகள் குவலயம் ஆளும்!
குவிந்து கிடக்கும் மனிதத் தலைகள்,
மண்டை ஓடுகள் சிரிக்கும்;
மனித எலும்புகள் அணிவகுக்கும்:
கண்ட இடமெல்லாம் காட்சி இதுவாகும்!
கானகமும் ஊரும் ஒன்றாகத் தெரியும்.

குணபால கிருஷ்ணானந்த மூர்த்தி- தங்கநகர், கிளிவெட்டி.

**மரியாதை**

நோயில் வீழ்ந்தாலும் விளைவு அதுவே!
போரில் மடிந்திட்ட போதும் பொதுவில் அஃதே!
சாகா வரம் இல்லை தரணி மாந்தர்க்கு;
சம உரிமைகள் இன்றி சமாதானமும் இல்லை;
ஆனாலும் உண்டு எம்மிதய மரியாதை
அநீதி காணச் சகியா அம் மானிடர்க்கு!

எம். மஹிபால்-மருதானை, பேருவளை.

## வாசக(ர்) சாலை

எனது அன்பின் முரசே,

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் மிகமிகப் பிரமாதம். நான் யாழ் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்தது முதல் உன்னை வாசிக்கிறேன். உனது ஒரு வார மலரை வாசித்துவிட்டு இனி அடுத்த மலர் எப்போது பூத்துக் குலுங்கி வெளிவரும் என 'வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்'.

செல்வி பா.தில்லை, இராகலை பசார்,
ஆல்கரனோயா



இராமாயணப் போட்டி இல-46ல் எனது பெயரை சரியான விடையெழுதி வெற்றி பெற்றோர் பகுதியில் பிரசுரித்ததற்கு நன்றி. மேலும் வவுனியா சி.ஜோசப்பின் கேள்விக்கு நாட்டு நடப்பை நகைச்சுவை பொருந்த பதிலளித்த சிந்தியாவை மெச்சுகிறேன். 'இராமாயண' இராஜகுமாரனுக்கு பாராட்டுக்கள். 'மறுபடி.யும் தா' என்று நான் கேட்காமலே தந்த என் அபிமான எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாவுக்கு நன்றி. ரசிகனே பூலான்தேவிக்கு ஏற்பட்ட ஏமாற்றம் என்னையே கண்கலங்க வைத்தது. நீடூழி வாழ் நீ முரசே;

என்.ஜீ.நாகேஸ்வரன், பூண்டுலோயா.

அன்பின் தினமுரசே!

வாரம் தவறாது வளமான பல்சுவை அம்சங்களை சூடு, சுவை, சுவாரசியமாக வழங்கும் உனக்கு எனது இனிய வாழ்த்துக்கள். அதிலும் காதில பூ கந்தசாமியின் கற்பனை நயம். பாப்பா முரசு சிறுகதை என்பன என்னைக் கவர்ந்தவை.

எஸ்.திருச்செல்வம், சென்றல் கேம்ப். (கி.மா)

'முரசு' மூலம் இருதரப்பின் நாடித் துடிப்பையும் நாம் அறியமுடிகிறது. என்றாலும் ஒரு குறை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தவறான பக்கங்களை மேலும் சுட்டிக்காட்ட வேண்டும். அதன்மூலம் அந்த இயக்கத்தினரும் தமது பிழை- சரிகளை அறிந்துகொள்ள ஏதுவாயிருக்கும். புலிகள் இயக்கத்தினரின் செயல்கள் குறித்து மௌனம் சாதிப்பதே தமிழ் விமர்சகர்களின் வழக்கம். 'முரசு'வும் அவ்வாறு இருந்துவிடக் கூடாது.

சி.பாலசுந்தரம், மட்டக்களப்பு.

பட்டுக்கோட்டை பிரபாகரின் 'மறுபடி தா', 'தா'வின் பின்னர் தாவிவரும் அட்டகாசமான தொடர். பாகம் ஒன்றுடன் நிறுத்தாமல் பாகம் இரண்டாக 'மறுபடி தா' தொடர்வதற்கு பாராட்டுக்கள். பட்டுக்கோட்டை பிரபாகரின் நாவல்களில் சிறந்த முத்துக்களில் ஒன்று 'தா', 'மறுபடி தா' என்று உறுதியாகச் சொல்லலாம்.

என்.ஹென்றி, புத்தளம்.

'தாய்' நிறைவுபெறப்போவதுபோல் தெரிகிறதே! தாயைப் பிரியும் சோகம்தீர முரசு அடுத்துத் தரப்போகும் ஆறுதல் என்னவோ? அறிய ஆவல்.

செல்வி-வி.தயாளினி, கொழும்பு-06.

**முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

- திருமதி மலர் வேதநாயகம், கல்முனை.
- எம்.எம்.எஸ்.ரூவிசா, குவைத்.
- ஆர்.சத்தியசீலன், ம.ரஞ்சன், மட்/வாழைச்சேனை.
- தயா, பத்தனை.
- வி.எம்.வசந்தன், கொழும்பு-11.
- கு.தயாழினி, மட்டக்களப்பு.
- எஸ்.பிரேம் ஆனந்த், அக்கரைப்பற்று-09.
- கனிபா றைகானா, குவைத்.
- ஆர்.ராதாகிருஷ்ணன், மல்வான.
- ஞா.மணிமேகலா, கம்பளை.
- தி.வேந்தன், கொழும்பு-05.
- ராமசாமி தேவதால், மூதூர்.
- எஸ்.ராதிகா, மட்டக்களப்பு.
- வி.குகதாசன், மட்/இந்துக்கல்லூரி.
- எஸ்.ரவிந்தர், லுனுவத்தை.
- நா.ஜெயகணேஷ், பொகவந்தலாவ.
- பூ.மகேந்திரதாஸ், கோட்டைக்கல்லாறு.
- கே.புவனலோஜினி.
- க.லோகநாதன், மட்டக்களப்பு.
- ஈ.யூட் கண்ணன், திருமலை.
- செல்வன் பௌஸர் மொகமட், தர்கா நகர்.
- எம்.சரவணன், பசறை.
- வி.தங்கராஜ், கண்டி.
- இ.ஜெகநாதன், கண்டா.
- கு.செல்வராசா, திருமலை.
- ஏ.எம்.ஏ.அஹத், சாய்ந்தமருது-10.
- இரா.மோகன்ராஜ், பண்டாரவளை.



படிப்பகம்

www.padippakam.com

# யாழ் குடாநாட்டை தக்கவைக்கும் தாக்குதல்கள்!

# குடாநாட்டுக்கு வெளியே படையினர் திறக்கும் போர்முனைகள்!

இம்முறை வடபகுதியில் மழைக் காலத்தாக்குதலுக்கு புலிகள் ஆயத்தமாகி வருவதால், படையினர் புலிகளை முந்திக் கொள்ளும் வகையில் வன்னியில் தமது நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர். யாழ் குடாநாட்டில் புலிகளின் அணிகள் ஒன்றுகுவிந்து கெரில்லாத்தாக்குதல்களில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் படையினர் வன்னிப்பகுதியில் போர்முனையைத் திறந்துள்ளனர்.

பரந்தனில் இருந்து மீண்டும் கிளிநொச்சி நோக்கிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்களில் அதுவும் ஒன்றாக இருக்கலாம் எனத் தெரிகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பரந்தனில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையில் தமது தரப்பில் ஏற்பட்ட இழப்பு விபரங்கள் தொடர்பாக புலிகள் இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. பலத்த பதில் தாக்குதலில் தமது அணிகள் ஈடுபட்டன என்று மட்டுமே புலிகளின் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

### ஆட்டிலெறி பீரங்கிகள்

கடந்த ஜூலை மாதம் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'சத்யஜெய' நடவடிக்கையின் போது ஆனையிறவில் இருந்து கரடிப் போக்குவரை படையினர் முன்னேறிச் சென்றனர். அதன் பின்னரே புலிகளின் தாக்குதல் கடுமையாக இருந்தது. பின்பு படையினர் பரந்தனுக்கு திரும்பினார்கள். பரந்தனுக்கு படையினர் திரும்பிச் செல்வர் என்று 'முரசு' அப்போது செய்தி வெளியிட்டமை தெரிந்ததே. பரந்தனுக்கு தாம் திரும்பிச் சென்றது தொடர்பாக படையினர் வெளியே தெரிவிக்கவில்லை.

தற்போது பரந்தனில் இருந்துதான் படையினர் முன்னேறியதாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. அதன் மூலம் படையினர் பரந்தனுக்குத் திரும்பிச் சென்று நிலை கொண்டிருந்தனர் என்பது உறுதியாகிறது.

தற்போது புலிகளிடம் ஆட்டிலெறிப் பீரங்கிகள் இருப்பதால் படையினர் விரைவாக முன்னேறுவதும், நீண்ட நிலப்பகுதியில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதும் சிரமமாக இருக்கும் என்று கணிப்பிடப்படுகிறது.

மோதல் பலமாக தொடருமானால் கிளிநொச்சி நகரின் நிலை மேலும் மோசமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. சத்யஜெய இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த கிளிநொச்சி மக்கள் தமது சொந்தப்பகுதிகளுக்கு திரும்புவதும் கேள்விக்குறியாகியுள்ளது. இரண்டு இலட்சம் மக்கள் கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

கிளிநொச்சியில் இருந்து பல மைல்கள் தள்ளியுள்ள பகுதிகளில் உள்ள மக்களும் இடம்பெயர்ந்து செல்லும் நிலை ஏற்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

### கிழக்கிலும் நகர்வுகள்

வன்னியில் படை நடவடிக்கைகள் தொடரும் அதேவேளையில் கிழக்கிலும் படையினர் நகர்வுகளை மேற்கொள்ளலாம் என்று புலிகள் இயக்கத்தினர் கருதுகின்றனர்.

யாழ் குடாநாட்டில் தமது கெரில்லா யுத்தப் பொறிக்குள் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதற்காகவே படையினர் யாழ் குடாநாட்டுக்கு வெளியே போர்முனைகளை திறந்து வருகின்றனர் என்று புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

படையினரின் உத்திகளுக்கு பதிலடியாக வடபகுதிக்கு வெளியே புலிகள் இயக்கத்தினர் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தலாம் என்று நம்பப்படுகிறது.

### தரைப்பாதை?

எதிர்வரும் மழைக்காலத்தில் கடல்வழிப் பாதையிலும் கடற் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடும். அதனால் வடபகுதியில் உள்ள படை முகாம்களுக்கான விநியோகத்திலும் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்று கருதி தரைவழிப்பாதை ஒன்றை திறப்பதற்கான முயற்சியிலும் படையினர் ஈடுபடலாம். வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை தரைப்பாதை ஒன்றைத் திறப்பதுதான் படையினரின் நோக்கம் என்று சில விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆனால் அத்தகைய ஒரு நடவடிக்கை உடனடியாகச் சாத்தியமாகக் கூடியதல்ல. புலிகளிடம் ஆட்டிலெறிப் பீரங்கிகளும், மோட்டார்களும் இருப்பதால் பரந்த நிலப்பரப்பு ஊடாக பாதை அமைக்கும் நடவடிக்கை இலகுவாக இருக்காது.

யாழ் குடாநாடு நோக்கி புலிகளின் அணிகள் செல்லாமல் வன்னியில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கச் செய்வதற்காக பரந்தனில் இருந்து தாக்குதல்கள் அடிக்கடி நடத்தப்படலாம். அதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் அடிக்கடி போர் முரசு கேட்டுக்கொண்டே இருக்கும் என்று இராணுவ விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதிக்குள் புலிகள் ஊடுருவிவிடாமல் இருக்கவும் பரந்தன் முன்னரங்க நிலைகளை பலப்படுத்தும் தேவை படையினருக்கு இருக்கிறது.

## குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு

### பருக நீர்வேண்டுமானால் பணம் கொடுக்கவேண்டும்!

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரில் தற்போது குடி நீருக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் வாழும் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இப்பகுதியில் தினமும் 45 நிமிடம் முதல் 1 மணித்தியாலம் வரை குழாய் நீர் விநியோகம் இடம் பெறுகின்றது. எனினும் இந்த நீரை குடிப்பதற்குப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குழாய் நீரை பெறும் கிணறுகளில் அநேகமானவை உவர் நீராக மாறியுள்ளதே இதற்கான காரணமாகும். இக்குழாய் நீரை வாயில் வைத்தால் கடல் நீரைப் போன்று உவர்ப்பாக உள்ளது.

நகரில் ஏற்பட்டுள்ள இக்குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க தினமும் பௌசர்கள் மூலம் நீர் விநியோகம் இடம் பெற்று வந்தாலும் இது போதியதாக இல்லை.

ஒரு குடம் நீரை ஒரு ரூபா கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஏழை மக்களும் பேக்கரிகள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் பெரும் சங்கடத்தை எதிர்நோக்கியுள்ளனர். வங்காலைப் பகுதியிலும் குடி நீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

காலங்காலமாக ஏற்பட்டுவரும் இத் தட்டுப்பாட்டினை நிவர்த்திக்க எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காதது குறித்து பொது மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## நோர்வே மறு பரிசீலனை!

### அகதிகளுக்குப் புகலிடம்!

பாதுகாப்பு செலவினங்களை அதிகரிக்கும் நாடுகளுக்கு நிதி உதவி அளிப்பதை நிறுத்துவது தொடர்பாக நோர்வே ஆராய்ந்து வருகிறது. நோர்வே நாட்டு வெளிநாட்டமைச்சும், நோராட் நிறுவனமும் இது குறித்து மீள் பரிசீலனை செய்து வருகின்றன.

நோர்வே நாட்டால் வழங்கப்படும் நிதி உதவிகள் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளின் கொள்வனவிற்குப் பயன்படுவதாக இருக்கக்கூடாது என்று வளர்முகநாடுகளுக்கு உதவிவழங்கும் செயற்பாட்டுக்குப் பொறுப்பாக உள்ள நோர்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

1985 முதல் 1995 வரையுள்ள காலப் பகுதியில் பாதுகாப்பு செலவினத்தை அதிகரித்த நாடுகளில் இலங்கையும் அடங்குகிறது என்று நோர்வே புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 1995ல் இலங்கைக்கு 90 மில்லியன் குரோணர்களை நோர்வே உதவியாக வழங்கியிருந்தது.

இலங்கையில் இருந்து அகதிகளாகச் செல்லும் தமிழ் மக்களுக்கு சமீபகாலமாக நோர்வே புகலிடம் கொடுத்துவருவதும் குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் நோர்வேக்கு சென்ற பலர் அகதிகள் அந்தஸ்து பெற்றுள்ளனர். இலங்கையில் வடக்கு-கிழக்கில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டதற்கான ஆதாரம் காட்டுவோர்களுக்கு உடனடியாக புகலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

## யாழ் குடாநாட்டில் தேடுதல் நடவடிக்கைகள்!

### புலிகள் யாழில் நடத்திய அஞ்சலிக்கூட்டம்!

யாழ் குடாநாட்டில் திடீர் சோதனை நடவடிக்கைகளை படையினர் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

கடந்த 18ம் திகதி கொக்குவில் பொற்பதியிலும், 19ம் திகதி ஈச்சமோட்டையிலும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாவற்குழி, தச்சன் தோப்பு, கோயில் கண்டி, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவேலி ஆகிய பகுதிகளில் தேடுதல் நடத்தப்பட்டதுடன் நூறுபேர்வரை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களில் பெண்களும் அடங்குவர்.

பொதுமக்கள் பலியாகும் சம்பவங்களும் நடந்துவருகின்றன. சமீபத்தில் தென்மராட்சிப் பகுதியில் மட்டும் ஆறுபொதுமக்கள் துப்பாக்கிச் சூட்டில் பலியானார்கள். புலிகளோடு நடைபெற்ற மோதலின்போது இருதரப்புக்கும் இடையில் அவர்கள் சிக்கிக், கொண்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட மோதல் நடைபெற்றது அதிகாலை 1.20 மணிக்கு என்பதால் பொதுமக்கள் எப்படி இடையில் சிக்கிக்கொண்டார்கள் என்று தெரியவில்லை.

யாழ் பல்கலைக்கழகம் அமைந்துள்ள திருநெல்வேலிப் பகுதியும் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களும், அப்பகுதியைச் சேர்ந்த மக்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை யாழ் குடாநாட்டில் படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வலிகாமத்தில் உடுவில் என்னும் இடத்தில் புலிகள் இயக்கத்தினரால் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. மானிப்பாயிலும், கட்டுடையிலும் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மோதல்களில் பலியான ஒன்பது புலிகளின் நினைவாகவே அஞ்சலிக்கூட்டம் நடத்தப்பட்டது.

## பாண் விலை மேலும் உயரும்?

பொது ஜன முன்னணி பதவி ஏற்றபின் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப் போகிறது. அப்பொழுது கோதுமை மாவுக்கு அளிக்கப்படும் மானியம் முதற்கொண்டு பல மானியங்கள் அகற்றப்பட்டுவிடும் என்று ஆளும் கட்சி பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதன் மூலம் பல பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட்டுவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டின் வறியமக்களின் அன்றாட உணவுத் தேவையை பாண்தான் தீர்த்துவைக்கிறது. கோதுமை மாவுக்கான மானியம் நீக்கப்படும் பட்சத்தில் பாணின் விலை மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

## காணி அதிகாரி சுட்டுக்கொலை

### தமிழ் கட்சி மீது குற்றச்சாட்டு!

(சர்மா)

திருக்கோணமலையில் காணி அதிகாரியாகக் கடமையாற்றியவர் பீரிஸ். இவர் கடந்த 17.09.96 அன்று சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

திருமலை அரச அதிபருக்கு நெருக்கமானவர் என்று கருதப்படும் பீரிஸ் திருமலையில் உள்ள தமிழ் மக்களது அதிருப்திகளுக்கு உள்ளாகியிருந்தார்.

சமீபத்தில் திருமலை லிங்கநகரில் உள்ள தமிழ் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றுவதிலும் பீரிஸ் முன்னின்றதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கடந்த அவசரகாலசட்ட விவாதத்தில் உரையாற்றும்போது பீரிஸின் நடவடிக்கைகளைக் கண்டித்திருந்தார்.

லிங்கநகரில் உள்ள மக்களுக்கு ஈ.பி.டி.பி. உதவிவருவதுடன், அவர்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சிகளை தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதியிடமும் கோரியிருந்தது.

இந்நிலையில் காணி அதிகாரி பீரிஸ் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இதனையடுத்து தென்னிலங்கையில் உள்ள ஒன்பது சிங்கள அமைப்புக்கள் இணைந்து ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டிருந்தன. காணி அதிகாரி பீரிஸ் கொலைக்கு தமிழ் கட்சி ஒன்றே காரணம் என்றும், அரசாங்கம் தமிழ் கட்சிகளின் ஆயுதங்களை திரும்பப் பெறவேண்டும் என்றும் அந்த அமைப்புக்கள் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தன. திருமலையில் காணிகளை அபகரித்து தமிழ் குடியேற்றங்கள் நடைபெறுவதை தடுத்து வந்தவர் பீரிஸ் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## துணுக்காயில் புலிகளின் சிறையில் 800 பேர்!

புலிகள் இயக்கத்தினரால் வடபகுதியில் கைதுசெய்யப்பட்ட 800 பேர் வரை துணுக்காயில் உள்ள முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் துணுக்காயில் உள்ள நெற்சந்தைப்படுத்தும் கட்டிடமே புலிகள் இயக்கத்தினரின் சிறைமுகாமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டவர்களும் இருக்கிறார்கள். ஏனைய இயக்க ஆதரவாளர்கள், அரசாங்கத்துக்குச் சார்பானவர்கள், படையினருக்கு தகவல் கொடுக்கும் உளவாளிகள் போன்ற சந்தேகங்களின்பேரில் கைது செய்யப்பட்டவர்களே அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டிலும், துணுக்காய் முகாமிலும் மொத்தமாக நாலாயிரம் பேர்வரை தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று முன்னர் கூறப்பட்டது. யாழ் குடாநாட்டில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் கதிபற்றி அறியமுடியவில்லை. 800 பேர் மட்டுமே தற்போது துணுக்காய் முகாமில் இருப்பதாக தெரிவிக்கப்படுவதால் மீதிப்பேர் எங்கு வைக்கப் பட்டுள்ளனர் என்ற விபரங்களைத் திரட்டுவதில் யாழ் பல்கலைக்கழக மனித உரிமைக்கான ஆசிரியர்கள் அமைப்பு ஈடுபட்டுள்ளது.

இதேவேளை துணுக்காய் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிலரை சமீபத்தில் புலிகள் இயக்கத்தினர் விடுதலை செய்துள்ளனர்.

## வன்னியில் கொள்ளை நோய் அபாயம்!

### உயிரழிவுகள் பெருமளவில் ஏற்படலாம்!

வன்னிப் பிரதேசத்தில் பருவமழை பெய்யத் தொடங்கியதும் பாரதூரமான தொற்றுநோய்கள் பரவத் தொடங்கும் என்று ஐ.நா. அகதிகளுக்கான தூதரக (UNHCR) அதிகாரி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

வன்னியில் ஏற்கனவே குடியிருந்த மக்களுடன் அகதிகளாகக் குடிபெயர்ந்த மக்களும் வகை தொகையின்றி அதிகரித்துள்ளனர். இவர்களுக்கு இதுவரை சுத்தமான குடிநீர் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. ஒரு கிணற்றில் நூற்றுக்கணக்கானோர் நீர் எடுத்துப் பயன்படுத்தும் காட்சியைக் காணமுடிந்தது.

பருவமழை பெய்யத் தொடங்கியதும் தண்ணீர்ப்பிரச்சனை தீர்ந்துவிடும் என்று பலரும் நம்பினர், ஆனால் மழை பெய்யத் தொடங்கியதும் அப்பிரதேசத்தில் பலமாதங்களாகத் தேங்கிக்கிடந்த அழுக்குகள், மழை நீருடன் கிணறு, குளம் போன்றவற்றில் போய்ச் சேர்ந்துவிடும். இதன் காரணமாக தொற்று நோய்கள்தான் மிக வேகமாகப் பரவத் தொடங்கும்.

இவ்வாறு ஐ.நா. அகதிகளுக்கான தூதரகத்தின் நீர் மற்றும் சுகாதாரப் பிரிவுக்குப் பொறுபதிகாரியான ஜோன் ஃபிளெமிங் கூறினார். நீரைச் சுத்திகரிப்பதற்கு உதவும் குளோரின் உப்பும் வன்னிப் பகுதியில் கிடைப்பதில்லை என்றார். உரிய நடவடிக்கையை விரைவாக எடுக்கவில்லையானால், மக்கள் பெருவாரியாக அழிவதைத் தடுக்க முடியாது, என்றும் எச்சரிக்கிறார்.

## தொலைக்காட்சியில் ஜனாதிபதிக்கு இருட்டடிப்பு!

### படம்பிடிக்கச்சொன்னார் ஆறுமுகம் தொண்டமான்

நடந்து முடிந்த சிங்கர் கிண்ண கிரிக்கெட் போட்டி இறுதி நாளன்று, போட்டிகளை தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்புவதற்கான ஏகபோக உரிமை பெற்றிருந்த ரி.என்.எல். நிறுவனம் நடந்து கொண்ட முறையானது அரசியல் வட்டாரங்களில் வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பியிருக்கிறது.

கடந்த வாரம் நடைபெற்ற ஆளும் கட்சி பாராளுமன்றக் குழுக்கூட்டத்திலும் இது தொடர்பாக காரசாரமான விவாதம் நடைபெற்றுள்ளது.

போட்டியின் முடிவில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, விளையாட்டு மைதானத்துக்கு வந்திருக்கிறார். ஜனாதிபதியின் விஜயம் பற்றி அந்தரங்கமாகவே இருந்திருக்கிறது. ஆனால் அரச கூட்டுத்தாபனமான ரூபவாஹினி ஊழியர்களுக்கு ஜனாதிபதி விஜயம் தெரியவந்தது. ரூபவாஹினி படப்பிடிப்புக்குழு ஒன்று மைதானத்தை நோக்கிச் சென்றுள்ளது. ஆனால் அவர்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டது.

ஜனாதிபதி இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டதை- போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படாமல், மிகக் குறுகிய நறுக்கொன்றில் மட்டுமே ரி.என்.எல். தொலைக் காட்சியில் இடம்பெறவைத்துள்ளனர். "நாட்டுக்கே பெருமை தரும் வண்ணம் சாதனை படைத்த விரர்களைக் கௌரவிக்கவே நான் அங்கு சென்றிருந்தேன். என்னைப் படம் பிடிக்க வேண்டும் என்று ரி.என்.எல். ஊழியர்கள் கருதியிருக்கவில்லைப்போலும். மைதானத்தில் நின்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகம் தொண்டமான்தான் படப்பிடிப்பாளரை என் பக்கம் திருப்பி படம்பிடிக்கச் செய்ததாக அறிகிறேன்." என்று பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## வாகரை மக்களுக்கு பஸ்சேவை

### தொடரும் கடத்தலும்–விடுவிப்பும்!

(ஏறாவூர் நிருபர்)

படையினரின் கைக்குள் இல்லாத மட்டக்களப்பு- வாகரைப் பகுதி மக்களுக்குப் பால்வார்த்த செய்தியாகப் பஸ்சேவை நடத்தப் படைத்தரப்பு அனுமதி வழங்கியிருக்கிறது.

இந்த அனுமதியின் பிரகாரம் சமீபத்தில் வாழைச்சேனை டிப்போவிலிருந்து கதிரவெளிக்கு ஒரு பஸ் சேவை தினமும் நடத்தப்படுகிறது. சகல வகையாலும் பின்தங்கியுள்ள வாகரைப் பகுதி மக்களின் குறையை நீக்கும் ஒரு முன்னேற்றச் செயற்பாடு இதுவென்று கருதப்படுகிறது.

எனினும் வாகரைப் பகுதிக்குச் செல்லும் உசன் ஏற்றம் எனும் கடைசி இராணுவச் சோதனை முகாமில் பச்சிளங்குழந்தைகளைச் சுமந்து வரும் தாய்மாரும் பஸ்ஸிலிருந்து இறங்கி சோதனைக்காக முகாமைக் கடந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தை நடந்து முடிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது என்று உதவி நிறுவனமொன்றின் அதிகாரியொருவர் வேதனைப்பட்டார். எனினும் இதுவரை காலமும் 15 மைல் தூரத்தைக் கால்நடையாகவே நடந்து முடித்த மக்களுக்கு இது சாதாரண துன்பச் "சோதனை" தான் என்று அவர் சற்று ஆறுதல் பட்டுக்கொள்கிறார்.

இது ஒரு புறமிருக்க, சமீபத்தில் புலிகள் கடத்திச் சென்ற நீர்ப்பாசன இலாகாவிற்குச் சொந்தமான பிக்-அப் வாகனத்தையும், தேவாலய பிதாக்களுக்குச் சொந்தமான வேன் ஒன்றையும், மோட்டார் சைக்கிளையும் புலிகள் வாகரையில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனிடையே ஏறாவூர் வாவியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த முஸ்லிம் மீனவர்களின் 4 தோணிகளையும் வலைகளையும் புலிகள் பறித்துச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்தமாதம் இதே பகுதியில் புலிகள் தோணி, வலைகளுடன் 5 மீனவர்களைக் கடத்தி தோணி வலை தவிர ஆட்களை மாத்திரம் விடுவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதிகளில் புலிகள் தமது போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் விதமாக மேலும் வாகனக் கடத்தல்களில் ஆர்வம் காட்டலாம் என்று பேசப்படுகிறது.

## பத்தாயிரம் ஏக்கர் காணி பயன்படாத நிலையில்!

### பயிர்ச் செய்கைக்குப் புலிகள் பச்சைக் கொடி!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு- வாகனேரி பெரிய நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் வரும் 18 கண்டங்களுக்குரிய சுமார் 10,000 ஏக்கர் நெற்செய்கைக் காணி கடந்த 5 வருடங்களாகச் செய்கை பண்ணப்படாமலுள்ளது.

1990 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வன்முறைப் படுகொலைகளின் பின்னர் முஸ்லிம் விவசாயிகள் தமது காணி அமைந்துள்ள பகுதிகளுக்குச் சென்று செய்கையில் ஈடுபடாததே இந்நிலைக்குக் காரணமாகும்.

சமீபத்தில் வாழைச்சேனை அந்நூர் மகாவித்தியாலயத்தில் 1996ஆம் 1997ஆம் ஆண்டுக்கான பெரும்போகச் செய்கைக் கூட்டம் இடம் பெற்றது. அரசாங்க அதிபர், கமநல மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள், வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலர்கள், பாராளுமன்ற உறுப்பினர், மற்றும் பிரதேச பாதுகாப்புப் படை அதிகாரி, வாகனேரி நீர்ப்பாசனப் பிரிவு விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், விவசாயிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் எடுத்துக் கூறப்பட்டன.

போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரதும் கைகளுக்குள் உள்ள இறுக்கமான பகுதிகளுக்குச் சென்று தொழில் செய்து தாம் வாழவேண்டியிருப்பதால் தமக்கு ஆதரவு காட்டுமாறும் சந்தேகக் கண் கொண்டு பார்த்துத் தமக்குத் தொல்லை தரவேண்டாமென்றும் விவசாயிகள் கேட்டுக் கொண்டனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்படும் பாதுகாப்புத் துரதிருஷ்ட நிலைமைகளுக்கு தாம் பாதுகாப்பு உத்தரவாதமளிக்க முடியாத சூழ்நிலை உள்ளதை கூட்டத்தில் கலந்து கொண்ட சகல அதிகாரிகளும் நாசூக்காக எடுத்துரைத்தனர்.

இதேவேளை இக்காணிகள் உள்ள இடத்திற்கு வந்து நெற்செய்கையில் ஈடுபட முஸ்லிம் விவசாயிகளுக்குப் புலிகளும் பச்சைக் கொடி காட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# பயிலுனர் ஆசிரியர்களுக்கு எப்போது விமோசனம்?

1992ம் ஆண்டில் நாடெங்கிலும் தொண்டர், ஆரம்பக் கல்வி, கணித/விஞ்ஞான, மௌலவி பயிலுனர் ஆசிரியர்களாக சுமார் 12 ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டார்கள்.

அவர்கள் தங்களுடைய சேவைக் காலத்தில் 04 வருடங்களைப் பூர்த்தி செய்யும்போது எந்தவித பரீட்சைக்கும் உட்படுத்தப்படாமல் இயல்பாகவே நிரந்தரமாக்கப்பட்டு, தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களுக்குரிய சம்பளத்திட்டத்திற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

இவ்வாசிரியர்கள் 1992ம் ஆண்டில் பல்வேறு மாதங்களில் நியமிக்கப்பட்டார்கள். எவ்வாறெனினும் இவர்கள் அனைவரும் இவ்வருடத்தின் இறுதிக்குள் தங்களது சேவைக்காலத்தில் 04 வருடங்களைப் பூர்த்தி செய்து விடுவார்கள். தற்போது 90 சதவீதமான ஆசிரியர்கள் ஆகஸ்ட் மாதத்துடன் 04 வருடங்களைப் பூர்த்தி செய்து விட்டார்கள்.

இது இவ்வாறிருக்க, இவ்வாசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக்காக தேசிய கல்வி நிறுவக தொலைக்கல்வி பயிற்சி நிலையத்தில் 03 வருடங்களைக்கொண்ட பயிற்சி நெறியில் சேர்ந்து தற்போது 04வது வருடத்திலும் பயிற்சியைத் தொடர்ந்து கொண்டு இன்னும் இறுதிப்பரீட்சை எழுதாமல் இருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான் கடந்த யூலை மாதம் நாடெங்கிலுமுள்ள பயிலுனர் ஆசிரியர்கள் கொழும்பில் ஒன்றுகூடி ஊர்வலம் நடத்தி கல்வி அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

அப்போது கல்வி அமைச்சரால், "ஆகஸ்ட் மாதம் முற்பகுதியில் வெளியாகவிருக்கும் தொலைக்கல்விப் பயிற்சி பகுதி 1 பரீட்சை முடிவுகளின்படி சித்தியடையும்- அதே வேளை தங்களது சேவைக்காலத்தில் 03 வருடங்களை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள்" என உறுதி மொழி அளிக்கப்பட்டது.

இதன்படி பரீட்சை முடிவுகள் வெளிவந்து ஒருமாத காலமாகிவிட்டது. இன்றும் கல்வி அலுவலகங்களில் பயிலுனர் ஆசிரியர்களின் நிரந்தரமாக்கல் சம்பந்தமாக எந்தவித நடவடிக்கைகளும் எடுத்ததாகத் தெரியவில்லை.

தங்களுக்கு எப்போ விமோசம் கிடைக்குமென நாடெங்கிலுமுள்ள பயிலுனர் ஆசிரியர்கள் அங்கலாய்க்கின்றனர்.

செயலாளர், பயிலுனர் ஆசிரியர் சங்கம், மட்டக்களப்பு.

# வழமைக்குத் திரும்புவது எப்போ?

## யாழிலிருந்து ஒரு கடிதம்

இடம் பெயர்ந்து சென்ற வலிகாமம் மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு வந்து நான்கு மாதங்கள் முடித்துவிட்டன. படிப்படியாக நிலைமை திருந்தும் என்று எதிர்பார்த்து வாழும் மக்களுக்குப் பல துன்ப நிகழ்ச்சிகளே துலாம்பரமாகத் தெரிகின்றன.

முல்லைத்தீவு யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை யாழ்நகர் சென்று வருவதற்குப் பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. யாழ் நகரில் தட்டா தெருச் சந்தியில் தான் தடை முகாமிருக்கிறது. தட்டா தெருச் சந்திக்கு இப்பாலிருக்கும் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஒரு பகுதியினர் வாழ்கிறார்கள். சுமார் 12 மைல் தூரமுள்ள பொன்னாலை வரை இராணுவம் அரண்களைக் கொண்டிருக்கவில்லை. எனவே இங்கு வாழ் மக்கள் இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் இல்லாததால் யாழ்நகர் போய் வருவது அனுமதிக்கப்படவில்லை.

யாழ்நகரிலேயே திணைக்களங்கள், செயலகம், அரசினர் வைத்தியசாலை, வங்கிகள் இருக்கின்றன. மாணவர், அரச ஊழியர், வங்கியாளர் என "ஜொப் கார்ட்" உள்ளவர்களே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். பொதுமக்கள், வங்கி வாடிக்கையாளர் யாழ்நகர் சென்று தமது தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தடுக்கப்பட்டிருக்கும் போது அரச ஊழியர், வங்கியாளர் செல்ல மட்டும் அனுமதிப்பதில் அர்த்தமென்ன இருக்கிறது?

தட்டாதெருச் சந்திக்கு அப்பால் பொன்னாலைவரை இலட்சக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தமது சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பது கண்டு கவலையடைகிறார்கள். கடுமையான நோயாளர், கற்பிணிப் பெண்கள் கூடச்சுயேச்சையாக வலிகாமத்திலுள்ள ஒரே ஒர அரசினர் வைத்தியசாலைக்குச் செல்ல முடியாதிருக்கின்றது.

நல்லூர்க் கந்தன் 25 நாள் உற்சவ காலத்திலும் பக்தர்கள், ஆலயம் சென்று வழிபடும் உரிமையும் போக்குவரத்துப் பிரச்சினையால் மறுக்கப்பட்டுள்ளது.

மற்றும் கப்பல், விமானமார்க்கமாகக் கொழும்பு செல்லும் பிரயாணமும் பாதிக்கப்பட்டுள்ளது.

தபால் சேவையும் நேர காலத்திற்கு நடைபெறுவதில்லை. ஊரில் இருக்கும் ஓணானை பிடிக்கமாட்டாதவர் அயலூர் சென்று யானையைப் பிடிப்பார்களென்பதில் நம்பிக்கை வைக்க முடியுமா?

வலிகாமம் அரச அதிபர் தான் இங்குள்ள மக்கள் துயர் துடைக்க முன்வர வேண்டும். அவர் எடுத்த நடவடிக்கைகளும் பலன் தரவில்லை என்று பேசப்படுகின்றது. அப்படியானால்....!

ந. சிவபாதம், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

# மன்னார் தீவு நிலவரம்

(மன்னார் நிருபர்)

★ மன்னார்-கற்பிட்டி கடல் பயணம் செய்வோரின் தொகை அதிகரித்துள்ளது. இப்பகுதியில் சேவையிலீடுபடும் படகுகள் அடிக்கடி பழுதடைவதால் பயணிகள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

★ புலனற்றோருக்கான பாடசாலை ஒன்றினை "உயிர்தப்பியோர் உண்டியம்" கிராம அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையுடன் மன்னாரில் ஆரம்பித்துள்ளது.

★ கிராம அதிகாரி தரம் 2ஐச் சேர்ந்த அதிகாரிகளை தரம் 1 இற்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம். குரூஸ் தலைமையில கச்சேரியில் நடை பெற்றது.

★ மன்னாரப் பகுதிக் கடலில் 3 நாட்களுக்கு மீன் பிடிக்க முடியாதவாறு கடல் வலயத்தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதனால் இப்பகுதி மீனவர்கள் பலத்த பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

★ தாராபுரம் பகுதியில் மேற்கொள்ளப் படவுள்ள கிராமிய கருத்திட்ட நடவடிக்கை தொடர்பாக மன்னார் உ.அ.அ. அலுவலகத்திலுள்ள திட்ட அலுவலர் அக்கறையுடன் செயற்படுகிறார்.

★ மன்னாரப் பகுதிக்கான இ.போ.ச. பஸ் கட்டணக் குறைப்பால் சாலையின் வருமானத்தில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது.

★ மன்னார் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் பயன்படும் விதத்தில் "குரு செத" ஆசிரியர் கடன் சேவைத் திட்டத்தினை மன்னார் மக்கள் வங்கிக்கிளை ஆரம்பித்துள்ளதாக வங்கி உத்தியோகத்தர் அருஸ் ஏ.ஹக் நிருபரிடம் தெரிவித்தார்.

★ மன்னார் மூர் வீதி ஜும் ஆப்பள்ளிவாசலில் தற்போது பல அபிவிருத்தி நடவடிக்கைகளை புதிய நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

★ கடந்த 4 மாதங்களாக சீமேந்து உட்பட கட்டிடப்பொருட்கள் எதுவும் கொழும்பிலிருந்து வராததால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கட்டிடப் பொருள் கூட்டுத்தாபன மன்னார் முகாமையாளர் எம்.எஸ்.எம். சாலிஹ் தெரிவித்துள்ளார்.

# கோழி உரிப்பு இல்லை

(அக்குறணை நிருபர்)

அக்குறணை பஸாரில் பெரும் சுகாதாரக் கேடாக இருந்த கோழி இறைச்சிக் கடைகளின் கழிவுகள் விடயம் தற்பொழுது அக்குறணை வர்த்தகர் சங்கத்தின் முயற்சியால் பயனுள்ள ஒரு முடிவெடுக்கப்பட்டு அது அமுல் படுத்தப்பட்டு வருகின்றது.

கோழி- மாட்டிறைச்சிக் கடைகள் கழிவுகளை அருகருகாக உள்ள ஆற்று ஓடையில் கலக்கச் செய்வதால் மக்களுக்குப் பெரும் சுகாதார அசௌகரியத்தை ஏற்படுத்தியிருந்தது. 'முரசி'லும் இது சம்பந்தமாக ஏற்கனவே செய்தி வெளியாகியுள்ளது.

குளிப்பதற்கு மற்றும் குடிப்பதற்குக்கூட சில சமயங்களில் பயன்படும் ஆற்றுநீரை அசுத்தப்படுத்தும் நிலையை இல்லாமலாக்க அக்குறணை வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கோழிக்கடை உரிமையாளர்களை அணுகி ஒரு சுமுகமான முடிவொன்றுக்கு வந்தமை வரவேற்கத்தக்கது.

தற்பொழுது அக்குறணையிலுள்ள எல்லாக் கோழிக்கடைகளில் "கோழி உரித்துக் கொடுக்கப்படமாட்டாது." எனும் வாசக மடங்கிய பலகை சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்பட்டு தொங்க விடப்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

இது நுகர்வோருக்கு சில சங்கடங்களையும் ஏற்படுத்தியுள்ளது தெரிந்தது. முன்பென்றால் கோழியின் விலையோடு ஒரு மூன்று ரூபாக்கள் அதிகமாகக் கொடுத்தால் இஸ்லாமிய முறைப்படி அறுத்து தோலுரித்துக் கொடுத்து விடுவார்கள். இப்பொழுது வீட்டிற்குக் கொண்டு போய் சிரமப்படவேண்டியிருக்கிறதே என்று ஒரு முரசின் வாசகர் தெரிவித்தார்.

மறுபுறத்தில் கோழிக்கடை உரிமையாளரை அணுகியபோது "ஓரிடத்தில் இருந்து ஐம்பது கோழிகள் உரித்து சுத்தப் படுத்தி தரவேண்டும் என்று ஓடர் வந்தது. வியாபாரத்தையும் விடமுடியாதல்லவா? செலவுதான் இருந்தாலும் வாகனம் ஒன்றைக் கூலிக்கமர்த்தி உரிக்கக்கூடிய வேலை செய்யும் ஒருவருடன் கோழியையும் விற்கவேண்டிய நிலை இப்போது" என்று விசனப்பட்டார் அவர்.

வர்த்தக சங்கத்தினரால் இவ்விடயத்தைக் கண்காணிப்பதற்கும் சில நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மிகவும் அவதானமாகவே கண்காணிக்கிறார்கள் என்று மற்றுமொரு வியாபாரி கூறினார். எவ்வாறோ ஊரில் ஒரு சுகாதார முன்னேற்றம் கண்டிருப்பதில் மகிழ்ச்சியே.

# தனிச்சிங்களத்தில் கடிதங்கள்!

## மொழிபுரியாது மாணவர் அவதி!

(கண்டி நிருபர்)

"அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியில் கடந்த ஆண்டு இறுதியில் தமிழில் பயிற்சியை முடித்துவிட்டு வெளியேறிய கண்டி, மாத்தளை, மாவட்ட மாணவியருக்கு ஆசிரியர் நியமனத்திற்காக அழைக்கப்பட்ட நேர் முகப்பரீட்சை கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டதேன்?"

இப்படிக் கேட்கிறார்கள் மாணவியரும் அவர்களது உறவினர்களும்.

1995ம்ஆண்டு இறுதியில் இக்கல்லூரியில் மூன்றாண்டுப் பயிற்சியை முடித்து வெளியேறிய மாவனல்லை, கண்டி, கேகாலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் யுவதிகளுக்கு இவ்வாறு அனுப்பப்பட்ட கடிதங்கள் பலவும் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டன. இது ஒரு புறமிருக்க, கண்டியில் நடைபெற்ற இந்த நேர்முகப் பரீட்சையின் போது, மாணவியரின் கல்வித் தராதர மற்றும் பயிற்சி பற்றிய விபரங்களை எழுத்து மூலம் பெற வேண்டி அவர்களிடம் அங்கு நேரடியாக வழங்கப்பட்ட படிவங்களும் தனிச் சிங்களதிலேயே இருந்தன. அதனால் அவற்றைப் பூரணப் படுத்துவதில் ஏற்பட்ட சிரமங்கள் பற்றி மாணவியர் கவலையும் அதிருப்தியும் தெரிவித்தனர்.

சிங்கள மொழியில் வழங்கப்பட்ட இப்படிவத்தை தமக்குத் தெரிந்த ஆங்கில மொழியில் எழுதி பூரணப்படுத்தி மாணவர் வழங்கியபோதிலும் தமக்கு ஏற்பட்ட ஏமாற்றம் குறித்து பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

# புராதன ஆலயம் புனரமைக்கப்படுமா?

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை மடத்தடி மாரியம்மன் கோவில் புனருத்தாரணத்துக்கெனப் பொதுமக்களால் வழங்கப்பட்ட 40 பக்கட் சிமெந்து தகுந்த பாதுகாப்பின்றிப் பழுதடைந்துபோன சம்பவம் பக்தர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

புராதனப் பெருமைமிக்க இவ்வாலயம் புனரமைக்கப்பட வேண்டும் என்ற அடியார்களின் கோரிக்கைக்கிணங்க, கோயில் நிருவாகியினால் புனருத்தாரண சபையொன்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்டது. ஆரம்ப நாட்களில் சுறுசுறுப்பாக இயங்கி வந்த சபை, காலப் போக்கில் உறங்கத் தொடங்கிவிட்டதால் திருப்பணி வேலைகள் ஸ்தம்பித்துப் போயுள்ளன.

புனருத்தாரணத்துக்கென பொதுமக்களால் பல இலட்சக்கணக்கான ரூபாய் பணமாகவும் பொருட்களாகவும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கோவில் புனருத்தாரணத் தாமதத்துக்குக் காரணம் நிர்வாகமே எனப் பக்தர்கள் குறைபடுகின்றார்கள்.

பாலஸ்தானம் செய்யப்பட்டு நித்திய பூசைகள் நடைபெறும் இவ்வாலயத்தில் மழையில் நனைந்து வெயிலில் உலர்ந்தே பக்தர்கள் அம்மன் தரிசனம் செய்கிறார்கள்.

புனருத்தாரண சபையார் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டுமென்று முரசிடம் தெரிவித்த பக்தர்கள், புனருத்தாரணத்துக்கென சேர்ந்துள்ள நிதியை வங்கியொன்றில் வைப்புச் செய்யாமல் இருப்பதும் கவலைக் குரியது என்று கூறினார்கள்.


றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை
மாணவர்களுக்கு மலிவு விலையில் புத்தகப் பொதி

| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 280.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 280.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P.
உண்டு
தபாற் செலவு
இலவசம்

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770

Bright - 1997 ஆண்டு மாணவர் களுக்கான
ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைமுன்னோடிப் பயிற்சி
Bright ன் தபால் மூலம் கல்வி
புதிய வெற்றிக்கனி 1-10
புதியதோர் அமைப்பு, புதியதோர் உத்வேகம், அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியூடாக புதியதோர் வழிகாட்டல் நூலாக வெளிவரவுள்ளது.
புதிய வெற்றிக்கனியை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெற தொடர்பு கொள்க.
Bright Book Centre (Pvt) Ltd
S-27, First Floor, P.O. Box 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P. 434770

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும்
தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

Bright ன் தபால் மூலம்
கல்வித்திட்டம்
மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத் தரப்படும்
விபரங்களுக்கு கீழ்க்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு
கொள்க.
பெயர் ..............................
விலாசம் ..............................
BRIGHT BOOK
CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL : 434770

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)
அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.
இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.
தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.
வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)
மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.
செப்டம்பர் 19 முதல் 30 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax : 436439 ஒக்டோபர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், ஒக்டோபர் 12, 13, 14 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No:50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.


"மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்
'எல்லாப்புகழும் இறைவனுக்கே'
கர்மகாலபலனைப் பொறுத்து காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப்பிரயாணம், வேறு காரியங்களிலும் தடைகளும் பிரச்சினைகளும், காதலர்கள் ஒன்றுசேரமுடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள், தீவினைகளினால் தீராத உடல்- மனநோய்களும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவன் அருளி முனிவர்கள் கையாண்ட, கைகண்ட மருந்து, மந்திரவசிய யந்திர தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாகவாழ ஆண்-பெண் ஜனராஜவசியங்கள், பாதுகாப்புரட்சைகள் வேறு நன்மையான காரியங்களுக்கு வேண்டிய மாந்திரீகம், வசியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் ஹோமியோபதி, அக்குப்பங்சர், சித்த, ஆயுள்வேத மருத்துவ, மனோதத்துவ விஷேட மாந்திரீக மனநலமருத்துவரான, மஹாசக்தி உபாசகர் "மந்திரயோகி" சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட டாக்டர்- சக்தியானந்தபாபாவிற்கு [(D.H.M-D.Ac) (இலங்கை)-M.E.B.S.(H)-S.M.P (இந்தியா)] உங்களுடையதும் வேறு சம்பந்தப்பட்டவர்களினதும் பெயர்களுடன் தாய் அல்லது தந்தையின் பெயர்களுடன் கோரிக்கைகளையும் எழுதி 12 ரூபா 50 சதமுத்திரைகள் இரண்டு பதிவுத்தபாலில் வைத்தனுப்பி நெய்விக்மருத்துவ ஆலோசனைகளுடன் கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதிவிஷேட ஆகர்ஷண சக்திவாய்ந்த இறைபரிகாரப் பொருட்களை விஷேட பதிவுத்தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். விரும்பிய குருதட்சணை (மணியோடர் அல்லது வேறுமுறைகளில்) YOGI-DR. SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு அனுப்புபவர்களின் விடயங்கள் வழக்கமாக உடன் கவனிக்கப்படுகின்றன. நாடவேண்டிய விலாசம்:-

YOGI. DR. SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY)BATTICALOA (P.O), SRI LANKA.
குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி),
(வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.

விளம்பரப் பகுதி


மலையாள மாந்திரீகம்

நம்பினோர் கெடுவதில்லை என்ற நற்பெயரை 33 வருடமாக தன்னகத்தே கொண்டுள்ள எமது நிறுவனம் என்றென்றும் நற்பெயரை பெற்றுள்ளது. என்னையும் எமது நிறுவனத்தையும் நம்பி பணம் அனுப்பி வைப்போருக்கு அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவே செயல்படுகிறோம். வாடிக்கையாளர்களை கண்ட மாத்திரம், "இதுவே உங்கள் பிரச்சினை" என திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். இதையொட்டியே மக்கள் கூட்டம் குவிந்த வண்ணம் உள்ளது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எந்நேரமானாலும் என்னோடு உரையாட அதிக செலவில் T.O.D. CALL ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டவர் தங்கு தடையின்றி உரையாடலாம்.
தொடர்புகளுக்கு:-
விசேட வெளிநாட்டு தொலைபேசி :-
TEL 00941344831 EXT. FRS
FAX 00941342464
மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
பி.கே.சாமி (J.D.G.A.N.)JP.
பி.கே.சாமி அஸோசியட் பிரைவேட் லிமிட்,
இல.162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் ரோட், கொழும்பு-13.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரேரிப்போர்ட்

# திரளும் புலிகளும், தயாராகும் படைகளும்

நாரதர்

## ஒருங்கிணைப்புக் குழுவால் நெருங்க முடியாத நெருக்கடிகள்!

**வ**டக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை ஜனாதிபதி போட்டிருக்கிறார்.

'வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக்குழு' என்ற பெயரே காலப் பொருத்தமற்றதாக இருக்கிறது.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடக்கு-கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் என்பது ஒரு வரையறைக்கு அப்பால் செல்ல முடியாது.

யுத்தம் நடைபெறுவதால் நாட்டில் எங்குமே அபிவிருத்தி வேலைகளை பாரியளவில் செய்வதற்கு நிதிப் பற்றாக்குறை தடை போட்டிருக்கிறது.

இந்நிலையில் இருக்கின்ற கட்டிடங்கள் கூட தரைமட்டமாகிக் கொண்டிருக்கும் வடக்கு-கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை செய்வதற்கு எப்படி முடியும்?

வடக்கு-கிழக்குக்கு வெளியே இன்று அபிவிருத்திப் பணிகளை செய்வதற்கு நிதி இருந்தால் போதும். ஆனால் வடக்கு-கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை செய்வதற்கு நிதி இருந்தால் மட்டும் போதாது. அதற்கான சூழலும் தேவை.

வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் இன்று உடனடியாக எதிர்நோக்கும் பிரச்சனைகள் அங்கு அபிவிருத்தி இல்லாமையால் ஏற்படும் பிரச்சனைகளல்ல.

யுத்தம் தொடர்வதால், அந்த யுத்தம் காரணமான சூழல்களால் ஏற்படும் பிரச்சினைகள்தான் பாரியளவில் மக்களைப் பாதிக்கின்றன. குறிப்பாக இரண்டு பிரதான நெருக்கடிகள் வடக்கு-கிழக்கு மக்களை அன்றாடம் அவலப்படுத்தி வருகின்றன.

உயிர்வாழ்வதற்கு உத்தரவாதம் இன்மை, வகை தொகையற்ற கைதுகள், போரில் சம்பந்தப்படாத மக்களுக்கும் போரில் ஈடுபடும் தரப்புக்களால் ஏற்படும் பாதிப்புக்கள் என்பவைதான் முக்கியமான பிரச்சனைகளாக உள்ளன.

இரண்டாவதாக, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகளும், பொருளாதாரத் தடைகள் காரணமாக ஏற்பட்டுள்ள அவதிகளும் உடனடிப் பிரச்சனைகளாக இருக்கின்றன.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும் வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் ஓரளவாயினும் மூச்சுவிட்டுக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் அக்கறைகாட்ட விரும்பினால் மேற்கண்ட இரு நெருக்கடிகளையும் எவ்வாறு குறைக்கலாம் என்று ஆராயவேண்டும்.

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைப்புக் குழுவுக்கு மாகாணசபை அதிகாரிகளையே கட்டுப்படுத்தும் அதிகாரம் கிடையாது. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு, அமைச்சர் ஒருவர் தலைவராக இருக்கும் குழு என்ற காரணங்களால் வேண்டுமானால் மாகாணசபை அதிகாரிகள் ஒருங்கிணைப்புக்குழுவின் ஆலோசனைகளைக் கேட்கக்கூடும்.

ஆனால் பிரச்சனை என்னவென்றால் வடக்கு-கிழக்கு மக்கள் இன்று பிரதானமாக எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபை நிர்வாகத்திற்கும் ஒரு தொடர்பும் கிடையாது.

பொலிசார் மற்றும் பாதுகாப்புப் படையினரோடும், அரசாங்கத்தின் முடிவுகளோடும் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளே அவையாகும்.

யுத்தம் மூர்க்கமாக நடைபெறும் வடக்கு-கிழக்கில் இரண்டு ராஜாக்கள் இருக்கிறார்கள்.

ஒன்று, பாதுகாப்புப்படையினர்.

இரண்டு, விடுதலைப் புலிகள்.

வடக்கு-கிழக்கில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிவில் நிர்வாகம் என்பது பாதுகாப்புப்படையினரின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஒன்றாகவே இருக்கிறது.

அரசாங்கத்தின் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் விடுதலைப்புலிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே அங்குள்ள சிவில் நிர்வாகம் இயங்குகிறது.

பொதுமக்களின் போக்குவரத்து மற்றும் நடமாடும் உரிமைகூட பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்ட ஒன்றாகிவிட்டது.

அரசாங்க சிவில் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் படை அதிகாரிகளையோ, அல்லது விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களையோ அனுசரித்தும், கட்டுப்பட்டும்தான் பணியாற்றுகிறார்கள். முடிவுகளை மேற்கொள்கிறார்கள்.

பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு நிலவரம் நன்றாகத் தெரிந்திருக்கிறது. கிழக்கில் அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் செய்யப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கு படையினர் பாதுகாப்பு கொடுத்தால் மட்டும் போதாது. புலிகளும் அனுமதி கொடுத்தால்தான் பணிகள் நடக்கும். செய்யப்பட்ட வேலைகள் நிலைக்கும் என்று தெரிந்து வைத்திருக்கிறார்.

அதனால்தான் அமைச்சராக இருந்தும்கூட புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். கிழக்கில் ஒரு பஸ்விடக்கூட புலிகளின் அனுமதி தேவை என்று அவர் சொல்லியிருக்கிறார்.

ஆக, வடக்கு-கிழக்கில் படையினரும், புலிகளும்தான் ராஜாக்கள். மாகாணசபை நிர்வாகமோ, அல்லது மத்திய அரசின் கீழ் உள்ள சிவில் நிர்வாக நிறுவனங்களோ அந்த ராஜாக்களுக்கு கீழ்ப்பட்ட வெறும் கூஜாக்கள்தான்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள 'வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு' என்பது அந்தக் கூஜாக்களோடு மல்லுக்கட்டும் குழுதான். அதுவும் அதிகாரபூர்வமாக, சட்டரீதியாக அல்ல, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டகுழு என்ற தோரணையின் மூலம் கூஜாக்களை கட்டுப்படுத்த முயலலாம். அவ்வளவுதான்.

வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நிலவரங்கள், சட்டம், ஒழுங்குப் பிரச்சனைகள், சிவில் நிர்வாகம்மீதான படையினரின் கட்டுப்பாடுகள் எதிலும் ஒருங்கிணைப்புக்குழு மூக்கை நுழைக்க முடியாது. மூச்சும் காட்ட முடியாது.

ஈ.பி.டி.பி, புளொட், முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இடைக்கால நிர்வாகம் ஒன்றை முன்னர் கோரியிருந்தன. தற்போதும் ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகள் கோரிவருகின்றன.

மாகாண சபையை கட்டுப்படுத்தும் சட்டபூர்வ அதிகாரம் உட்பட, சட்டம், ஒழுங்கு விடயத்திலும் தலையிடக்கூடிய ஒரு ஏற்பாடாகவே அதனைக் கோருகின்றனர். ஜனாதிபதி விரும்பினால் அவரது விசேஷ அதிகாரத்தின் கீழ் அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த முடியும்.

தமிழ் கட்சிகளுக்குள் அந்த விடயத்தில் உடன்பாடில்லை. குறிப்பாக கூட்டணி உடன்படவில்லை. எனவே 'இடைக்கால நிர்வாகம்' ஏற்படுத்தப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல. யுத்தத்தை நடத்துவதற்கும், அந்த யுத்த வெற்றி மூலம் தெற்கில் தனது இமேஜை உயர்த்தவும் அரசாங்கம் படைகளையே சார்ந்து இருக்கிறது.

தற்காலிக ஏற்பாடாகவேனும் வடக்கு-கிழக்கில் ஒரு அதிகாரமுள்ள நிர்வாகத்தை ஏற்படுத்தி, அதற்கும் படையினருக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்த அரசாங்கம் விரும்பாது.

அது மட்டுமல்ல யுத்தத்தில் படைத்தரப்பை சுதந்திரமாக இயங்கவிடும் கொள்கையைத்தான் அரசாங்கம் கடைப்பிடிக்கிறது. படையினரின் நடவடிக்கைகளில் குறுக்கிடும் விதமான ஏற்பாடுகளை செய்ய அரசாங்கமும் விரும்பாது. படைத்தரப்பும் விரும்பாது.

வடக்கு-கிழக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசுகளைக்கூட படைத்தரப்பினரோ, பாதுகாப்பு அமைச்சோ பெரிதாக கருத்தில் கொள்வதில்லை.

அதுமட்டுமல்ல, யாழ்ப்பாணப் பயணிகளுக்கு முதலில் இனவிவகார அமைச்சுத்தான் பயண அனுமதியை வழங்கிவந்தது. அதனைக்கூட படைத்தரப்பு விரும்பவில்லை. நேரடியாகத் தமது கைகளில் எடுத்துக் கொண்டார்கள்.

வேறு எந்தக் குறுக்கீடுகளையும் படைத்தரப்பு விரும்பவில்லை என்பதும், வடக்கு-கிழக்கு விவகாரத்தில் படைத்தரப்பும், பாதுகாப்பு அமைச்சுமே தீர்க்கமான பாத்திரம் வகிப்பதும் தெளிவான விடயம்.

அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டால்கூட படைத்தரப்பினர் சிவில் நிர்வாகத்தில் தலையிடுவதையோ, படையினருக்கும் மக்களுக்கும் இடையிலான பிரச்சனைகளிலோ அதனால் கட்டுப்பாடு செலுத்த முடியாது.

படைத்தரப்பினருக்கும் இடைக்கால நிர்வாகத்திற்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் மத்திய அரசுதான் தலையிட்டு தீர்த்துவைக்க வேண்டும். அந்தக் கட்டத்தில் படையினரின் விருப்பங்களுக்கும், தேவைகளுக்கும் மாறாக அரசாங்கம் நடந்துகொள்ள முடியாமல் போகும். அதனால் 'இடைக்கால நிர்வாகம்' அதிகாரமிருந்தும் அதிகாரமில்லாத ஒரு அமைப்பாகவே மாறும். விளைவு, அரசாங்கத்திற்கும் இடைக்கால நிர்வாகத்துக்கும் இடையே முரண்பாடு தோன்றும். எனவே பொல்லைக் கொடுத்து அடிவாங்க அரசாங்கம் விரும்பாது.

வடக்கு-கிழக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை இருந்தால்கூட இன்றைய நிலையில் அதுவும் கைகள் கட்டப்பட்ட நிலையில்தான் இருந்திருக்கும்.

வடக்கு-கிழக்கில் யுத்தம் மூலமே சமாதானம் என்பது அரசின் கொள்கை. அதனை நிறைவேற்றும் கருவிகள்தான் படையினர். எனவே அந்தக் கருவிகள் பாதிப்படையும் அல்லது முனை மழுங்கச் செய்யும் எந்த ஏற்பாட்டுக்கும் அரசாங்கம் முன்வராது.

இப்போது வடக்கு-கிழக்கில் அரசாங்க அதிபர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ள அதிகாரம் பெயரளவில்தான் இருக்கிறது. அந்தந்த மாவட்டப் பிரிகேடியர்களை மீறி அவர்களால் எதுவும் செய்யமுடியாது.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தில் யார் தீர்க்கமான பாத்திரம் வகிக்கிறார்களோ அவர்கள்தான் அதிகாரமுள்ளவர்கள். சட்டரீதியான அதிகாரமெல்லாம் அதற்குப் பின்னர்தான்.

இந்நிலையில் எவ்வித சட்ட அதிகாரமும் இல்லாத ஒருங்கிணைப்புக்குழு என்ன செய்ய முடியும்?

ஒன்றே ஒன்றுதான் செய்யலாம். மாகாணசபை அதிகாரிகள் சிலரை 'ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு நாங்கள்' என்ற பந்தாவோடு அதிகாரம் பண்ணிக்கொண்டிருக்கலாம்.

அதாவது வடக்கு-கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களையோ, அல்லது அமைச்சர் அஷ்ரப்பின் கருத்துக்களையோ அலட்சியம் செய்யும் மாகாணசபை அதிகாரிகள் யாராவது இருந்தால் அவர்களை கட்டுப்படுத்த இந்த ஒருங்கிணைப்புக் குழுவைப் பயன்படுத்தலாம்.

உதாரணமாக, அமைச்சர் அஷ்ரப்பின் சொந்தத் தொகுதியான கல்முனையில் உள்ள கல்முனைக்குடியில் ஒரு மருந்தகம் இயங்கி வருகிறது. மூன்றரைக் கோடி ரூபாயில் அதனை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டார் அமைச்சர் அஷ்ரப்.

அதற்காக ஒரு கோடி ரூபாயை தனது புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சில் இருந்து ஒதுக்கிக்கொடுத்த அமைச்சர், மீதி இரண்டரைக் கோடி ரூபாயை வடக்கு-கிழக்கு மாகாணசபையில் இருந்து ஒதுக்கிக் கொடுக்குமாறு கோரினார். ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு அமைச்சரின் கோரிக்கையை கருத்தில் கொள்ளவில்லை.

இதுமட்டுமல்ல வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு தான் அனுப்பிய நூற்றுக்கணக்கான கடிதங்களுக்கும் பதிலே வரவில்லை என்றும் அமைச்சர் குறைப்பட்டுக்கொண்டதும் உண்டு.

இவை தொடர்பாக அமைச்சர் அஷ்ரப் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கலாம். தனது கடும் அதிருப்தியையும் தெரிவித்திருக்கலாம்.

ஏற்கனவே ஈ.பி.டி.பி, புளொட் போன்ற கட்சிகள் இடைக்கால நிர்வாகம் கோருகின்றன.

வடக்கு-கிழக்கு புனரமைப்பு வேலைகளுக்கு என்று பெருமளவு நிதியை வெளிநாடுகளில் இருந்து பெறலாம் என்று நினைத்திருந்தது அரசாங்கம்.

அவ்வாறு நிதி கொடுத்தால் அது வடக்கு-கிழக்குக்கு பயன்படுத்தப்படமாட்டாது. வேறு பகுதிகளுக்கு செல்லும் என்று வெளிநாடுகளில் புலிகள் பிரசாரம் செய்தனர்.

அந்தப் பிரசாரம் பயனளித்தது. புனரமைப்பு பணிகளை நேரில் காணாமல் பெருமளவு உதவமுடியாது என்று பலநாடுகள் கைவிரித்துவிட்டன.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகளும் தாமதமடைவதாக வெளிநாட்டு ராஜதந்திர மட்டங்கள் கருதுகின்றன.

எனவே-புதிதாக ஏதாவது ஒரு நடவடிக்கையை மேற்கொண்டாகவேண்டும். அதன் மூலமாக வடக்கு-கிழக்கு நிலவரத்தை மேம்படுத்த அரசாங்கம் அக்கறை காட்டுவதாக வெளியுலகுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற இக்கட்டான நிலையில் இருந்தார் ஜனாதிபதி.

அந்த நேரத்தில் அமைச்சர் அஷ்ரப்பும் அதிருப்தியோடு ஜனாதிபதியிடம் செல்ல, அவரையும் திருப்திப்படுத்துவதோடு, வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சனைகளில் அரசாங்கம் ஒன்றும் பாராமுகமாக இருக்கவில்லை என்று காட்டுவதற்கு ஒரு வாய்ப்பாக ஒருங்கிணைப்புக்குழு நிறுவும் முடிவை செய்துவிட்டார் ஜனாதிபதி சந்திரிக்கா.

ஆக, ஒருங்கிணைப்புக் குழுவால் அதன் தலைவர் அஷ்ரப்புக்கோ, அந்த ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிக்கப்போகிறவர்களையோ விட அதிக நன்மை அரசுக்குத்தான்.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவைக் காட்டி, அதன் பொறுப்பில் அபிவிருத்திகளை செய்யப் போகிறோம் என்றும் அரசாங்கம் கூறலாம். வெளிநாடுகளில் நிதியுதவியும் கோரலாம்.

அமைச்சர் அஷ்ரப் ஒரு சிறந்த அரசியல்வாதி. நேர்த்தியான நிர்வாகி. சட்ட அதிகாரம் இருக்கிறதோ இல்லையோ ஜனாதிபதிதான் இக்குழுவை நியமித்தார் என்ற ஒரு விடயத்தை வைத்தே அவரால் பல காரியங்களைச் செய்ய முடியும். அதாவது மாகாணசபை அதிகாரிகள் முன்பு போல அலட்சியமாக நடக்காமல் பார்த்துக் கொள்ள முடியும்.

ஆனால் ஒருங்கிணைப்புக்குழு வடக்கு-கிழக்கில் பரந்துபட்ட மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரதான நெருக்கடிகளைத் தீர்க்கக் கூடியதாக அமையாது என்பதுதான் விஷயம். ஏனெனில் அந்த நெருக்கடிகள் மாகாணசபை நிர்வாகத்திற்கு மட்டுமல்ல, ஒருங்கிணைப்புக் குழுவின் வரையறைக்கும் அப்பாற்பட்ட பிரச்சனைகள்.

இதேவேளை அமைச்சர் அஷ்ரப் ஒரு முஸ்லிம் என்பதால்தான் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவராக அவர் இருப்பதை தமிழ் கட்சிகள் விரும்பவில்லை என்று ஒரு பிரசாரம் மெல்ல அவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

தமிழ் கட்சிகள் இப்படியான ஒரு ஏற்பாட்டுக்கு இணங்கிவிட்டு, அமைச்சர் அஷ்ரப்பை தலைவராக நியமித்தவுடன் மறுப்புத் தெரிவித்திருந்தால் அந்த பிரசாரத்தில் உண்மை இருக்கலாம்.

தமிழ் கட்சிகள் எதனோடும் கலந்து பேசாமல் திடீர் என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டுவிட்டு, அதனை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். ஏற்றுக்கொள்ளாவிட்டால் தமிழ்-முஸ்லிம் பிரச்சனை என்று அர்த்தம் என்று கூறுவது, இப்படி ஒரு பிரச்சனை வரவேண்டும் என்றே எதிர்பார்த்து செய்த ஏற்பாடுபோல் ஆகிவிடும்.

●▪▪●

**வ**டக்கு-கிழக்கில் ஒருவாரத்தில் குறைந்தது ஐந்து மோதல் சம்பவங்களாவது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

கிரிக்கெட் போட்டிகளைக்கூட மழை வந்து குழப்பலாம். ஆனால் மோதல்கள் அடாத மழையிலும் விடாது தொடரும். கெரில்லாக்களுக்கு மழை என்றால்தான் சந்தோசம். ஆபத்தான ஆட்டத்தையே அப்போதுதான் ஆரம்பிப்பார்கள்.

சென்ற ஆண்டு யாழ் குடாநாட்டில் மழைக்காலத்தில் படையினர் புலிகளை நோக்கி முன்னேறினார்கள். மழைக்காலத்தில் முகாம்களில் இருந்தால் புலிகள் தேடிவருவார்கள். அதைவிட புலிகளை தாமே தேடிச்சென்றால் பாதிப்பு இருக்காது என்னும் உத்தி படைத்தரப்புக்கு பயன் கொடுத்தது. தவிர கடந்த ஆண்டு மழைச்சீசனும் கடுமையாக இருக்கவில்லை. எதிர்பாக்கப்பட்டளவுக்கு மழை பெய்யாத குறையை ஷெல்மழை தீர்த்துவைத்தது.

மழைக்காலத்திற்கு ஏற்ப 'இடிமுழக்கத் தாக்குதல்' என்றெல்லாம் பெயர் வைத்து படையினர் தாக்குதல் யுத்தம் நடத்தினார்கள்.

இம்முறை மழைக்காலத்தில் யாழ் குடாநாட்டில் படையினரின் முகாம்கள் பரவலாக இருக்கின்றன. அவற்றை பாதுகாக்க வேண்டிய நிலையில் படையினர் உள்ளனர்.

அதாவது கடந்த ஆண்டு மழை சீசனில் யாழ் குடாநாட்டில் தாக்குதல் யுத்தம் நடத்திக்கொண்டிருந்தனர் படையினர். அந்த தாக்குதல் யுத்தம் மூலமாக தாம் நிலை கொண்ட பகுதிகளையும், நிறுவிய முகாம்களையும் பாதுகாக்கும் தற்காப்பு யுத்தக் கட்டத்தில் இம்முறை மழை சீசனை எதிர்கொள்கின்றனர் படையினர்.

தற்காப்புக் கட்டத்தில் படையினர் இருப்பதால் இம்முறை தேடிச்சென்று கெரில்லாத் தாக்குதல்கள் நடத்த தமது அணிகளை பயிற்சி கொடுத்து தயார்செய்து வருகின்றனர் புலிகள்.

அதேவேளை படையினரும் புலிகளின் அணிகள் யாழ் குடாநாட்டில் முழுக்கவனம் செலுத்த முடியாதவாறு வேறு முனைகளில் இருந்து தாக்குதல் யுத்தத்தை ஆரம்பிக்கவே செய்வர். அதற்கான தயாரிப்பிலும் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது.

இருதரப்பும் ஒன்றை ஒன்று முந்திக் கொள்ள தயாராகிவருகின்றன. அதற்கான அறிகுறிகளும் தெரியத் தொடங்கி விட்டன. ○



பயிற்சி முடிந்த புலிகள்

# அதிரடி அப்பாத்துரை



**யா**ழ் செல்வதற்காக விண்ணப்பம் போட்டாராம் ஒருவர். அதேநாளில் கனடா செல்ல விசா விண்ணப்பம் போட்டாராம் அவரின் நண்பர். யாழ் செல்ல விண்ணப்பம் போட்டவர் இப்பவும் கொழும்பில்தான் காத்திருக்கிறார். கனடாவுக்கு விசா கேட்டவர் விசாவும் எடுத்து ரிக்கெற்றும் எடுத்துக்கொண்டு போய்ச் சேர்ந்துவிட்டாராம். யாழ் செல்ல படும்பாட்டை வைத்து ஒரு பயணக் கட்டுரையே எழுதலாம் போல கிடக்கு.

**வ**வுனியா வருவதற்கு வயதுக்கட்டுப்பாடு இருக்குதல்லோ. வந்தாலும் பல கட்டுப்பாடுகள் தொடருமல்லோ. அதையெல்லாம் யோசித்துப் பார்த்துப்போட்டு பாஸ் கேட்டு காவல் காத்த இளைஞர்கள் சிலர் திரும்பிப்போய் ரெண்டு எழுத்தாருடன் சேர்ந்திருக்கினமாம். ரெண்டு எழுத்தாருடன் சேராமல் இருந்து ரெண்டு எழுத்தார் எண்ட சந்தேகப்பட்டியலில் இருப்பதைவிட ரெண்டு எழுத்தாருடன் சேருவது பரவாயில்லை எண்டு நினைக்கினமாம். இப்படி ஒரு நினைப்பு வரும் எண்டு சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு தெரியாமல் இருப்பதுதானுங்கோ விந்தையிலும் விந்தை.

**ஒ**ருங்கிணைப்புக் குழு விடயத்தில் கூட்டான கட்சிக்குள் குழறுபடி நிலைதானாம். அதிகாரமுள்ள சக்தியை சந்தித்தபோது எங்களுக்கு அவ்வளவாகப் பிரச்சினையில்லை, ஏனைய தமிழ் கட்சிகள் எதிர்ப்பதால் தான் யோசிக்கவேண்டிக்கிடக்கு. எதுக்கும் யோசித்துச் சொல்கிறோம் எண்டமாதிரி சொல்லிப்போட்டு வந்தவையாம். அதுதான் சந்திப்பில் பேசப்பட்ட ஏனைய விடயங்களை பத்திரிகைகளுக்கு சொல்லிப்போட்டு ஒருங்கிணைப்புக்குழு விடயத்தைப் பற்றி பேசினதை மூச்சு விடேல்லை. மனித உரிமைகளைப் பற்றி காட்டமாக பேசிவிட்டு வந்தனாங்கள் எண்ட மாதிரி அறிக்கை விட்டுப் போட்டினம்.

**வெ**ற்றிலையை குதப்பிக்கொண்டு முற்றத்திலும், திண்ணையிலும், கோவில் வீதியிலும் குந்தியிருந்து கதைபேசியது அந்தக்காலம். அதுவும் நல்ல கொழுந்து வெற்றிலையாக இருக்கவேணும். தடவிப் பதம் பார்த்துத்தான் வாங்குவது வழக்கம். இப்ப வெற்றிலையும் பவுணும் ஒன்றாகிப் போட்டுது. யாழ்ப்பாணத்தில் ஒரு வெற்றிலை 20 ரூபா. வாயைப் பிளக்காதேங்கோ. வெற்றிலைப் பிரியர்கள் வாடிப்போயிருக்கினமாம்.

**பெ**ரும்பான்மை இனக்கட்சிகளுக்கும் வடக்கு-கிழக்கு கட்சிகளின் வாடை பட்டுப்போச்சு. கல்லால் எறிவதற்கு பதிலாக தங்களுக்குள் கைக்குண்டுகள் எறிந்து விளையாடுகினம். ரெண்டு எழுத்தாரை ஆயுதங்களைக் கீழே போடச்சொல்லிக்கொண்டு இவை தாங்களுமல்லோ ஆயுதங்களைக் கையில் எடுத்துப்போட்டினம். சபாஷ் சரியான போட்டி.

**வ**டக்கு-கிழக்கு மாகாணசபைக்குள் உள்ள தனிக்காட்டு ராஜ அதிகாரிகள் சிலருக்கு ஒருங்கிணைப்புக்குழு அறிவிப்பு வயிற்றில் புளியைக் கரைச்சுப்போட்டுதாம். தங்கள் கைகளையும் கட்டிப்போட்டுவிடுமோ எண்டு கலங்கிப் போயிருக்கினமாம். அந்தக் குழுவுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்குதாம் எண்டு பல இடங்களோடு தொடர்புகொண்டு கரிசனமாக விசாரிக்கினமாம். அந்தக் குழுவுக்கே இன்னமும் உயிர்வரேல்லை, இவை ஏன் புழுவாய்த் துடிக்கினம்? மடியில் கனம், மனதில் பயம் வரும்தானே.

**வ**வுனியாவில் ஒரு வியாபாரி மாட்டியிருக்கிறாராம். அவரது சரித்திரம் கொஞ்சம் சுவையானது. படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில் ஒரு மனைவி. படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் இரண்டு மனைவிகள். அதாவது கிளியர்ட் ஏரியாவில் ஒன்று, அன்கிளியர்ட் ஏரியாவில் இரண்டு. இந்தியப்படை காலத்தில் வவுனியாவுக்கு பிலாக்காய் கொண்டுவந்து விற்பதில் ஆரம்பித்தவர் இப்போது பல இலட்சங்களுக்கு அதிபதி. காரணம், மண்ணெண்ணை மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களை கடத்திச்செல்வதில் அண்ணர் ஒரு நிபுணர். யாரை எப்படி கவனிக்கவேண்டும் என்பதெல்லாம் அத்துப்படி. அந்தப்பக்கம் உள்ளவர்களுக்கும் உதவிகள் தகவல்கள் கொடுத்து தன் காரியத்தை தடை இல்லாமல் நடத்தினாராம். வவுனியாவில் உள்ள இயக்கங்களுக்கும் உதவத் தவறேல்லையாம். இப்ப எப்படியோ மாட்டுப்பட்டுப்போனார். சோகம்தான்.

**த**மிழ் அமைப்புக்கள் மத்தியில் முற்போக்கான தன்மைகள் தெரியுதோ இல்லையோ முப்போக்கு மட்டும் தெளிவாகத் தெரியுது பாருங்கோ. அது என்ன முப்போக்கு? முதல்போக்கு, ரெண்டு எழுத்தாரின் பாதை. இரண்டாவது போக்கு ரெண்டு எழுத்தாருக்கு எதிரான போக்கு. அரச சார்பும் அதில் அடக்கம். அரசின் போக்கும் அதில் அடக்கம். மூன்றாவது போக்கு மேற்கண்ட இரு போக்குக்கள் மத்தியிலும் சுழியோடும் போக்கு. மொத்தம் மூன்று போக்குகள். அதுதான் முப்போக்கு! முப்போக்கில் டேஞ்சரான போக்கு மூன்றாவது போக்குத்தான். அது எல்லார் காதிலும் பூ வைக்கப்பார்க்குது. இதில் ஆனானப்பட்ட பழம்பெரும் சாணக்கிய கூட்டத்தாரும் அடக்கம் என்பது சொல்லித்தான் தெரியவேணுமோ?

இந்தவாரம் ஒரு சித்தர் பாடல். பாடியவர் கொங்கணநாயனார்.

"ஆணும் பெண்ணும்கூடி யானதனாற் பிள்ளை
ஆச்சுதென் றேநீரும் பேசுகின்றீர்.
ஆணும் பெண்ணுங்கூடி யானதல்லோ பேதம்
அற்றொரு வித்தாச்சு வாலைப் பெண்ணே!"



படிப்பகம்

**அரசியல் தொடர்**

**அற்புதன் - எழுதுவது**

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## ஒப்பந்த நகல்

ஜூலை, 27-1987

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் போராளிகள் இயக்கப் பிரதிநிதிகளையும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையும் அழைத்திருந்தனர். புலிகள் இயக்கத்தை மட்டும் அக்கூட்டத்துக்கு அழைக்கவில்லை.

இந்திய வெளியுறவுச் செயலாளர் கே.பி.எஸ்.மேனன், வெளியுறவுத்துறை இணைச்செயலர் குல்தீப் சஹ்தேவ் ஆகியோர் இலங்கை அரசோடு இந்திய அரசு செய்துகொள்ளப்போகும் ஒப்பந்தம் தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் நகல்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன. பிரதிநிதிகள் அனைவரும் ஒப்பந்த நகல்களை ஒருமுறை புரட்டிப் பார்த்துக்கொண்டனர்.

தாங்கள் தங்கியிருக்கும் ஹோட்டலுக்கு சென்றபின்னர் நன்கு வாசித்துக்கொள்ளலாம் என்று கையில் வைத்துக்கொண்டனர்.

தங்கள் கருத்துக்களை கேட்காமல் இரண்டு அரசுகளும் ஒரு ஒப்பந்தத்துக்கு தயாராகிவிட்டன. ஒப்பந்தப் பத்திரமும் தயாராகிவிட்டது என்பது சகல பிரதிநிதிகளுக்குமே அதிர்ச்சியான ஒரு விடயம்தான்.

ஆனாலும் அதனை காட்டமாகத் தெரிவிக்க முடியாத நிலையில் இருந்தனர்.

புலிகளால் தடைசெய்யப்பட்ட நிலையில் வடக்கு-கிழக்கில் ஏனைய இயக்கங்களுக்குத் தளம் கிடையாது. கூட்டணியின் நிலையும் அதுதான்.

ஈரோஸ் இயக்கத்தைப் பொறுத்தவரை புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து அதற்கேற்ப நடந்துகொண்டால்தான் தனது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்ற நிலையில் இருந்தது.

சொந்தக்காலில் நிற்கமுடியாத நிலையில் இந்தியாவின் உதவியும், உறவும் அவசியம் என்ற சூழலில்தான் ஏனைய இயக்கங்கள் இருக்கின்றன என்பதும் இந்திய அரசுக்குத் தெரியும்.

அதனால்தான் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கப்பிரதிநிதிகளையும், கூட்டணியையும் மட்டுமே வெளியுறவுத் துறை அமைச்சகத்துக்கு அழைத்துப் பேசினார்கள்.

இந்த அணுகுமுறையில் ஒரு தந்திரமும் இருந்தது. புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களிடம் பேசும்போது குறிப்பிட்ட ஒப்பந்தத்தை பிரபாகரன் ஏற்றுக்கொண்டு விட்டார் என்று கூறலாம்.

அதேபோல புலிகளிடம் பேசும்போது ஏனைய இயக்கங்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுவிட்டன என்று ஒரு குண்டைத் தூக்கிப்போடலாம்.

இதெல்லாம் அரசியலில் இராஜதந்திரம் என்றே அழைக்கப்படும். ஏமாற்று வேலை என்று கூறப்படுவதில்லை.

## கருத்துச்சொல்லலாம்

தாம் சந்தித்த பிரதிநிதிகளிடம் அவர்களது மனம்கோணாமல் இருப்பதற்காக இந்திய வெளியுறவுச் செயலாளர் பின்வருமாறு கூறினார்:

"இந்த ஒப்பந்த ஷரத்துக்கள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களை எழுத்து மூலம் தெரிவியுங்கள். ஒப்பந்த ஷரத்துக்களில் எவற்றை மாற்ற வேண்டும், வேறு என்ன சேர்க்கப்படவேண்டும் என்று நீங்கள் தெரிவிக்கலாம்!"

ஒப்பந்தம் தயார். இரு அரசுகளுமே கைச்சாத்திட தயாராகிவிட்டன. அதில் இனிமேல் கருத்துச் சொல்ல என்ன இருக்கிறது? கருத்துச் சொல்ல உரிமையுண்டு. ஆனால் அதனைக் கவனத்தில் கொள்ளவோ ஒப்பந்தத்தில் சேர்க்கவோ இனி வழியே இல்லை என்பது பிரதிநிதிகளுக்கும் தெரியாத விடயமல்ல. ஏதோ ஒரு சம்பிரதாயத்துக்கு என்றாலும் கருத்துக்களைக் கேட்டார்களே, அது போதும் எனத் திருப்திப்படும் நிலையில் தான் பிரதிநிதிகள் இருந்தனர்.

தமிழ் அமைப்பு பிரதிநிதிகளிடம் ஒப்பந்தத்துக்கு ஓரளவு எதிர்ப்பு, கொஞ்சமானளவு மாற்றுக் கருத்து இருப்பதையும் இந்தியா விரும்பியது.

ஏனெனில், தாம் செய்யப்போகும் ஒப்பந்தம் தமிழர்களுக்கு முற்று முழுதாக சாதகமானது என்ற அபிப்பிராயமும் ஏற்பட்டுவிடக்கூடாதல்லவா? தமிழ் அமைப்புக்கள் ஓரளவு அதிருப்தி தெரிவிப்பது அத்தகைய அபிப்பிராயம் எழாமல் தடுக்க உதவும் என்று இந்தியா நினைத்திருக்கலாம்.

ஆயினும் ஒப்பந்தத்தை அக்குவேறு, ஆணிவேறாக அலசி தம் கருத்தை தமிழ் அமைப்புக்கள் தெரிவிப்பதையும் இந்தியா விரும்பவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்வரை அதற்கு இடையூறு இல்லாத வகையில் தமிழ் அமைப்புக்களது மாற்றுக் கருத்துக்கள் இருந்தால் போதும். அது தான் இந்தியாவின் இராஜதந்திரம்.

# பிரபாவுக்கு ராஜீவ் காந்தியின் வாக்குறுதிகள்



ராஜீவ், பண்ருட்டி, அன்ரன்பாலசிங்கம், பிரபா- அசோக் ஹோட்டலில்

சந்திப்பு முடிந்து பிரதிநிதிகள் விடைபெறும் முன்னர் என்ன நடந்தது தெரியுமா?

பிரதிநிதிகளிடம் கொடுக்கப்பட்ட ஒப்பந்த பத்திர நகல்களை திருப்பித்தருமாறு கேட்கப்பட்டது. மறுக்கவா முடியும்? ஒப்படைத்தார்கள்.

"ஒப்பந்தம் கைச்சாத்தாகும்வரை ஒப்பந்த ஷரத்துக்கள் அந்தரங்கமாக வைக்கப்படவேண்டும்." என்று நகல்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டதற்கு காரணம் கூறப்பட்டது.

## மகஜர்கள் கையளிப்பு

இயக்கப்பிரதிநிதிகள் ஹோட்டலுக்கு திரும்பினார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், ஈ.என்.டி.எல்.எஃப்., ரெலோ ஆகிய இயக்கப் பிரதிநிதிகள் ஹோட்டலில் கூடிப்பேசினார்கள்.

ஈரோஸ், புலிகள் இயக்கத்திற்கு சார்பானது என்பதால் தங்கள் கலந்துரையாடலுக்கு ஈரோசை அழைக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அழைக்கவில்லை.

கிடைத்திருப்பதை வைத்துக்கொண்டு இந்தியாவின் அனுசரணையோடு தம்மையும் மீண்டும் மறுசீரமைத்துக் கொள்ளவே கூட்டணி விரும்பியது.

புலிகளோ, ஏனைய இயக்கங்களோ கூட்டணி மீண்டும் இலங்கையில் தலையெடுப்பதை விரும்பவில்லை. எனவே இந்தியா நேரடியாகத் தலையிடும் இந்த சந்தர்ப்பத்தை விட்டால் தம்மை இலங்கையில் மீண்டும் தூக்கிநிறுத்த வேறு சந்தர்ப்பம் கிடையாது என்பதுதான் கூட்டணியின் நிலை.

அதுமட்டுமல்லாமல் இந்தியா ஒரு முடிவுக்கு வந்துவிட்ட பின்னர் அதற்கு குறுக்கே நிற்பதைவிட, அனுசரித்துப்போய் இந்தியாவின் நட்பை பாதுகாத்துக் கொள்வதே சரியானது என்றும் அமிர்தலிங்கம் நினைத்தார்.

அதனால் ஒப்பந்தம் தொடர்பான தமது கருத்துக்களை தனியான ஒரு மகஜராக இந்திய அரசிடம் கொடுத்தது கூட்டணி.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப்., புளொட் ஆகிய அமைப்புக்கள் கூட்டாக ஒரு மகஜரைக் கொடுத்தன. அந்த இயக்கங்களும் 'இந்தியா தலையிடும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கையில் காலூன்றிவிடுவோம். முரண்பட்டு நின்றால் இலங்கைக்கு சென்று வடக்கு-கிழக்கில் நிலைகொள்ள வேறு சந்தர்ப்பம் கிடைக்காது. புலிகள் விடமாட்டார்கள்' என்ற நிலையில் தான் இருந்தன.

இந்திய வெளியுறவுச் செயலாளரை சந்தித்தது, ஒப்பந்த நகலை அவசர அவசரமாக படித்தறிந்தது, பின்னர் மகஜர் தயரித்தது, இவையாவும் ஒரே நாளில் நடந்து முடிந்த நிகழ்ச்சிகள்.

## பிரபாவும்-எம்.ஜி.ஆரும்

இதேவேளை புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திலீபன், யோகி ஆகியோர் புதுடில்லி அசோகா ஹோட்டலில் 518ம் இலக்க அறையில் கடும் காவலுடன் தங்கியிருந்தனர்.

வெளியே கரும்பூனைகள் காவல் இருக்க உள்ளே பிரபாகரன் இருப்புக் கொள்ளாத நிலையில் இருந்தார்.

கூட்டணி உட்பட எனைய தமிழ் அமைப்புக்களைப் பற்றி இந்திய அரசு கவலைப்படவில்லை. புலிகள் இயக்கத்தை பொறுத்தவரை அதன் தலைவர் பிரபாகரனின் பிடிவாதம்தான் இந்தியாவுக்கு தலையிடியாக இருந்தது.

பிரபாகரனை சமாதானப்படுத்தி ஒப்பந்தத்துக்கு இணங்கவைப்பதற்கு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் உதவியை நாடியது இந்திய அரசு.

எம்.ஜி.ஆரையும் அழைத்துக்கொண்டு பிரபாகரனது அறைக்கு சென்றார் திக்ஷித்.

ஒப்பந்தத்தை ஏற்றுக்கொளுமாறு எம்.ஜி.ஆர். முன்பாக வலியுறுத்தினார் திக்ஷித்.

# "எனது முதுகில் குத்திவிட்டார்கள். பிரதமர் ராஜீவ் காந்தி ஏமாற்றிவிட்டார்"

**-பிரபாகரன்**

பிரபாகரனோ பிடிகொடுக்காமல் நழுவிக்கொண்டிருந்தார்.

பிரபாகரனுக்கும் திக்ஷித்துக்கும் இடையில் கடும் வாக்குவாதம் நடந்தது.

இருவரையும் தனது கறுப்புக் கண்ணாடி வழியாக கவனித்துக்கொண்டிருந்த எம்.ஜி.ஆர். சொன்னார்: "நான் பிரபாகரனோடு சில நிமிடங்கள் தனியாகப் பேசவேண்டும்!"

ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களை எம்.ஜி.ஆரிடம் தனியாக எடுத்துக் கூறினார் பிரபாகரன்.

எல்லாவற்றையும் கவனமாக செவிமடுத்துக் கேட்டுக்கொண்டார் எம்.ஜி.ஆர். இறுதியாக எம்.ஜி.ஆர். பிரபாகரனிடம் சொன்னது இது:

"நீ என்ன முடிவு செய்கிறாயோ அதனை நான் ஆதரிப்பேன்!" சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டார் எம்.ஜி.ஆர்.

தமிழ்நாட்டில் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான பிரமுகர்கள் பலர் பிரபாகரனோடு தொடர்புகொள்ளவும், அவரது நிலையை அறியவும் முயன்றனர். தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் அனுமதி மறுக்கப்பட்டது.

பிரபாகரனாலும் அசோகா ஹோட்டலில் இருந்து வெளியே தொடர்புகொள்ள முடியவில்லை. 518ம் இலக்க அறைக்கான தொலைபேசித் தொடர்பு தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டிருந்தது.

பிரபாகரன் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி பரவத்தொடங்கியது.

யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கத்தினருக்கும் அந்தச் செய்தி எட்டியது.

## ராஜீவ் சந்திப்பு

ஜூலை 28ம் திகதி.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கப் பிரதிநிதிகளை ராஜீவ் காந்தியின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அனைவரையும் வழக்கமான தனது புன்னகையுடன் வரவேற்றார் ராஜீவ் காந்தி. பிரதிநிதிகளை குல்தீப் சஹ்தேவ் அறிமுகம் செய்து வைத்தார்.

ராஜீவ் காந்தியின் மேசையில் இரண்டு ஃபைல்கள் இருந்தன.

ஒரு ஃபைல் ஒப்பந்த ஷரத்துக்கள் அடங்கியது. இன்னொரு ஃபைலில் ஒப்பந்தம் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட மாற்றுக் கருத்துக்கள் இருந்தன.

மாற்றுக்கருத்துக்கள் அடங்கிய மகஜர்கள் இருந்த ஃபைலைத் திறந்தார் ராஜீவ் காந்தி.

அதில் கூறப்பட்டிருந்த ஆட்சேபனைகளை சுட்டிக்காட்டிய ராஜீவ், "இவற்றை நான் கவனமாகப் பார்த்துக்கொள்வேன்." என்று தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு கிழக்கில் கருத்துக்கணிப்பு நடத்துவது தொடர்பான ஒப்பந்த ஷரத்துத்தான் இயக்கப் பிரதிநிதிகளால் கொடுக்கப்பட்ட மகஜரில் கடும் ஆட்சேபனைக்கு உள்ளாகியிருந்தது.

அந்த விடயத்துக்கு வந்தார் ராஜீவ் காந்தி. அவர் இயக்கப்பிரதிநிதிகளிடம் பின்வருமாறு கூறினார்:

"கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒருபோதும் நடக்கப்போவதில்லை. ஒப்பந்தத்துக்கு சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே அந்த ஷரத்து சேர்க்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஜே.ஆர். இந்த விடயத்தில் எனக்கு உத்தரவாதம் தந்திருக்கிறார். எனவே இதனையிட்டு நீங்கள் கவலைகொள்ளத் தேவையில்லை."

சந்திப்பை முடித்துக்கொண்டு பிரதிநிதிகளோடு கை குலுக்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார் ராஜீவ்காந்தி.

இயக்கப்பிரதிநிதிகளும் ராஜீவுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துவிட்டு விடைபெற்றனர்.

அவர்கள் விடைபெறும்போது ராஜீவ் காந்தி கூறினார், "நான் இப்போது மிஸ்டர் பிரபாகரனை சந்திக்கச் செல்லுகிறேன்."

## பிரபாவோடு ராஜீவ்

ஹோட்டல் அசோக்கில் பிரபாகரனைத் தேடிச் சென்று சந்தித்தார் ராஜீவ். ராஜீவ் காந்தியுடன் எம்.ஜி.ஆரின் பிரதிநிதியான பண்ருட்டி ராமச்சந்திரன், இந்திய மத்திய உளவுத்துறைத் தலைவர் எம்.கே. நாராயணன் ஆகியோர் மட்டுமே உடன் இருந்தனர்.

இந்திய வெளியுறவு அமைச்சை சேர்ந்தவர்களைக்கூட ராஜீவ் அழைத்துச் செல்லவில்லை.

"சிங்கள அரசுகளை நம்பி பலமுறை ஏமாந்துவிட்டோம். தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவது தற்கொலைக்கு ஒப்பானது" என்று ராஜீவ் காந்தியிடம் கூறினார் பிரபாகரன்.

"ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள். இலங்கை அரசு ஒப்பந்தத்துக்கு மாறாக நடந்துகொள்ளாமல் இந்தியா பார்த்துக் கொள்ளும்" என்று பிரபாகரனின் மனதை மாற்றுவதற்கு முயன்றார் ராஜீவ்.

ராஜீவ் ஒரு வழியால் சென்றால் பிரபா மறுவழியால் நழுவிக்கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் ராஜீவ் காந்தி பொறுமை இழந்து சற்றுக் கருமையாகவே வார்த்தைகளைப் பிரயோகித்தார்.

ஒரு கட்டத்தில் பிரபாகரன் கூறினார்: "ஆயுதங்களை ஒப்படைத்தால் பாதுகாப்பு பிரச்சனை இருக்கிறது அதுமட்டுமல்ல இயக்கத்தை நம்பிவந்த ஆயிரக்கணக்கான உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்களைப் பராமரிப்பதும் பிரச்சனையாகி விடும்."

"சொந்தப் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வைத்துக்கொள்ளலாம். இயக்க உறுப்பினர்களைப் பராமரிக்க இந்தியா நிதி உதவி செய்யும். மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும்" என்றார் ராஜீவ் காந்தி.

மாதம் தோறும் இரண்டு இலட்சம் ஸ்டேர்லிங் பவுணை புலிகள் இயக்கத்துக்கு வழங்குவதாக இந்தியா உத்தரவாதம் கொடுத்தது. அதன் நம்நாட்டுப் பெறுமதி அப்போதைய மதிப்பில் 50 இலட்சம்.

"வடக்கு-கிழக்கில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கும் இந்தியா உதவும்.

மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும். அதில் புலிகள் இயக்கத்தினர் தலைமைப் பொறுப்பில் இருக்கலாம். கூட்டணியினருக்கும் இடம் வழங்கவேண்டும்," என்று கேட்டுக் கொண்டார் ராஜீவ்காந்தி.

"ஈரோஸ் இயக்கத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்" என்றார் பிரபாகரன்.


இறுதியில் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை ஆதரிப்பதாக உறுதி கூறும் ஆவணமொன்றில் பிரபாவை கைச்சாத்திடவேண்டும் என்று கேட்டார் ராஜீவ் காந்தி. பிரபாகரன் உடனே உஷாராகிவிட்டார்.

"தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளுக்கு மாறாக எதுவும் நடைபெறாது என்ற நிபந்தனையுடன்தான் கையொப்பமிடுவேன்" என்றார். சம்மதித்தார் ராஜீவ். கையொப்பமிட்டார் பிரபாகரன்.

வேறு எந்தவொரு இயக்கத்திடமும் ஒப்பந்தத்தை ஆதரித்து இந்தியா கையொப்பம் வாங்கவில்லை.

புலிகள் இயக்கத்தினர் பலமான அமைப்பாக இருந்ததும் மட்டும் அதற்கு காரணமல்ல; பிரபாகரன் ஒருபோதும் தமிழீழப் போராட்டத்தை கைவிட்டு வரமாட்டார். புதுடில்லியில் வைத்து ஒப்பந்தத்துக்கு சம்மதித்துவிட்டு, யாழ்ப்பாணம் சென்று மாறாக நடந்துகொண்டுவிடுவார் என்று இந்தியா நினைத்ததும் ஒரு காரணமாகும்.

புலிகள் இயக்கத்துக்கு மாதம்தோறும் 50 இலட்சம் நிதியுதவி கொடுப்பது, புலிகள் இயக்க தலைமைப்பீட பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிப்பது என்று பிரபாவோடு ராஜீவ் ஒப்புக்கொண்டவிடயம் மிக இரகசியமாக வைக்கப்பட்டது.



## பிரபாவின் நிலை

பிரபாகரனிடம் இருந்து ராஜீவ்காந்தி விடைபெறும்போது அதிகாலையாகி விட்டது.

பிரபாகரனை சம்மதிக்க வைத்து விட்ட திருப்தியில் தூக்கம் இல்லாத அறிகுறியே தெரியாதளவுக்கு உற்சாகமாகக் காணப்பட்டார் ராஜீவ் காந்தி.

ஆனால் பிரபாகரனின் மனநிலையோ நேர்மாறானதாக இருந்தது.

நிர்ப்பந்தமும், சூழல் காரணமாகவும் வேறு வழியின்றி விட்டுப்பிடிக்கவே நினைத்தார் பிரபாகரன். இந்தியாவின் போக்கு பிரபாகரனுக்கு பிடிக்கவேயில்லை.

ராஜீவ்-பிரபா சந்திப்பின் பின்னர் பிரபாகரன் தொலைபேசியில் பேச முடிந்தது.

அன்று தி.மு.க.வின் முக்கிய பிரமுகராக இருந்த வை.கோபாலசாமி பிரபாகரனோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

வை.கோபாலசாமியிடம் பிரபாகரனின் என்ன கூறினார்?

அதனை வை.கோபாலசாமியே பின்னர் ஒருமுறை இப்படி நினைவு கூர்ந்தார்: **"அவருடைய குரல் இப்போதும் என் நினைவுகளில் பசுமையாக உள்ளது. பிரபாகரன் என்னிடம் சொன்னார்: "நாங்கள் இந்திய அரசாங்கத்தாலும், பிரதமர் ராஜீவ் காந்தியாலும் ஏமாற்றப் பட்டுவிட்டோம். எனது முதுகில் குத்தப்பட்டுவிட்டது. என்னிடம் சயனைட் குப்பி கழுத்தில் தொங்குகிறது. தற்கொலை செய்துவிடலாமோ என்றுகூட நினைத்தேன். ஆனால் அது என்னால் முடியாது. பல்லாயிரக்கணக்கான என் சகோதர சகோதரிகள் உள்ளனர். அதனால் அம் முடிவை என்னால் எடுக்க முடியவில்லை!"**

இதே நேரம் ராஜீவ்காந்தியை தீர்த்துக் கட்ட ஒரு சதித்திட்டம் கொழும்பில் தீட்டப்பட்டுக்கொண்டிருந்தது.

(தொடர்ந்து வரும்)






www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# 'சாண் ஏற முழஞ்சறுக்கும்' அரசியல் தீர்வு முயற்சிகள்

அலசுவது- இராஜதந்திரி

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவியான கிருஷாந்தி என்பவர் பரீட்சை எழுதிவிட்டு வீடுதிரும்பிய போது காணாமல் போயுள்ளார். இவரைத் தேடிச் சென்ற இவரது பெற்றோர்களுக்கும் என்ன நடந்தது, என்பது பற்றித் தெரியவில்லை.

இது ஒரு சம்பவம்; இதுபோன்று பலசம்பவங்கள் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றன என்று அங்கிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலும் குடாநாட்டில் இடம்பெற்றுவரும் கைதுகள், ஆட்கடத்தல்கள், மிரட்டல்கள் என்பனபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல்கள் மற்றும் கைதாவோர் காணமல் போவது என்பன இலங்கைக்குப் புதிதல்ல.

கடந்த பல வருடங்களாக பிரதேசவேறுபாடின்றி நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர்.

வெளிநாட்டுச் செய்திஸ்தாபனங்கள் ஒவ்வொரு முக்கிய சம்பவங்கள் குறித்தும் செய்தி வெளியிடும்போது, அச்செய்திகளின் அடிக்குறிப்பில் இலங்கையின் வடக்கு-கிழக்கு யுத்தம் இதுவரை 50ஆயிரம் பேரைப் பலியெடுத்துள்ளது எனக் குறிப்பிடுவது வழக்கம்.

யுத்தத்தின் காரணமாகப் பலியானவர்களின் எண்ணிக்கையே 50 ஆயிரம்; ஆனால் காணமல் போனவர்கள், கைது செய்யப்பட்டு எவ்வித தகவல்களும் இன்றி இருப்பவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காதது.

யாழ் குடாநாட்டில் அமைதியை ஏற்படுத்தும் விதத்தில் அங்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக அரசு தெரிவிக்கின்றது.

வடக்கே சிவில் நிர்வாகத்தை மேற்கொள்வது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது போன்ற நடவடிக்கைகளுக்காக பல்வேறு திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்வது கடினமாக இருப்பதுடன், பரந்தளவிலான நிவாரணப்பணிகளும் அசாத்தியமாக இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக யுத்த பூமியாகவே இருந்து வருகின்றது யாழ் குடாநாடு.

அடிப்படை மனித உரிமைகள், தனிமனித சுதந்திரம் என்பவற்றை மட்டுமல்ல ஒரு நேர்த்தியான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையுமே யாழ் குடாநாட்டு மக்கள் இழந்து நிற்கிறார்கள்.

அப்பாவிப் பொதுமக்கள் ஓர் அரசியல் தீர்வுக்காக ஏங்கி நிற்கும் அதேசமயம், தமது அன்றாட வாழ்க்கையின் அவலங்கள் நீங்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால் பனைமரத்திலிருந்து வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே யாழ்ப்பாண மக்களின் நிலை விளங்குகின்றது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு படையினர் யாழ் குடாநாட்டைத் தம்வசப்படுத்தினர். இதனையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்தும் இடம் பெயர்ந்து சென்ற இலட்சக்கணக்கான மக்கள் மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

ஆனால் ஓர் அமைதியான வாழ்க்கை என்பது இம்மக்களைப் பொறுத்தவரை கானல் நீராகவே இருக்கின்றது.

இரு மாதங்களுக்கு முன்னர் யாழ்நகரில் எல்.ரி.ரி.ஈ. தற்கொலைப்படை உறுப்பினர் ஒருவரது குண்டு வெடிப்பையடுத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மயிரிழையில் உயிர்தப்பினார்.

ஆயினும் யாழ்நகர கமாண்டராக இருந்த பிரிகேடியர் ஆனந்த கமங்கொட அக்குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். அவருடன் வேறு பலரும் கொலையுண்டனர்.

இச்சம்பவமே அரசின் வடபகுதிக்கான சிவில் நிர்வாகப் பணிகளுக்கு ஒரு பெரும் சாட்டையடியாக விளங்கியது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அண்மையில் சி என் என் செய்தியாளர் அனித்தா பிரதாபுக்குப் பேட்டியொன்றை வழங்கியிருந்தார்.

அப்பேட்டியில் வடபகுதியில் சிவில் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளவதில் சிக்கல்கள் இருப்பதை ஜனாதிபதி ஒத்துக்கொண்டார்.

யாழ் நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்பையடுத்து குடாநாட்டில் புனரமைப்பு வேலைகள் தாமதமடைந்துள்ளன. அங்கு செல்வதற்கு அதிகாரிகள் தயங்குகின்றனர் எனவும் ஜனாதிபதி தமது பேட்டியின்போது குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அப்பெரும் குண்டு வெடிப்பையடுத்து ஏராளமான தாக்குதல் சம்பவங்கள் குடாநாட்டுக்குள் இடம் பெற்றுள்ளன. சிறிதும், பெரிதுமாக தாக்குதல்கள்



## படையினருக்குப் பக்குவம் தேவை!

நடந்துள்ளன. இதில் படையினரும், பொதுமக்களும் பலியாகியுள்ளனர்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு யாழ் குடாநாட்டை படையினர் தம்வசப்படுத்தியிருக்கலாம். ஆனால் குடாநாட்டின் பெரும் பகுதி பூரணமாகப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை என்பதையே அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எல்.ரி.ரி.ஈ.யினரின் நடமாட்டம் பல்வேறு இடங்களிலும் காணப்படுகின்றது. அவர்கள் பதுங்கியிருந்து தாக்குதல்களை படையினர்மீது நடத்தி வருகின்றனர்.

தமது உறுப்பினர்கள் குடாநாட்டுக்குள் ஊடுருவியிருப்பதாக எல்.ரி.ரி.ஈ. இயக்கம் அறிவித்துமிருக்கின்றது.

இந்நிலையில் படையினர் மிகவும் விழிப்புடனிருக்கவே செய்வர். யாழ்ப்பாணத்தின் புவியியல் சூழ்நிலைக்குப் பரிச்சயமில்லாத படைவீரர்கள், பனை ஓலைகள் சல சலத்தால்கூட வேட்டுக்களைத் தீர்க்கும் நிலையிலேயே இருப்பர்.

அச்சம், சந்தேகம் என்பன படையினர் மத்தியில் ஏராளமாகவே ஏற்பட்டிருக்குமென்றே நம்பமுடியும்.

இதன் காரணமாகவே வடக்கே பொது மக்கள் துகிலுரியப்படாதகுறையாக சோதனையிடப்படுகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கெரில்லாத் தாக்குதல்கள் என்பது எவ்வடிவத்திலும் நிகழலாம்.

அழகிய பெண்ணொருத்தி ஒய்யாரமாக நடந்து செல்வாள். அவளது நடையழகை கண்வெட்டாது இரசித்து நிற்கும் போது தலையின் பிடரிப்பகுதிக்குள் தோட்டா ஒன்று வேறொரு புறத்திலிருந்து உறுமியபடி ஊடுருவும்.

இது கெரில்லாக்களின் தந்திரத்துக்கு ஓர் உதாரணமாகும்.

வியட்நாமில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது:

அமெரிக்கத் துருப்புகள் ஒருதடவை வியட்நாமில் உள்ள தியேட்டர் ஒன்றில் ஹாலிவூட் படமொன்றை ஆழ்ந்து இரசித்துக் கொண்டிருந்தனர்.

தமது நாட்டிலிருந்து பெருந்தொலைவில், வேறுபட்ட சூழ்நிலையில் இருந்து வந்த அமெரிக்கத் துருப்புகளுக்கு அத்திரைப்படக் காட்சிகள் மனதிற்கு இதமளித்தன.

ஆனால் படம் ஓடிக் கொண்டிருந்த போது, தியேட்டருக்குள்ளிருந்த அமெரிக்கப்படையினரின் கால்களில் ஊசிகள் குத்துவது போல் இருந்தது. அத்துடன் தடித்த கேபிள்கள் அவர்களது கால்களுக்குள் அகப்படுவது போன்ற பிரமை ஏற்பட்டது.

இதனையடுத்து, படம் பார்த்துக் கொண்டிருந்த படையினர் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து என்ன? எது?வென்று பார்க்க முனைந்தனர்.

திரைப்படமும் இடைநிறுத்தப்பட்டது; திரை அரங்கினுள் வெளிச்சமும் போடப்பட்டபோது நூற்றுக்கணக்கில் கொடிய புடையன், நாகபாம்புகள் அத்திரையரங்கினுள் ஊர்ந்து திரிந்து அமெரிக்கப்படையினரைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தன.

குய்யோ, முறையோ என்று கத்தியவாறு படம்பார்த்த படையினர் திரை அரங்கிலிருந்து முண்டியடித்து வெளியேறினர்.

பாம்புகளைக் கண்ட படையினர் தலை தெறிக்க ஓடினர். அச்சமயம் பாம்புகளால் கடிபட்ட பலர் விஷமேறி மாண்டனர். வேறு சிலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

திரையரங்கிற்குள் சத்தமில்லாது வியட்கொங் கெரில்லாக்கள் பாம்புகளை விட்ட விடயம் பின்னர் தெரியவந்தது.

எனவே கெரில்லாத் தாக்குதல்கள் என்பவை நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுபவையாகும்.

இத்தகைய தாக்குதல்களை மிகுந்த அவதானத்துடன் இருப்பதன் மூலமே எதிர்கொள்ளமுடியும். இதன்காரணமாக அனைத்தையும் சந்தேகிக்கும் மனநிலை தோன்றுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இருந்தபோதிலும் அப்பாவிகளையும், கெரில்லாக்களையும் பிரித்தறியும் விதத்தில் படையினர் நடந்து கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் க.பொ.த.உயர்தரப் பரீட்சை எழுதுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி கிருஷாந்தி காணாமல் போயுள்ளார். இம்மாணவி படையினரது சோதனைச் சாவடியொன்றில் வைத்தே காணாமல் போனதாகவும், இவரைத் தேடிச் சென்ற இவரது பெற்றோர்களும் பின்னர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

கெரில்லாக்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டிய அதேசமயம், அப்பாவி மக்களையும் பாதுகாக்கவேண்டியது படையினரின் பெரும் பொறுப்பாகும்.


ஆனால் மாணவி கிருஷாந்தியும், அம்மாணவியின் பெற்றோரும் காணாமல் போயுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ள விடயம், வேலியே பயிரை மேய்ந்த ஒரு நடவடிக்கையாகவே இருக்கின்றது.

அப்பாவி மக்களுடனான உறவுகளில் பாரதூரமான விரிசல்கள் ஏற்படுமானால் படையினரால் ஓர் அந்நியமான சூழ்நிலையில் உறுதியாக நிலைகொள்ள முடியாது.

நொந்து, நொடிந்து போயுள்ள மக்களின் உணர்வுகளை மேலும் புண்படுத்தலாகாது.

அரசாங்கம் அரசியல் தீர்வு காணுவது பற்றிப் பேசிவருகின்றது. அத்தீர்வுக்கான சூழ்நிலைகளை களங்கப்படுத்தாமல் பாதுகாக்க வேண்டியது படையினரின் பொறுப்பாகும்.

இல்லையேல் 'சாண் ஏற முழம் சறுக்குவது' போன்றதாகவே இனப்பிரச்சினைத்தீர்வு குறித்த அணுகுமுறைகள் அமையும் எனக் கொள்ளமுடியும்.



# வெள்ளை வேன் விபரீதம்

'வெள்ளை வேன்' பீதி இப்போது யாழ் குடாநாட்டிலும் பரவியிருக்கிறது.

திருக்கோணமலையில் உள்ள தமிழ் மக்களுக்கு 'வெள்ளை வேன்' என்றாலே மரணதூதனைக் கண்டதுபோலத்தான்.

கொழும்பிலும் கடந்த ஆண்டு வெள்ளை வேன் தமிழ் மக்களை பீதிகொள்ளவைத்தது.

கொழும்பில் ஏரிகளிலும், கடலிலும் மிதந்த தமிழ் இளைஞர்கள் 'வெள்ளை வேன்' ஒன்றில் வந்தவர்களால்தான் கைது செய்யப் பட்டனர்.

'வெள்ளை வேன்' என்றால் தனித்து கண்டுபிடிப்பது கஷ்டம். ஏராளமான வெள்ளை வேன்கள் இருப்பதால் குறிப்பிட்ட ஒரு வெள்ளை வேனை மட்டும் தனித்து அடையாளம் காணமுடியாது. அதனால்தான் வெள்ளை வேன் பயன்படுத்தப்படுகிறது.

யாழ் குடாநாட்டிலும் சமீபத்தில் வெள்ளை வேனில் நடமாடும் கோஷ்டியின ரால் ஆட் கடத்தல்கள் நடைபெற்றுள்ளன.

கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் இராணுவமுகாமுக்கு ஓடினார்கள். பொலி ஸில் சென்று முறையிடுமாறு அங்கு கூறப்பட்டது. பொலிஸில் சென்று முறை யிட்டால் கைது செய்தது யார் என்பது தெரியவில்லை என்று பதில் கிடைக்கிறது.

வெள்ளை வேனில் சென்று கைது செய்பவர்கள் நன்றாகத் தமிழ் பேசுகிறார்கள். பொலிஸிலோ, இராணுவத்தினரிடமோ முறை யிடக்கூடாது என்று கைது செய்யப்படுபவரின் வீட்டில் மிரட்டிவிட்டும் செல்கிறார்கள்.

வெள்ளை வேனில் வருபவர்கள் தமிழ் இளைஞர்கள் போலவே இருக்கின்றனர். தமிழில்தான் பேசுகிறார்கள். தாம் தேடிவருப வர்களை பிடித்துக்கொண்டு செல்லும்போது, "இராணுவத்தினரிடமோ, பொலிஸாரிடமோ முறையிடவேண்டாம். முறையிட்டால் நடப் பதே வேறு" என்று மிரட்டிவிட்டுப் போகின்ற னர்.

கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் இராணுவத்தினரிடமோ, பொலிஸாரிடமோ முறையிட்டால் அவர்கள் தமக்குத் தெரியாது என்று கைவிரித்துவிடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தற்போது 'உதயன்' பத்திரிகை மட்டுமே படையினரின் அனுமதியோடு வெளிவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆட் கடத்தல்களோடு ஈ.பி.டி.பி.யை தொடர்பு படுத்தி 'உதயன்' பத்திரிகை செய்தி வெளி யிட்டு இருந்தது.

"படையினரின் அனுமதி இல்லாமல் அச் செய்தி வெளியாகியிருக்க முடியாது. எனவே தமிழ் மக்களிடம் இயக்கங்களுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தும் முயற்சி இது," என்று ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா.

"இவ்வாறான செய்திகள் வெளிவரும் நிலையில் நாம் எப்படி யாழ்ப்பாணம் சென்று அலுவலகம் திறப்பது? எல்லாப் பழியும் எம்மீது போடப்படும்," என்றும் ஜனாதிபதி யிடம் கூறினாராம் டக்ளஸ் தேவானந்தா.

இதற்கிடையே குடாநாட்டில் வெள்ளை வேனில் நடமாடும் குழுவினர் தொடர்பாக சில தகவல்கள் கசிந்திருக்கின்றன.

மட்டக்களப்பில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு பிரபலமானவர் புளொட் மோகன். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த கதையாக மக்களை மிரட்டிப் பழக்கப்பட்ட மோகன், புளொட் தலைவருக்கும் சவால்விட்டதும், அதனால் புளொட்டில் இருந்து மோகன் குழு விலத்தப் பட்டதும் பழைய கதை.

மட்டக்களப்பில் அதிரடிப்படை உதவி யுடன் ஆட்கடத்தல், பணம் பறித்தல், பாலியல் பலாத்காரம் என்று அமோகமாக இருந்தவர் மோகன்.

கொழும்பில் ஏரிகளில் மிதந்த பிணங்கள் விவகாரத்திலும் மோகனின் பெயர் அடி பட்டது. அதன்பின்னர் கொஞ்சக்காலம் தலை மறைவாக இருந்தார்.

அதேமோகன் படையினரால் யாழ்ப் பாணம் அழைத்துச் செல்லப்பட்டார். மோகன் குழுவில் உள்ள தமிழ் இளைஞர்களும் யாழ் சென்றனர். தற்போது 'வெள்ளை வேன்' விபரீதத்திலும் மோகன் குழுவினரின் சம்பந்தம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்கள்தான் இயக்கங்களின் பெயரைக் கூறிக்கொண்டு ஆட்கடத்தல்களில் ஈடுபடுவ தாக சந்தேகிக்கப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் புலிகள் மட்டுமல்ல, ஏனைய தமிழ் அமைப்புக்கள் பிரசன்னமாவதை யும் முதலில் படையினர் விரும்பியிருக்கவில்லை. தமிழ் கட்சிகள் வருவதை யாழ்குடாநாட்டு மக்கள் விரும்பியிருக்கவில்லையென்று அரசாங்க அமைச்சர்கள் சிலரே பேசியிருந்தனர்.

யாழ் குடாநாட்டு மக்கள் படையினர் மீது அதிருப்தி கொள்ளாதிருக்கவும், இயக்கங் கள் மீது வெறுப்புக் கொள்ளவும் 'மோகன் குழுவினர்' பயன்படுத்தப்பட்டிருக்கலாமோ என்று தமிழ் இயக்க வட்டாரங்கள் சந்தேகம் கொண்டுள்ளன.

தற்போது யாழ் குடாநாட்டில் நிலவரம் மாறிவருவதால் தமிழ கட்சிகளை அங்கே செல்லுமாறு அரசாங்கம் கேட்டிருக்கிறது.

ஈபிடிபி, புளொட் அமைப்புக்களிடம் மட்டு மல்ல, சமீபத்தில் ஜனாதிபதியை சந்தித்த தமி ழர் விடுதலைக் கூட்டணியிடமும் யாழ் செல்லு மாறும் அரசியல் தலைமைக்குரிய வெற்றிடத்தை நிரப்புமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

எனினும் தமிழ் கட்சிகள் எதுவும் யாழ் செல்ல விரும்புவதாகத் தெரியவில்லை.

படையினர் மட்டுமே நிலைகொண்டி ருப்பதால் சில சம்பவங்களையிட்டு 'தெரி யாது' என்று அரசு கைவிரிப்பதை யாரும் சுலபமாக நம்பமாட்டார்கள். தவிர படை யினருக்கும் மக்களுக்கும் இடையே நேரடி யான முரண்பாடு வளர்ந்து செல்லும்.

இவற்றைத் தவிர்க்கவே தமிழ் கட்சிகளை இப்போது அழைக்கிறது அரசாங்கம்.

போருக்குள் வாழ்க்கையை நகர்த்தும் யாழ் குடாநாட்டு மக்கள், அரசாங்கத்தின் மீதிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் இழந்துவருகின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ் குடா நாடு இருந்தபோது புலிகள் மீது ஒரு குறிப் பிட்ட அளவான மக்கள் அதிருப்தியோடு இருந்தனர். அந்த அதிருப்திகளும் தற்போது மறைந்துவருகின்றன.

புலிகள் இல்லாத பகுதிகளில் இருப்பதை விட, புலிகளுடன் இருப்பது பரவாயில்லை என்று நினைக்க வைக்குமளவுக்கு நிலமைகள் மாறுவதை அரசாங்கத்தால் தடுக்க முடிய வில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி! — பூலான்தேவி —

தருவது 11 ரசிகன்

என் கையில் இருந்த இரும்புக் கம்பியின் முனை சிவப்பாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. வித்தியா நடுங்கிக்கொண்டே தன் சேலையை களைந்துபோட்டாள்.

சற்றுமுன்னர்வரை அகங்காரக் குரலில் என்னை மிரட்டியவளும், இரும்புக் கம்பியை சூடாக்கிக்கொண்டு கண்களில் குரோதம் தெரிய எனக்கு சூடுபோட வந்தவளும் இவள்தானா? என்று எனக்கே சந்தேகமாக இருந்தது.

பாவடையுடனும், ரவிக்கையுடனும் கண்களில் பீதியுடனும், குளிரில் நடுங்கும் கோழிக்குஞ்சுமாதிரி அவளைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

நாம் அடங்கி அடங்கிப்போனால் கோழைகள், பயந்தாங்கொள்ளிகள்கூட என்னமாய் வீரம் காட்டப்பார்க்கிறார்கள்; எங்கள் தோளில் ஏறப்பார்க்கிறார்கள்.

பத்திரகாளியாக என் கண்களுக்கு தெரிந்த வித்தியா எங்கே? இப்போது பயந்தாங்கொள்ளியாகி வெட வெடவென்று நடுங்கிக்கொண்டிருக்கும் இந்த வித்தியா எங்கே. அப்போதுதான் எனக்குப் புரிந்தது, குலைக்கிற நாய்கள் கடிக்காது. நாம் ஓடும்வரைதான் துரத்தும்;



பூலான்

நின்று கல்லை எடுத்துக்கொண்டோமானால் எந்த நாயும் எதிர்நிற்காது.

"கழட்டடி ரவிக்கையை!" என்றேன். முதன் முதலாக நானும் அதிகாரக்குரலில் ஒருத்தியை மிரட்ட முடிகிறது. என் கட்டளைக்குப் பணிந்து ஒருத்தி நடந்து கொள்கிறாள். எனக்கு இனம்புரியாத ஒரு இன்பம் ஏற்பட்டது. குரூர திருப்தி என்றுகூடச் சொல்லலாம்.

"பூ... பூலான்.. என்.. என்னை விட்டுவிடு. வேண்டாம். நான் இ..இனி உன்னை..."

"சொன்னதைச் செய்யடி நாயே! எனக்கு சாப்பாடு தேவையென்றால் நாய்க்குப் போட்டதில் பங்கு எடுத்துக் கொள்ளச் சொன்னாயல்லவா? இப்போது நீதானடி நாய். நாய் வீட்டு நாய்! என்னடி பார்வை?"

இரும்புக் கம்பியை அவள் நெஞ்சுக்கு நேரே நீட்டினேன். "ஐயோ!" மிரண்டு சின்னதாய் கூவினாள்.

"படவேயில்லை. இந்தப் பதறு பதறுகிறாய்! பட்டால் எப்படி இருக்கும்? ஐயோ குய்யோ என்றெல்லாம் கூவினாயோ தொலைத்துவிடுவேன் தொலைத்து. இதை எங்கே செருகுவேன் தெரியுமா? அங்கே?"

நான் சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்த்ததும் வித்தியாவின்முகம் செத்து விட்டது. சட்டென்று விம்மி விம்மி அழத் தொடங்கினாள். ரவிக்கையை கழற்றினாள்.

புத்திலால் இவளிடம் மயங்கிக் கிடப்பதிலும் விஷயம் இல்லாமல் இல்லை என்று நினைத்துக்கொண்டேன்.

அவளை மேலும் அழவைத்துப் பார்க்கவேண்டும்; துடிதுடிக்க வைக்க வேண்டும் என்று எனக்கு ஆசை ஆசையாக இருந்தது.

என்னிடம் திரிக்கத் தந்தாள் அல்லவா கோதுமை. அது மீதியிருந்தது. அதனை இவளைவிட்டே திரிக்கச் சொன்னால் என்ன? அதுதான் சரி.

"போடி?"

வெற்று மார்புகளை தன் கைகளால் பொத்தி மூடிக் கொண்டே "எங்..எங்கே?" என்றாள்.

"ம்... ஊருக்குள் உன்னை இப்படியே ஓடவைக்கப்போகிறேன்" என்று சொல்லி, அவள் முகம் போன போக்கை இரசித்தேன்.

இதுவரை, பிறந்ததில் இருந்து இதுவரை நான்தான் பயந்திருக்கிறேன். இப்போது என்முன்னால் ஒருத்தி பயந்து பயந்து சாவதைக் காணச் சந்தோசமாக இருந்தது.

உரலில் கோதுமை இருந்தது. வித்தியாவை அதனை இடித்துத் திரிக்கச் சொல்லி உத்தரவிட்டேன்.

மறுபேச்சே இல்லாமல் இடிக்கத் தொடங்கினாள். மார்புகள் குலுங்க, அவள் இடிப்பது வேடிக்கையாக இருந்தது.

"இப்போது நான் மகாராணி, நீ வேலைக்காரி." சொல்லிவிட்டு சிரித்தேன். விழுந்து விழுந்து சிரித்தேன். கண்களில் கண்ணீர் வரும்வரை சிரித்தேன்.

புத்திலாலின் அம்மா வீட்டில் இல்லை. வெளியே எங்கோ போயிருந்தாள். புத்திலால் வரும் நேரமாகியது. அதனால் வித்தியாவை "போதும் போ" என்றேன். அரைக்கிலோ கோதுமைகூட திரித்திருக்கமாட்டாள்.

"பத்துக்கிலோ கோதுமையை காலையில் தந்துவிட்டு மாலைக்குள் திரித்துவைக்கச் சொன்னாயல்லவா? உன்னால் இத்தனை நேரமும் அரைக்கிலோ கோதுமைகூட திரிக்க முடியவில்லையல்லவா? இனிமேல் யாரையும் முடியாத வேலையைச் செய்யச் சொல்லாதே. மிரட்டாதே!"

வித்தியா பதில் சொல்லாமல் கண்ணீரோடு பார்த்தாள். "என்னடி வாய்க்குள் என்ன கொழுக்கட்டையா வைத்திருக்கிறாய்? எங்கே ஆ காட்டு. காட்டடி!"

வாயை ஆவென்று திறந்துகாட்டினாள். எனக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. வித்தியா வியர்வையில் தெப்பலாக நனைந்திருந்தாள். இதுவரை உடல் மாய வேலையே செய்திருக்கமாட்டாள்.

விம்மி விம்மி ரவிக்கையைப் போட்டுக் கொண்டு சேலையைக் கட்டிக்கொண்டாள்

"இங்கே பாரடி! புத்திலால் வந்ததும் கண்ணைக் கசக்கி நாடகமாடினாய் என்று வை. இரவோடு இரவாக உன் கழுத்தைத் திருகியே கொன்றுவிடுவேன். கைகளைப்பார். வேலை செய்து முரடான கைகள். ஒரே அமுக்கு. நாக்கை தொங்கப்போட்டுச் செத்துப்போவாய்!"

வித்தியா மிரண்டுபோனாள். நான் செய்தாலும் செய்வேன் என்று நினைத்திருப்பாள். மௌனமாகவே இரவுக்கு ரொட்டி செய்யத் தொடங்கினாள். இடைக்கிடையே வாய்க்குள் விசும்பிக் கொண்டாள்.

பதிலுக்குப் பதில்தான் நீதி கிடைக்கச் செய்யும் என்று முதன் முதலில் நான் அனுபவப்பட்டது அன்றுதான். அதற்காக வித்தியாவுக்கு நன்றி சொல்லவேண்டும்.

என் துணிச்சலையும் வித்தியாவை ரொட்டிபோல புரட்டிப் புரட்டி எடுத்ததையும் யாரிடமாவது சொல்லி மகிழவேண்டும் போல இருந்தது. யாரிடம் சொல்வது? எனக்குத்தான் யாரும் இல்லையே!

புத்திலால் வீடு வந்தபோது இருட்டாகிவிட்டது. வித்தியா அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவாளோ என்று சந்தேகப்பட்டேன். அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

இரவு அமைதியாகவே கழிந்தது. ஒரு ஆச்சரியமும் நடந்தது. ஒரு தட்டில் இரண்டு ரொட்டிகளை போட்டுவந்து என்முன்பாக வைத்துவிட்டுப் போனாள் வித்தியா.

அப்போதே, அந்த நொடியே மனதில் ஆழமாக குறித்துக்கொண்டேன்:

**'துணிந்தால் துக்கமில்லை!'**

**'பயந்தால் வாழ்க்கையில்லை!'**

காலையில் எழுந்ததும் புத்திலால் என்னிடம் வந்தான்.

"இன்று மாலை புறப்படவேண்டும். நான் வெளியே போய்விட்டுவருவேன். துணிமணிகளை எடுத்துக்கொண்டு தயாராக இரு!"

"எங்கே போக?"

"உன் வீட்டுக்கு!" மடையை உடைத்துக் கொண்டு வெள்ளம் வருமே, அதேமாதிரி என் மனதுக்குள் குபீர் என்று சந்தோசம் பெருக்கெடுத்தது. அதனை வெளிக்காட்டாமல்;

"ஏன்?" என்றேன்.

"வித்தியாவுக்கு வேலைக்காரி தேவையில்லையாம். ஏன் போகமாட்டாயோ?"

"போகிறேன்!" என்றேன் உறுதியாக. போகமாட்டேன் என்று அடம்பிடிப்பேன் என்று நினைத்தானாக்கும். நான் சம்மதித்து விட்டதால் தொல்லை தீர்ந்தது என்பதுபோல பெருமூச்சுவிட்டபடி சென்றுவிட்டான்.

மாலையில் புறப்பட்டு ஜமுனா நதியைக் கடந்து ஊர்போய் சேர்ந்தோம். புத்திலால் என்னைக் கரையில் விட்டுவிட்டு திரும்பி விட்டான். நான் தனியாகவே வீடுபோய்ச் சேர்ந்தேன்.

"தனியாகவா வந்தாய்?" அம்மாதான் கேட்டாள். வித்தியாவும் புத்திலாலும் என்னை ஒரு வேலைக்காரியாக கொடுமைப்படுத்தியதைச் சொன்னேன். அம்மா அழுதே விட்டாள். அப்பா மௌனமாக இருந்து நான் சொன்னதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டார்.

"இனிமேல் உன்னை அங்கே அனுப்பவே மாட்டோமடி கண்ணு. என் ராசாத்தி. எப்படி உருக்குலைந்து போனாய்?" அம்மா தலையைத் தடவினாள். அம்மாமீது எனக்கு முன்பிருந்த கோபமெல்லாம் பஞ்சாகப் பறந்துபோனது. தாய்க்கோழியின் சிறகுகளுக்குள் கதகதப்பாக இருக்கும் குஞ்சுபோல சுகமாய் உணர்ந்தேன்.

நான் வித்தியாவை பதிலுக்குப் பதில் ஆட்டிப்படைத்ததை மட்டும் யாரிடமும் சொல்லவேயில்லை. சொன்னால் நான்தான் திமிராக நடந்துகொண்டதாக அம்மாகூட முடிவு செய்துவிடுவாள். அப்பாவோ மன்னிப்புக் கேட்கக் கிளம்பிவிடுவார்.

அடிபட்டவர்களுக்குத்தான் அதன் வலி தெரியும். திருப்பிக் கொடுக்கும்போது உள்ள சுகமும், திருப்தியும்கூட அடிபட்டவர்களுக்குத்தான் புரியும்.

நான் எங்கள் காணியில் கடுமையாக உழைத்தேன். எப்படி உழைத்தாலும் வருமானம் போதவில்லை. அப்பா கொத்தனார் வேலைக்குச் செல்லத் தொடங்கினார். அப்பாவோடு நானும் வேலைக்குப் போனேன்.

தலையில் கல்லு சுமக்கும் வேலை. நாள் ஒன்றுக்கு பத்து ரூபா தருவார்கள். கழுத்தெல்லாம் விண் விண்ணென்று வலிக்கும். உடம்பெல்லாம் மூட்டு மூட்டாக நோகும். அப்பாவுக்கு நாள் ஒன்றுக்கு பதினைந்து ரூபா கொடுத்தார்கள். அங்கு வேலை இல்லாத நாட்களில் எங்கள் காணியில் வேலைசெய்தோம்.

எங்கள் உழைப்பு வீண்போகவில்லை. கடலைப் பயிர்கள் செழித்து 'பச்சைப் பசேலென்று கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. 'எங்கள் காணி. எங்கள் உழைப்பு' பெருமையாக இருந்தது. இடுப்பொடிய, இடுப்பொடிய காணியில் வேலைசெய்த கஷ்டமெல்லாம் விளைச்சலைப் பார்த்ததும் பறந்துபோனது. 'இந்த வருமானத்தை வைத்து மூன்று நான்கு மாதங்களாவது தாக்குப் பிடிக்கலாம் என்பதே ஏழைகளான எங்கள் குடும்பத்திற்கு நெஞ்சில் பால்வார்த்ததுபோல் இருந்தது.

ஆனால் விதி எங்கள் குடும்பத்தோடு விளையாடுவதில் விடாப்பிடியாக இருந்தது.

ஒரு நாள் காலையில் அப்பா தலையிலடித்துக் கொண்டு ஓடி வந்து, எங்களையும் கூட்டிப்போய் காணியைக் காண்பித்தார்.

அங்கே கண்ட காட்சி இருக்கிறதே, என் இருதயமே நின்றுவிடும்போல இருந்தது.

கடலைப் பயிர்களெல்லாம் முறிந்தும்,



மண்ணோடு மண்ணாக நசிந்தும் கிடந்தன.

மாட்டு வண்டிகளை பயிர்கள்மீது செலுத்தி நாசம் பண்ணியிருந்தார்கள். சக்கரங்களில் மிதிபட்டு பயிர்கள் எல்லாமே பரிநாசமாகியிருந்தன.

எத்தனையோ கொடுமைகளைச் சந்தித்த போதெல்லாம் நான் வாய்விட்டு கதறி அழுதது கிடையாது. தாங்கியிருக்கிறேன். பல்லைக்கடித்துக்கொண்டு சகித்திருக்கிறேன்.

ஆனால், இன்று மட்டும் என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "ஐயோ அம்மா. அம்மா. எங்கள் காணியம்மா.. பாவிகள் இப்படிப் பண்ணிவிட்டார்களேயம்மா! ஐயோ ஐயோ... நாசமாய் போவார்கள். நாசமாய்..." விக்கிவிக்கி அழுதேன்.

எங்கள் பெரியப்பா, அந்தப்பாவிதான் தனது குண்டர்களை ஏவி நாசம் செய்திருக்கிறான் என்று பக்கத்துக் காணிக்காரர்கள் மூலம் தெரியவந்தது.

அந்தப்பாவிக்கும் அப்பாவுக்கும் காணி வழக்கு அலகபாத் நகரில் உள்ள உயர் நீதிமன்றத்திற்கு மாறியிருந்தது. வழக்கு அப்பாவுக்கு சாதகமாகச் சென்று கொண்டிருந்தது.

வசதி இருந்தால்தானே வழக்காடமுடியும். அதுதான் எங்கள் காணியை அந்தப் பாவி நாசம் செய்திருக்கிறான்.

யாரிடம் சொல்லி நீதி கேட்கமுடியும்? கிராம அதிகாரி அந்தப் பாவியின் பணத்தின் பின்னால் நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு அலைகிறானே.

அதன்பின்னர் இரண்டுநாளாக வீட்டில் யாரும் சரியாகச் சாப்பிடக்கூட இல்லை.

மூன்றாம் நாள் மற்றொரு கொடுமை. தம்பி சிவநாராயணன்தான் வந்து சொன்னான்.

என்னால் பொறுக்க முடியவில்லை.

"அவனை விடக்கூடாது!" என்று ஆவேசமாய் கத்தியபடியே காணியை நோக்கி ஓடினேன்.

"பூலான் நில். பூலான் நில்!"

என்று அம்மா கத்திக்கொண்டே என் பின்னால் ஓடிவந்தாள்.

நான் நிற்கவில்லை. (தொடர்ந்து வரும்)

## சென்றவாரம்

கிராம அதிகாரியின் மகனும் அவனது நண்பர்களும் பூலான்தேவியை நடுவீதியில் வைத்து தாக்கிவிட்டுப் போகின்றனர்.

அதன்பின்னர் பூலானை கணவன் புத்திலால் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார் தந்தை. புத்திலால் வித்தியா என்ற பெண்ணை திருமணம் செய்து விட்டான்.

பூலானை வித்தியா வேலைக்காரியாக நடத்தி துன்புறுத்துகிறாள்.

சூடாக்கிய இரும்புக் கம்பியால் பூலானுக்கு சூடுபோட முயல்கிறாள் வித்தியா.

பூலான் பொறுமை இழந்து கோபமடைகிறாள். வித்தியாவிடம் இருந்த இரும்புக் கம்பியை பறித்துக்கொள்கிறாள்.

>>>>>>>>>>> இனி...

# பெற்றோல் ராமரின் சோகக் கதை

## 18 ஆண்டுகள் படாதபாடு

'மூலிகை மூலம் பெற்றோலா? நல்ல வேடிக்கைதான். வைத்தியம் கியித்தியம் பிடித்திருக்கிறதா?' தனது கண்டுபிடிப்பைப் பற்றி ராமர்பிள்ளை சொன்னதும் பலரும் அப்படித்தான் கேலி செய்தார்கள்.

தமிழ்நாட்டில் ராஜபாளையம் என்ற இடத்தைச் சேர்ந்தவர் ராமர்பிள்ளை. வயது 36. மனைவியும் இரண்டு குழந்தைகளும் உள்ளனர்.

இன்று இந்தியாவில் மட்டுமல்ல உலகமே அட அப்படியா என்று ஆச்சரியப்படுமளவுக்கு ராமர்பிள்ளை பிரபலமாகிவிட்டார்

மூலிகைமூலம் அவர் தயாரித்த பெற்றோலில் மோட்டார் சைக்கிள் ஓடுகிறது. இந்திய விஞ்ஞானத்துறை அதிகாரிகளே பிரமித்துப் பாராட்டியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் ராமர்பிள்ளைக்கு பல லட்சம் ரூபாய் செலவில் பரிசோதனைக்கூடம் அமைத்துக் கொடுக்க தமிழக முதல்வர் முன்வந்துள்ளார்.

ஆனால் ராமர்பிள்ளை தனது கண்டுபிடிப்புக்கு அங்கீகாரம் பெறுவதற்கு எத்தனை கஷ்டப்பட்டார், எப்படியெல்லாம் அவமானப்பட்டார் என்பது தனியான சோகக்கதை. அதனைச் சுருக்கமாகத் தருகிறோம். சாதனையாளர்களுக்கு சமூகம் தரும் முதல் மரியாதையின் இலட்சணம் தெரியவேண்டாமா?

ராமர்பிள்ளையின் சொந்த ஊரான ராஜபாளையம் அருகே மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கிறது. ராமர்பிள்ளை 8ம் வகுப்புப் படிக்கும்போது அங்கு செல்லத் தொடங்கினார். அந்த மலையில் உள்ள அழகர் கோவில் அருகே ராமர்பிள்ளையும் சக மாணவர்களும் உணவு சமைத்துச் சாப்பிடுவது வழக்கம்.

அப்படித்தான் ஒரு நாள் தற்செயலாக அந்தச் சம்பவம் நடந்தது.

உணவு சமைத்த பின்னர் மிஞ்சிய நெருப்பை எடுத்துப் போய் ஒரு ஓரமாக கொட்டினார் ராமர்பிள்ளை. அப்படிக் கொட்டும்போது ஒரு பச்சைச் செடி மட்டும் தீப்பிடித்து மளமளவென்று எரியத் தொடங்கியது.

ராமர்பிள்ளையின் மூளையிலும் சிந்தனைத்தீ பற்றிக்கொண்டது. 'இந்தச் செடி மட்டும் எப்படி எரிகிறது?' என்று யோசித்தார். அந்தச் செடியை வீட்டில் கொண்டு போய் வைத்து ஆராயத் தொடங்கினார்.

அதன்பின்னர் ராமர்பிள்ளைக்கு தூக்கம் தொலைந்துபோனது. எப்போதும் அந்த மூலிகை பற்றிய சித்தனைதான்.

பல்வேறு இரசாயனப் புத்தகங்களையும் வாங்கிப் படித்துப்பார்த்தார். புத்தகம் மூலமாக கற்றுக் கொண்டதையும், தனது சொந்த யோசனைகளையும் கலந்து மூலிகையை பல்வேறு இரசாயன சோதனைகளுக்கு உட்படுத்திப்பார்த்தார்.

ஒரு மாதம், ஒரு வருடமல்ல சுமார் 18 வருடங்கள் சற்றும் தளராமல் முயற்சியைத் தொடர்ந்தார் இந்த தன்னம்பிக்கை மனிதர்.

முயற்சி திருவினையாகியது. மூலிகை திரவவடிவில் மாற்றப்பட்டு பெற்றோலாகியது.

பிரசவ வேதனையில் துடித்த தாய் ஒருத்தி குழந்தை பிறந்ததும் அடையும் மகிழ்சிக்கு ஈடானது ராமர் பிள்ளையின் மகிழ்ச்சி.

மூலிகை பெற்றோலுடன் ராமர்பிள்ளை ஓடினார், ஓடினார், மத்திய மாநில அரசுகளின் பரிசோதனைக் கூடங்களுக்கு ஓடினார்.

முதலில் சந்தேகப்பட்டாலும் பின்னர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு வாயைப் பிளந்தார்கள். 'உபயோகிக்கக்கூடிய தரமான எரிபொருள். மனித உயிர்களுக்கு இந்த வாயுவால் ஆபத்துக் கிடையாது. காற்றும் அசுத்தமாகாது' என்று சான்றிதழ் கொடுத்தார்கள்

இந்தியன் ஒயில் கோப்பரேசன் தலைமையகமும் ராமர்பிள்ளையின் பெற்றோலைப் பரிசோதித்துப் பார்த்து அசந்து போனார்கள்.

இத்தனைக்கும் பின்னரும் இந்திய அரசும் சரி, எரிபொருள் துறை சம்பந்தப்பட்ட எவரும் சரி ராமர்பிள்ளையின் கண்டுபிடிப்புப் பற்றி கவனிக்கவே இல்லை என்பதுதான் ஆச்சரியமான விடயம்.

இதற்கிடையே தொழில் அமைச்சு அதிகாரி ஒருவர் ராமர்பிள்ளைக்கு 5 இலட்சம் ரூபா நிதிவழங்கி பரிசோதனைக்கு உதவ முன்வந்தார். அதனை அறிந்து மூக்கை நுழைத்தாராம் ஒரு உள்ளூர் அரசியல்வாதி. "ஆராய்ச்சியாவது, மண்ணாங்கட்டியாவது; எனக்கும் கமிஷன் வேணும்." என்று ஒரு தொகை கேட்டாராம். அதனால் பணமே வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டார் ராமர்பிள்ளை.

நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது ஒரு கடிதம் அனுப்பினார் ராமர்பிள்ளை. அந்தக் கடிதத்துக்கு பதில் போடலாமா வேண்டாமா என்று வழக்கம் போல நரசிம்மராவ் யோசித்து முடிப்பதற்கிடையில் அவரது பதவி போய்விட்டது.

பின்னர் புதிய பிரதமர் தேவகவுடாவுக்கு கடிதம் போட்டார் ராமர்பிள்ளை. இந்திய விஞ்ஞானிகள் கழகத்துக்கு சென்று கண்டுபிடிப்பை செய்து காட்டுமாறு பிரதமர் அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்தது.

புதுடில்லி சென்றார் ராமர்பிள்ளை. 25க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் வைத்த கண் வாங்காமல் கவனித்துக் கொண்டிருக்க தனது சாதனையை செய்து காட்டினார். "அபாரம், பலே, அற்புதம்" என்று அனைவரும் பாராட்டினார்கள். ராமர்பிள்ளையின் கெட்டநேரம் விஞ்ஞானிகள் கழகத் தலைவர் ராமமூர்த்தி வெளிநாடு செல்ல வேண்டி இருந்தது.

"இரண்டுவாரத்தில் திரும்பிவிடுவேன் டில்லியிலேயே இருங்கள்" என்று முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு பறந்துவிட்டார் ராமமூர்த்தி. ராமமூர்த்தி சென்றதும் அங்கிருந்த அதிகாரிகள் ராமர்பிள்ளையை திருப்பி அனுப்பிவிட்டார்கள். அவமானத்தோடு திரும்பினார் ராமர்பிள்ளை.



அதன்பின்னரே பத்திரிகையாளர்களை சந்தித்து தன் கண்டுபிடிப்பு இரகசியத்தை வெளியிட்டார்.

பத்திரிகைகளில் செய்தி வந்தபின்னர் கூட தமிழக அரசு ராமர்பிள்ளையை திரும்பியும் பார்க்கவில்லை என்பதுதான் சோகம்.

அதன்பின்னர் சில பத்திரிகைகளில் ராமர்பிள்ளைக்கு தமிழக முதல்வர் உதவ வேண்டும். இந்த ராமர்பிள்ளை மட்டும் வெளிநாட்டில் பிறந்திருந்தால் நிலமையே வேறு. தலையில் தூக்கி வைத்து கொண்டாடியிருப்பார்கள் என்று எழுதின.

பத்திரிகைச் செய்திகளைப் பார்த்து விட்டு தமிழக முதல்வர் கருணாநிதி, மத்திய அமைச்சர் முரசொலிமாறன் ஆகியோர் ராமர்பிள்ளையை அழைத்துப் பேசினார்கள். அவரது கண்டுபிடிப்பான பெற்றோலில் மோட்டார் சைக்கிள் ஓடுவதையும் கண்ணால் கண்டார்கள்.

எனினும் இப்போதுகூட ராமர்பிள்ளைக்கு செய்துகொடுத்துள்ள வசதி வாய்ப்புக்கள் போதியதாக இல்லை. இந்திய மத்திய அரசு நேரடியாக கவனிக்க வேண்டிய ஒரு விடயம் இது. ஆனாலும் பொறுப்பில்லாமல் நடந்துகொள்கிறார்கள் என்று தமிழகப் பத்திரிகைகள் கவலை தெரிவித்துள்ளன.

இதற்கிடையே ராமர்பிள்ளையின் உயிருக்கு ஆபத்து வரலாம் என்றும் அஞ்சப்படுகிறது. ஆனாலும் போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

ராமர்பிள்ளையின் மூலிகை பெற்றோல் மட்டும் சரிவர தயாரிக்கப்பட்டால் இந்த நூற்றாண்டின் மாபெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பாக அது இருக்கும்.

இந்தப் பெற்றோல் தயாரிக்கப் பயன்படுத்தும் மூலிகை முடிந்துவிட்டால் என்ன செய்வது? குறிப்பிட்ட மூலிகையை பல ஆயிரம் மடங்காக்கும் விஞ்ஞான வளர்ச்சி இந்தியாவிடம் இருக்கிறது என்று பிரபல விஞ்ஞானி அபுல்சலாம் கூறியிருக்கிறார்.

மூலிகை பெற்றோல் பெரிய அளவில் தயாரிக்கப்பட்டால் லீற்றர் 2 ரூபாய்க்கு விற்பனை செய்யலாம். இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்களுக்கு மட்டுமல்ல சில மாற்றங்களுடன் விமானத்திற்கே பயன்படுத்தலாமாம்.

எண்ணெய் நாடுகளின் வயிற்றில் புளியைக் கரைக்கும் செய்தி இது. இந்தியாவை பணக்கார நாடாக்கும் யோசனை ஒரு சாதாரண மனிதனின் மூளைக்குள் இருக்கிறது. அந்த மனிதனை உரிய கௌரவம் கொடுத்து பாதுகாத்து நிறைந்த பயனைப் பெறும் காரியங்கள் மட்டும் மந்தகதியில் நடப்பதுதான் விசித்திரமாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## கல்யாணமாம் கல்யாணம்



இரட்டையர்கள் இரட்டையர்களை திருமணம் செய்த செய்திகள் முரசில் முன்னர் வெளிவந்திருக்கின்றன.

இப்போது ஒரு வித்தியாசமான செய்தி. இரட்டையர்கள் இரட்டையரை திருமணம் செய்ய, அந்த திருமணத்தை இரட்டையர்களான பாதிரியார்கள் நடத்தி வைத்துள்ளனர். இந்த அமர்க்களமான திருமணம் நடந்திருப்பது இந்தியாவில் உள்ள கேரள மாநிலத்தில்.

இரட்டையரான மணமகன்களின் பெயர் சாபு, பாபு. இருவரும் ஒரே மாதிரியாகவே இருப்பார்கள். வித்தியாசம் கண்டுபிடிக்க ஒரு போட்டியே வைக்கலாம். அந்தளவுக்கு உருவ ஒற்றுமை. இந்த இரட்டையர்களுக்கு ஒரே நேரத்தில், ஒரே மேடையில் இரட்டையரான பெண்களையே திருமணம் செய்து வைக்க தீர்மானித்தனர் பெற்றோர்கள். மணமகள்களை தேடும் படலம் தொடங்கியது.

கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல ஒரே அச்சில் வார்க்கப்பட்டது போன்ற உருவ ஒற்றுமை உள்ள இரட்டையரான பெண்கள் பற்றிய தகவல் கிடைத்தது. கட்பூரைச் சேர்ந்த அந்த இரட்டையரை பெற்றோர்களுக்கும் பிடித்துவிட்டது. இரட்டையரான பெண்களின் பெயர்கள் பிந்து, பெற்றி.

சில சமயங்களில் ஒன்றன்பின் ஒன்றாக தொடர் ஆச்சரியங்கள் நடப்பதுண்டல்லவா. அப்படித்தான் இந்த திருமணத்திற்கு மெருகூட்டும் மற்றொரு தகவல் கிடைத்தது. ஆந்திர மாநிலத்தில் இரட்டையரான பாதிரியார்கள் இருக்கின்றனர். இருவரும் ஒரே மாதிரி இருப்பார்கள் என்ற தகவல்தான் கிடைத்தது.

உடனே ஆந்திராவுக்கு ஓடினார்கள் சாபுவும், பாபுவும். இரட்டையர்களான பாதிரியார்களை சந்தித்து தங்கள் திருமணத்தை நடத்திவைக்குமாறு அழைப்பு விடுத்தனர். அவர்களும் படு சந்தோசமாகச் சம்மதித்தனர்.

பாதிரியார்கள் இருவரும் பிறந்தது கேரள மாநிலத்தில்தான் என்பது மற்றுமொரு போனஸ் அதிசயம். பாதிரியார்களின் பெயர்கள்; போல் வலய பரம்பில், பீட்டர் வலய பரம்பில்.

இரட்டையர்கள் இரட்டையர்களை மணக்க இரட்டைப் பாதிரியார்களால் நடத்திவைக்கும் திருமணம் என்ற செய்தி பரவியதும், திருமணத்தைக் காண எக்கச்சக்கமான கூட்டம். இந்த அமர்க்களத் திருமணமும் உலக அதிசயம்தான்.

ஒரே வீட்டில் இருந்தால் மணமகன்களும் மணமகள்களும் சற்று ஜாக்கிரையாகத்தான் இருக்க வேண்டியிருக்கும். காரணம், ஆள்மாறாட்ட அபாயம்! ●

## தகவல் பெட்டி

## சூப்பர் வேகம்

சைக்கிள்களிலும் விதம் விதமாக பல ரகங்கள் வந்துவிட்டன. பாமரர்கள் நினைத்தும் பார்க்க முடியாத விலைகளில் விற்பனையாகின்றன. இங்கு காணப்படுவதுதான் இன்றைய தேதியில் உலகில் அதிவேகமான சைக்கிள். 'சூப்பர் ஸ்பீட் சைக்கிள்' என்று பெயர் வைத்துள்ளனர்.

இதன் வேகத்தை பரிசீலிக்க காற்றழுத்தம் அதிகமாக உள்ள பாதாளக்குகை வழியாக வெள்ளோட்டம் விட்டனர். சூப்பர் வேகத்தில் தூள்கிளப்பியது. எடை மிகவும் குறைவான சைக்கிள் இது. கார்பன் ஃபைபரால் ஒரே அச்சில் வார்க்கப்பட்டது. அதாவது பாகம் பாகமாக பொருத்துக்களுடன் செய்யப்பட்ட சைக்கிள்கள் போல் இருக்காது. 1992ல் ஒலிம்பிக்கில் தங்கம் வென்று உலகில் தலை சிறந்த கைக்கிள் என்று பெயரெடுத்தது 'கிரிஸ்போர்மேன்' என்னும் சைக்கிள். அதனைவிடச் சிறப்பான சைக்கிள் இந்த 'சூப்பர் ஸ்பீட் சைக்கிள்' என்று பாராட்டப்பட்டுள்ளது.

உலகில் விதம் விதமான சைக்கிள்களை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்நாட்டில் வடக்கு-கிழக்கில் பொருளாதார தடை விதிக்கப்பட்ட பொருட்களில் சாதாரண சைக்கிள்களும் சிக்கிக்கொள்கின்றன. ●




## ஒவ்வொன்றும் ஒரு விதம்


வரிக் குதிரைகளுக்கு உடம்பில் வரிவரியாகக் கோடுகள் இருப்பது தெரியுமல்லவா. இந்தக் கோடுகளில் உள்ள வித்தியாசம் சாதாரணமாக உடனே தெரியாது. படத்தில் வரிக்குதிரைகள் மூன்று இருக்கின்றனவல்லவா? உற்றுப் பார்த்தீர்களானால் மூன்றின் உடலில் உள்ள கோடுகளும் வெவ்வேறு விதமாக இருப்பது தெரியும். மனிதனின் கைரேகைகள் எப்படி ஆளுக்கு ஆள் வேறுபாடாக இருக்குமோ, அது போல வரிக்குதிரைகள் ஒவ்வொன்றுக்கும் கோடுகள் ஒரு விதம். ஒன்றுக்கொன்று சம்பந்தமே இராது. ●



## சூரிய சபதம்

மின்சக்தியில் சாதனை என்பதெல்லாம் பழைய கதையாகிவிட்டது. இப்போதெல்லாம் சூரிய சக்தியை வைத்து புதிது புதிதாக என்ன செய்யலாம் என்றுதான் விஞ்ஞானிகள் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். சென்றவாரம் முரசில் சூரிய சக்தி மூலம் இயங்கும் படகைப் பற்றி கூறியிருந்தோம். இந்தவாரம் சூரியசக்தி மூலம் இயங்கும் கார் காண்போம்.

வடிவமே வினோதமாக உள்ள இந்தக் கார் ஜப்பானைச் சேர்ந்த மிட்சுபிசி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. இதற்கு 'சூரிய சபதம்' என்று பெயர் சூட்டியுள்ளனர். இதன் நீளம் 5.95 மீட்டர். அகலம் 1.82 மீட்டர். எடை 170 கிலோ. விரைவில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலக சூரியசக்திக் கார்களின் கண்காட்சியில் இந்தக் காரும் இடம்பெறவுள்ளது.



## வானில் இருந்து வீச்சு!

கீழே யானைகள். மேலே ஹெலிகொப்டர். என்ன இது, தாக்குதலுக்கான தயாரிப்பா? என நினைக்க வேண்டாம். ஹெலிகொப்டர் மூலம் யானைகளுக்கு உபத்திரவம் செய்யவில்லை. உதவி செய்துகொண்டிருக்கிறார்கள். நமிபியா நாட்டில் உள்ள கொக்கோ வெல்ட் என்ற காட்டில் யானைகள் செத்துக்கொண்டிருப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்தது. காரணம் என்னவென்று ஆராய்ந்தபோது அந்த யானைகள் அருந்தும் தண்ணீர் மாசுபடிந்திருப்பது தெரியவந்தது. அதன் பின்னர்தான் ஹெலிகொப்டர் மூலம் மருந்து தூவப்படுகிறது. இதனால் யானைகள் காப்பாற்றப்படுகின்றன. இதுதான் மிருகாபிமானம். ●





படிப்பகம்

www.padippakam.com

## ரேகாவின் துணிச்சல்

நடிகர் ஜெமினி கணேசனுக்குப் பல மனைவிகள். காதல் மன்னன் என்ற பட்டத்துக்கு ஏற்பவே காதல் வித்தை காட்டியவர் ஜெமினிகணேசன்.

நடிகர் ஜெமினியின் மகள்தான் இந்தி நடிகை ரேகா. அவரும் காதல் மன்னி. இப்போது 40 வயதைத் தாண்டி விட்டபோதும் இளம் ஹீரோக்கள் அவர் பின்னால் அலைகிறார்கள்.

அக்ஷய்குமார், சல்மான்கான், ஜாக்கிஷெராப் என்று பல நடிகர்களுக்கு ரேகாவுடன் நெருக்கம். பிரபலமாகும் நடிகர்களை நெருக்கமாக அறிந்து கொள்வது ரேகாவுக்கும் பொழுதுபோக்கு.

இளம் ஹீரோக்களுடன் சுற்றுகிறீர்களே என்று கேட்டால், ரேகா என்ன பதில் சொல்கிறார் தெரியுமா?

"அப்படியா? அவர்களைவிட நான் பெரியவள். அவர்கள் இளம் நடிகைகள் பின்னால் சுற்றாமல் என்னைத்தேடி வருகிறார்கள் என்றால் எனக்குப் பெருமைதானே. நான் இன்னும் இளமையோடு இருப்பதாகவே உணர்கிறேன் அதற்கு என்ன காரணம் தெரியுமா? என்னைச் சுற்றியுள்ள நண்பர்கள் இளமையானவர்கள். நண்பிகளும் அப்படியேதான்!" என்கிறார் ரேகா. துணிச்சலின் மறுபெயர்தான் ரேகாவோ?

### முகப்பில்

பிரசாந்த் \ ரம்யா கிருஷ்ணன்

படம்:-மன்னவா \ படம்:-தக்கீரன்

அஞ்சு அரவிந்த்

## அட்லாண்டாவில் சிவாஜி

### "பழைய ஆளுக்கு மரியாதை கிடைக்கிறது"

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அட்லாண்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை கண்டு களித்துவிட்டு திரும்பியிருக்கிறார்.

அட்லாண்டா அனுபவங்களை தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு சுவைபட விளக்கியுள்ளார். சிவாஜியின் பேட்டியில் இருந்து ஒரு பகுதி.

**கேள்வி:-** ஒலிம்பிக் பார்த்த அனுபவம் எப்படி இருந்தது?

**சிவாஜி:-** ஒலிம்பிக்ஸ் பார்க்கறது வாழ்க்கையில் காணக்கிடைக்காத ஒரு அற்புதமான அனுபவம். அட்லாண்டா ஒலிம்பிக் கிராமத்தில் இருந்து ஸ்டேடியத்துக்கு ரொம்பத் தூரம் நடக்கவேண்டியிருந்தது. என் பையன் (சகோதரர் சண்முகத்தின் மகன்) என்னை 'வீல் சேர்'ல வைச்சு அழைச்சுட்டுப் போனான். ஒரு இடத்தில படியேறிப்போக வேண்டியிருந்தது. என் பையன் அமெரிக்காக்காரன்கிட்ட போய் இதைச் சொன்னான்.

இந்தியாவிலேர்ந்து ஒருத்தன் ஒலிம்பிக் பார்க்க 'வீல் சேர்'ல வந்திருக்கான்னு தெரிஞ்சதும் என் டிக்கெட்டையே கான்ஸல் பண்ணி வேறொரு டிக்கெட் கொடுத்துட்டான். எனக்கும் என் பையனுக்கும் மைதானத்துக்கு பக்கத்திலேயே இடம் கொடுத்து உட்கார வைச்சுட்டான். சுற்றிலும் பார்த்தா புருஷ்வில்லிஸ் மாதிரி பெரிய பெரிய ஹொலிவுட் ஸ்டார்களெல்லாம் உட்கார்ந்திருக்காங்க. போனமுறை ஒலிம்பிக்ஸ்ல தலைல அடிபட்டானே ஒரு நீச்சல் சாம்பியன், இப்ப எய்ட்ஸ் நோயால் கொஞ்சம் கொஞ்சமா செத்துக் கிட்டிருக்கான்.... அவனும் உட்கார்ந்திருக்கான். 'வீல்சேர்'ல போன எனக்கு இத்தனை அந்தஸ்தோட உட்காரவைச்சு மரியாதை பண்ணினான் வெள்ளைக்காரன்.

**கேள்வி:-** உடம்பு முடியாமல் இருந்த முகம்மது அலிக்கு மரியாதை பண்ணினாங்க இல்லையா?

**சிவாஜி:-** ஆமாம். அது எனக்கு ரொம்பப் பெருமையா இருந்தது. பழைய ஆளு அவன். பழைய சாம்பியன் நம்ம ஊர்ல பழைய ஆளுங்களுக்கு எங்கே மரியாதை கொடுக்கிறான். அவன் எந்தக் கலையில் சிறந்து விளங்கினவனா இருந்தாலும் சரி அவனுக்கு நம்ம ஊர்ல மரியாதையே கிடையாது.

**கேள்வி:-** அமெரிக்கா சுத்தமா இருக்கா?

**சிவாஜி:-** நியூயோர்க்லயாவது அங்கே இங்கே குப்பையைப் பார்க்கலாம்ங்க. ஆனா அங்கே இருக்கிற கிராமங்கள்.... அடடா! அதெல்லாம் சொர்க்கங்கள்....என்ன அழகு!

இன்னும் ஆயிரம் வருஷமானாலும் நம்மநாடு அந்தப்பக்கம் கூடப் போக முடியாதோங்கற ஏக்கம் எனக்கு.

நாளைக்கே நாடு நல்லபடியா மாறிடணும்னு இல்லை. அட்லாண்டா போனதைப் பத்திக் கேட்டதினால என் மனசில இருந்த நிறை குறைகளைச் சொன்னேன். விளையாட்டு வீரனோட திறமையைக் கண்டுபிடிச்சு அவனை உற்சாகப்படுத்தணும். ஆதரவு கொடுக்கணும். பயிற்சி கொடுக்கணும். தட்டிக்கொடுத்தால் போதும்.

சிலோனுக்குப்போய் அடியோ அடி வாங்கறானே கிரிக்கெட்காரன்... இங்கே தமிழ் நாட்டுக்கு வந்து போக்கஸ் மாட்ச் ஆடின ஸ்ரீலங்காக்காரன் உலக சாம்பியனாயிட்டானே. எப்ப நம்ம முன்னுக்கு வரப்போறோம்? ஜெயிக்கக்கூடவேணாம். அடிபடாமலாவது வரலாமே!



அஜித்குமார்-கஞ்சன்
படம் காதல் புத்தகம்

## மாறிவிட்டார் சுவலட்சுமி

கதாநாயகர்களின் முகத்துடன் முகம் வைத்து நடிக்க மாட்டேன். கட்டிப்புரண்டு நடிக்க மாட்டேன். கவர்ச்சியான உடை அணிய மாட்டேன் என்று எக்கச்சக்கமான நிபந்தனைகள் போட்டவர் சுவலட்சுமி.

நிபந்தனைகளைக் கேட்ட தயாரிப்பாளர்கள் சுவலட்சுமி பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை. பொறுத்துப் பார்த்தார் சுவலட்சுமி. இப்போது தனது நிபந்தனைகளை தளர்த்த ஆரம்பித்துவிட்டார்.

வாணிமஹால் படத்தில் பாடல் காட்சியில் கதாநாயகனோடு நெருக்கமாக நடித்திருக்கிறார். கொஞ்சம் அப்படி இப்படி விட்டுக் கொடுப்பதில் தவறு இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டாராம் சுவலட்சுமி. நாய் வேசம் போட்டால் குரைக்கத்தானே வேண்டும். சுவலட்சுமிக்கு தாமதமாக உண்மை புரிந்திருக்கிறது.






## அஜித்குமாரின் மறுப்பு

### ஹீராவுக்கு டாட்டாவா?

ஜூனியர் விகடன் சஞ்சிகையில் அஜித்குமார் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் 'ஹீராவை நான் விரும்புகிறேன். அவள் நல்ல பெண்' என்று கூறியிருந்தார்.

அதுமட்டுமா சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஹீராவும், அஜித்குமாரும் ஒன்றாகத் தோன்றி ஹிந்திப் பாடல் ஒன்றைப் பாடினார்கள். ஹீராவை உரிமையோடு இடையில் கைகொடுத்து தன்னோடு அணைத்தபடி பாடினார் அஜித்குமார்.

இருவரும் ஒன்றாகச் சென்று ஊட்டி, கொடைக்கானல் போன்ற குளிர்பிரதேசங்களில் தங்கிவிட்டுத் திரும்பினார்கள்.

சமீபத்தில் அஜித்குமார் ஒரு அதிரடி அறிக்கை விட்டிருக்கிறார். 'ஹீராவுக்கும் எனக்கும் திருமணம் நடக்கப்போவதில்லை. வதந்திகளை நம்பவேண்டாம். எல்லாம் கட்டுக்கதை" என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார் அஜித்.

ஹீராவோடு இணைத்துப் பேசப்படுவதால் மார்க்கெட் பாதிக்கப்படும் என்று அஜித்குமாருக்கு சிலர் யோசனை சொன்னார்களாம். அதனால்தான் ஹீராவிடம் சொல்லிவிட்டு அப்படி ஒரு அறிக்கையை விட்டிருக்கிறார் அஜித்.

முன்னர் சுவாதியை தீவிரமாகக் காதலித்து விட்டும் இப்படித்தான் மறுப்பு விட்டிருந்தார் அஜித்குமார். பாவம் சுவாதி. அதனால் மன முடைந்துபோய், சினிமாவை விட்டு ஒதுங்கவே முடிவு செய்தார். பின்னர் முடிவை மாற்றிக் கொண்டார்.

இப்போது ஹீராவுக்கு தண்ணிகாட்டப் பார்க்கிறார் அஜித். ஆனால் ஹீரா லேசில் விடமாட்டார்.

எப்படியோ இன்றைய தமிழ்ப் பட உலகில் நடிகைகள் சிலரது தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார் அஜித்குமார்.

### மூன்று ஆர்

நடிகைகள் ... நெருக்கமான அமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளனர். ஆர் ஆர் ஆர் என்று ...

இன்னொரு செய்தி, எந்தவொரு அரசியல்... நின்று தொண்டு செய்யுங்கள். நாம் பக்க பலம்... ரசிக, ரசிகைகள் கடிதங்கள் மூலமாக வேண்டுகோ...

## எடை பார்க்கும் நக்மா

நக்மாவுக்கு மற்றுமொரு வெற்றிப்படம் மேட்டுக்குடி. வெண்ணெயில் குளித்தமாதிரி மினுமினுப்பாக இருக்கிறார். படம் முழுவதும் கவர்ச்சியை வாரிக்கொட்டி விருந்து படைத்திருக்கிறார். படம் பார்ப்பவர்களுக்கு நக்மா காய்ச்சல் ஏற்படாமல் தடுப்பது கஷ்டம்தான்.

ரம்பா, மீனா என்று உள்ள போட்டிகள் போதாது என்று தினம் ஒரு புது நடிகை இறக்குமதியாகிக் கொண்டிருக்கிறார். இதனால் நக்மா படு உஷாராக இருக்கிறார். உடல் எடை விஷயத்திலும் கவனமாகத்தான் இருக்கிறார்.

நக்மாவின் தற்போதைய எடை 50 கிலோ மட்டும்தான். (எந்தக் கதாநாயகனும் தூக்கிக் கொள்ள முடியும்) எடை பார்க்கும் இயந்திரம் ஒன்றை வீட்டில் வைத்திருக்கிறார். எடையில் சற்றுக் கூடுதல் தெரிந்தாலும் அன்று முழுக்க பட்டினி இருந்து எடையைக் குறைத்துக் கொள்கிறாராம். தொழில் பக்தி.



பிரபு-மதுபாலா
படம் பாஞ்சாலங்குறிச்சி

## ரம்... வாய்...

தமிழ்ப் ப... திறமைகளைக்... ராகவேந்திர... ராகவேந்... இதற்கி... நெருக்கம் ஏ... இரண்டு... பறந்தார் ரம்... தவறவில்லை. தமிழ்ப் ப... இயக்குநர்களு... அங்குள்ள இ... தள்ளினார் ர... அதே ர... "தமிழ்ப்பட உ... காரணம்... மலையாக ந... விட்டார்களா... இப்போது... சென்னை... மாதமாக அ... தமிழ்ப்பட... ஆகியோரை த... ரம்யா. ரம்யா... கண்டிப்பாக ...

## கௌ...

இந்த வரு... கௌதமி...

## பிடித்...

நடிகர் விஜய... காமராஜர், எம்.ஜி... எம்.எஸ். விஸ்வநா... பெண்கள்: ...



படிப்பகம்

www.padippakam.com

# ...ா வீசுகிறார் வலை ...புத்தேடி தீவிர வேட்டை!

...ம் கைவிட்டதால் தெலுங்குப்படவுலகுக்குப் போனவர் ரம்யா கிருஷ்ணன். ரம்யாவின் ...பிடித்து பயன்படுத்தினார் ராகவேந்திரராவ். தெலுங்கில் பிரபல இயக்குநரான ...யாவுக்காக ஒரு மாளிகையையும் பரிசாகக் கொடுத்தார்.

...ன் மனைவிக்கு விஷயம் தெரிந்துவிட்டதால் விவகாரம் விகாரமாகியது.

...ற்றொரு தெலுங்கு இயக்குநரான ஈ.வி.வி.சத்யநாராயணாவுடன் ரம்யாவுக்கு ... அவரும் ரம்யாவின் கலைச்சேவையில் மயங்கி படங்களில் வாய்ப்புக் கொடுத்தார். ... இயக்குநர்களின் தட்டிக்கொடுப்போடு தெலுங்குப் படவுலகில் கொடிகட்டிப் ...ணன். நாகார்ஜுனா போன்ற ஹீரோக்களையும் கைக்குள் போட்டுக்கொள்ளவும்

...நக்கு என்னை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியவில்லை. தமிழ்ப் பட...னை கிடையாது. தெலுங்குப் படவுலகம்தான் திறமைகளை மதிக்கிறது. ...களும் அனுபவசாலிகள். திறமையானவர்கள்" என்றெல்லாம் புகழ்ந்து ...ருஷ்ணன்.

...ருஷ்ணன் இப்போது தடாலடியாக ஒரு கரணம் அடித்துள்ளார். ...ன் என் தாய்விடு." என்று ஒரு போடு போட்டிருக்கிறார்.

...மல் அம்மணி கரணம் அடிப்பாரா? தெலுங்குப் படவுலகில் அவர் ...கெட்டியாகப் பிடித்திருந்த இரண்டு இயக்குநர்களும் கைவிட்டு ...னால் தெலுங்கில் படவாய்ப்புக்கள் குறைந்துவிட்டன.

...ரம்யாவுக்கு தமிழ்ப்பட உலகம் மீது ஆர்வம் வந்திருக்கிறது. ...யாவுக்கு சொந்தமாக ஒரு பங்களா இருக்கிறது. கடந்த சில ...ளா களை கட்டியிருக்கிறது.

...ல் தனக்குத் தெரிந்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் ...யாக அழைத்து விசேஷ கவனிப்பு நடத்திக் கொண்டிருக்கிறார் ... கலைச்சேவையால் மகிழ்ந்துபோன தயாரிப்பாளர்கள் ...த்தருவதாகக் கூறியிருக்கிறார்களாம். ரம்யா ரம்யாதான்.

## ...திக்குக் கல்யாணம்

...திக்குள் திருமணம் செய்துக்கொள்ளப்போகிறார் ...ணமகன் பிரபல தொழிலதிபர். இந்தத் ...மணத்திற்காக தனது காதலைத் தியாகம் செய்கிறார் கௌதமி. ஒளிப்பதிவாளரான காதலனுக்கு குட்பை.

# மினி சினி

* 'கல்நாயக்' இந்திப் படத்தில் இடம்பெற்ற 'சோளிக்கே பீச்சே...' என்ற பாடல் காட்சியில் மாதுரி டிக்ஷிட்டுடன் இணைந்து நடனமாடியவர் நீனா குப்தா. இவர் தமிழில் பிரபுதேவா நடிக்கும் 'மிஸ்டர் ரோமியோ' படத்தில் இடம்பெறும் ஒரு பாடல் காட்சியில் நடனமாடுகிறார்.
* அர்ஜுன் தற்போது இயக்கி நடித்து வரும் 'தாயின் மணிக்கொடி' படத்தில் இடம்பெறும் முக்கிய காட்சிகளை முதன்முறையாக வெளிநாட்டில் எடுக்கப் போகிறார். இதற்காக கனடா நாட்டின் ரொரொன்டோ நகரில் 25 நாட்கள் படப்பிடிப்பை நடத்தவுள்ளார்.
* 'மேட்டுக்குடி' படத்தில் சிற்பியின் இசையில் பாடல் ஒன்றைப் பாடியுள்ள ஏ.ஆர். ரகுமானின் சகோதரி இஸ்ரத். அடுத்து குருதனபால் இயக்கும் 'பெரிய இடத்து மாப்பிள்ளை' படத்தில் சிற்பியின் இசையில் மீண்டும் பாடவுள்ளார். சிற்பி உருவாக்கும் பாடகி 'இஸ்ரத்'.
* 'சின்னமாப்ளே' படத்தைத் தயாரித்த டி. சிவா அடுத்து மம்முட்டி நடிக்கும் தமிழ்ப்படம் ஒன்றைத் தயாரிக்கிறார். இப்படத்தை 'கமிஷனர்','கிங்' போன்ற படங்களை இயக்கிய பிரபல மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷ் இயக்குகிறார்.
* 'இந்திரா' படத்தை இயக்கியுள்ள சுஹாசினி தற்போது 'ஆனந்தம்' படத்தில் மணிரத்னத்திற்கு உதவியாளராக இருந்துவருகிறார். இதே நேரத்தில் விவரணப்படம் ஒன்றை இயக்குகிறார். இதில் ரேவதி முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார்.
* 'டில்லி பாபு' படத்திற்குப் பின்னர் 'கோபாலா கோபாலா' படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் பாண்டியராஜன். தந்தை-மகன் வேடங்களில் நடிக்கும் இவருக்கு குஷ்புவும், கொல்லங்குடி கருப்பாயியும் ஜோடிகளாக நடிக்கின்றனர்.
* 'நூறாவது நாள்' படத்தில் மொட்டை போட்டு வில்லனாக நடித்தார் சத்யராஜ். இவரைத் தொடர்ந்து பலர் சினிமாவுக்காக மொட்டை போட்டனர். இப்போது இவர் கதாநாயகனாக நடிக்கும் 'சேனாதிபதி' படத்தில் வில்லனாக நடிக்கும் பொன்வண்ணன் மொட்டை போட்டுள்ளார்.
* ஆர்.கே. செல்வமணியின் 'ராஜாளி' படம் தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளது. தெலுங்கில் 'சாகச வீருலு' என்ற பெயரில் வெளிவருகிறது.
* 'அபிராமி','சின்ன மேடம்' போன்ற படங்களை இயக்கிய திலீப் குமார், அடுத்து சுப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தில் 'காதல்தேசம்' அப்பாஸ்-சுவாதி இணைந்து நடிக்கின்றனர்.
* தமிழில் இருந்து மலையாளம் சென்ற ஊர்வசி மீண்டும் தமிழில் நடிக்க வந்த பிறகு மலையாளப் படங்களில் நடிக்காமல் இருந்தார். இப்போது புதிய மலையாளப்படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்தப் படத்தை சிபிமலையில் இயக்குகிறார்.
* 'மின்சாரக் கனவு' படத்தை அடுத்து ஏ.வி.எம். பட நிறுவனம் விஜய் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கின்றது.



சங்கவி

## ...தும், பிடிக்காததும்

...க்கு பிடித்தவை பற்றிய ஒரு பட்டியல். பிடித்த தலைவர்கள்; அண்ணா, ...ருணாநிதி, மூப்பனார். பிடித்த இசையமைப்பாளர்கள்; எஸ். ராமநாதன், ...ளையராஜா. பிடித்த உடை; கதர் சட்டை, கதர் வேஷ்டி. பிடித்தமான ...பெண்கள். பிடித்த உணவு; பழைய சோறும், மீன் குழம்பும்.

விஜயகாந்திற்குப் பிடிக்காத விஷயம் துரோகம். விஜயகாந்த்துக்கு ஒரு வெறிபிடித்த ரசிகர் இருக்கிறார். பெயர் ரெட்ஹில்ஸ் ரமேஷ். ஒரே நாளில் 500 கடிதங்கள் எழுதுவார் என்று சொல்கிறார் விஜயகாந்த்.



விஜயகாந்த்-சங்கீதா படம் அலெக்ஸாண்டர்

...ரேவதி, ரோகிணி, ரஞ்சிதா மூவரும் ...ாழிகள். மூவரும் இணைந்து தொண்டர் ...ாழிகள் மூவரையும் சக நடிகைகள் ...ட்சியிலும் சேரவேண்டாம். தனியாகவே இருப்போம் என்று ரேவதிக்கு ...விட்டுள்ளார்களாம்.

## சங்கவியின் குதிரைச் சவாரி

தமிழில் ரசிகர்களை ஒருவழி பண்ணியது போதும் என்று நினைத்து தெலுங்கில் புகுந்துவிட்டரா சங்கவி? அப்படியில்லை. தமிழிலும் கலைச்சேவை செய்தபடி, தெலுங்குப் படவுலகிலும் திறமைகளை காட்டிக்கொண்டிருக்கிறேன் என்கிறார்.

'தினமும் என்னைக் கவனி', 'பொண்டாட்டி போட்ட முடிச்சு', மன்னவா, 'பகவத்சிங்' ஆகிய தமிழ் படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். தெலுங்கிலும் பல படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

சங்கவிக்கு குதிரையில் ஏறுவது என்றால் பயமாம். குதிரைச் சவாரி என்றால் கொள்ளை ஆசைதான், குதிரையில் ஏறுவதற்கு மட்டும் பயமாக இருக்கிறது என்று சொல்கிறார்.

"சின்ன வயதில் குதிரை ஒன்றில் ஏறினேன். அது ஒரு முரட்டுக் குதிரை. கீழே விழுத்திவிட்டது. அதிலிருந்து குதிரையேறுவதற்கு பயமாக இருக்கிறது" என்று விளக்கம் சொல்லியிருக்கிறார்.

'பொண்டாட்டி போட்ட முடிச்சு' படத்தில் சங்கவி குதிரைச் சவாரி செய்வதுபோல ஒரு காட்சி இருக்கிறதாம். பயந்தபடியே குதிரையில் ஏறினாராம். சங்கவி ஏறிவிட்டதால் குதிரைக்கு குசி வந்துவிட்டதோ தெரியவில்லை பாய்ந்து ஓடத்தொடங்கிவிட்டது. ஒரு விதமாக சமாளித்துக் கீழே குதித்துவிட்டாராம் சங்கவி.

இதுவரை 24 படங்களில் சங்கவி நடித்துமுடித்துவிட்டார். இந்திப் படங்களில் நடிக்க வருமாறு வேண்டி விரும்பி அழைக்கிறார்களாம். அடுத்த ஆண்டுதான் ஒப்புக் கொள்வாராம். "தெலுங்குப் படங்களில் பாடல் காட்சிகளில் மட்டுமே கவர்ச்சியான உடைகளில் தோன்றுகிறேன். தமிழில் என்றால் படம் முழுக்க கவர்ச்சியான உடையோடு வலம்வர வேண்டியிருக்கும். என்றாலும் என்னை வாழவைத்த தமிழ்ப்பட உலகை மறக்கவே மாட்டேன்" என்கிறார் நன்றியுள்ள சங்கவி.

## பிரபுவுக்கும் சம இடம்

'சிவசக்தி' படம் நன்றாகப் போய்க்கொண்டிருக்கிறது. படத்தில் கதை இல்லா விட்டாலும் சத்யராஜ், பிரபு இருவரும் தூள் கிளப்பியிருக்கிறார்கள்.

பட விளம்பரம் ஒன்றில் பிரபுவின் படம் சிறியதாகவும், சத்யராஜின் படம் பெரிதாகவும் போடப்பட்டிருந்தது. பிரபு ரசிகர்கள் பட நிறுவனத்திற்கு நேரில் சென்று நியாயம் கேட்டார்கள். அதன்பின்னர் இருவரது படமும் ஒரே அளவில் போடப்பட்டுவிட்டது.

படம் முழுக்க சத்யராஜ் ஆவேசராஜாக தோன்றுகிறார். பிரபு பாடல், ஆடல், நகைச்சுவை, சண்டை என்று புகுந்து விளையாடியிருக்கிறார். இருவரது ரசிகர்களுக்கும் பிடிக்கக்கூடிய படம். 'பாட்ஷா' படத்தின் பின்னர் இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணாவுக்கு மற்றொரு பேர் சொல்லும் படம்.

## அப்பாவின் அட்வைஸ்

நடிகர் விஜயகுமாரின் மகன் அருண்குமார். அருண்குமார்-மந்த்ரா நடித்து சமீபத்தில் வெளியான படம் 'பிரியம்'. படம் தோல்வி. பல திரையரங்குகளில் இருந்து தூக்கிவிட்டார்கள். ஆனாலும் அருண்குமார் மிகவும் உற்சாகமாகவே இருக்கிறார். 'பிரியம்' படத்தில் நெருக்கமான கிளுகிளு காட்சிகள் இருக்கின்றன. அக்காட்சிகளில் நடிக்கும்போது அருண்குமாருக்கு எப்படி இருந்தது? இதோ அவரே சொல்கிறார்.


"கதையின்படி துணிச்சலான காதலர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடித்திருக்கிறோம். காதல் காட்சிகள் விஷயத்தில் அப்பா கண்டிப்பாக சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். கட்டிப்பிடித்து நடிக்கும்போது எமது மனம் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். வேறு எண்ணங்கள் வரவேகூடாது என்பது அப்பாவின் அறிவுரை" என்கிறார் அருண்குமார். அதுசரி, துணிச்சலான காதலர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்று எப்படித் தெரியும்? அனுபவம் உண்டா அருண்குமார்?

## வி.ஐ.பி. பிரபுதேவா

பிரபுதேவாவை வைத்து பிரமாண்டமான படம் ஒன்றை எடுக்கத் திட்டம் போட்டார் கலைப்புலி தாணு. அவர் திட்டம் போட்டபோது பிரபுதேவாவின் மார்க்கெட் உச்சத்தில் இருந்தது. படத்திற்கு 'மன்மதன்' என்று பெயர் சூட்டப்பட்டது.

பெயர் சூட்டிய நேரம் பிரபுதேவா மார்க்கெட் டல்லாகிவிட்டது. மாதுரி டிக்ஷித், ஊர்மிளா, சோனாலி போன்ற நடிகைகளை அணுகினார் தாணு. மூவரில் சோனாலி மட்டுமே ஓ.கே. சொன்னார். பின்னர் அவரும் கழன்று கொண்டார். இப்போது மும்பாய் புதுமுகநடிகை ஒருவர் நடிக்கப்போகிறார்.

படத்தின் பெயரும் மாற்றப்பட்டு விட்டது. 'வி.ஐ.பி' என்று பெயர் மாற்றியுள்ளனர். 'சுந்தரப்புருஷன்' படத்தை இயக்கிய எஸ்.டி.சபா இயக்கப்போகிறார்.



மம்முட்டி-திவ்யா சிறோத்கர் படம் 'அரசியல்'



படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் விரும்பும் கணவன்

கல்யாணம் செய்து கொள்ளப் போகின்ற ஒவ்வொரு கன்னிப் பெண்ணின் மனதிலும் தனக்கு வரப்போகிற கணவன் எப்படி யெல்லாம் இருக்க வேண்டும் என்று நினைப்பதுண்டு. இதனை ஒரு பத்திரிகை சில வித்தியாசமான தகவல்களைச் சேகரித்துச் சொல்கிறது.



1. நூறு பெண்களுள் மூன்று பேர்தான் தங்கள் கணவன் பெரும் பணக்காரனாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். மற்றப் பெண்கள் எல்லோரும் தங்கள் அன்புக் கணவன் தன்னைவிட ஒரு சதவிகிதமாவது அறிவு கூடுதலாகவும், தன்னிடத்தில் உண்மையுள்ளவனாகவும், நேர்மையுள்ளவனாகவும், எல்லாவற்றையும் விட தன்னைப் புரிந்து கொண்டு பெருந்தன்மையுடன் நடக்கும் கணவனாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.
2. தனக்கும் தன் குழந்தைக்கும், மிகுந்த பாதுகாவலனாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு உடைமாற்றி விடுவது, கூட்டுக்குடும்பங்களில் தனியாக இருக்கும் போது, "இன்று நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?" என்பன போன்ற மனதுக்கு இதமளிக்கும் வார்த்தைகளைப் பேசுபவரையும், எல்லாவற்றிலும் சரியான நேரத்தைக் கடைப்பிடிப்பவரையும் கணவனாக வர் எதிர்பார்க்கிறார்கள்.
3. கணவன் குறைந்த சம்பளம் வாங்குகிறவன் என்றாலும், தனது கணவன் ஏழையாக இருந்தாலும் பரவாயில்லை, 'நானும் ஒரு கை கொடுக்கிறேன். என்னைப் புரிந்து கொண்டு என் உணர்வுகளை மதித்துக் கடைசிவரை இனிய இல்லறத்தைத் தொடர்ந்து செல்லும் கணவனை' நிதமும் உள்ளுக்குள் நினைத்து உருகுவாளாம் பெண்.
4. சில பெண்கள் தங்கள் கணவனைத் திருமணத்திற்குப் பிறகு மீண்டும் படிக்க வைத்தோ அல்லது பெரிய தொழில்களுக்கு ஆலோசனை வழங்கியோ அவனது திறமையையும், தகுதியையும் உயர்த்தியோ விட வேண்டும் என்று நினைக்கிறார்களாம்.
5. முதல்தரமான குணமுள்ள, பெருந்தன்மையான சுபாவம் கொண்ட கணவனைத்தான் அடைய வேண்டும் என்று நினைக்கிறாள். ஒழுக்கம், நேர்மை, தற்புகழ்ச்சி இல்லாமை, நன்கு உடை உடுத்திக் கம்பீரமாகத் தெரிய வேண்டும் என்றும் பெண் விரும்புகிறாள்.
6. பணம், படிப்பு உருவத்தோற்றம் ஆகியவை சரியாக அமையாவிட்டாலும் வரப் போகிற கணவன் தன்னைப் புரிந்து கொண்டு, மென்மையான உள்ளத்துடன் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளும் கணவன் கிடைத்தாலே அவனையே தன் அன்பால் மேலும் வசப்படுத்தி அவனுடன் இறுதிவரை வாழ்ந்துவிட எண்ணுகிறாளாம் பெண்.

# சிரிப்புக்குள் குணம் தெரியும்

சிரிப்பில் பலவகை உண்டு. வாய் விட்டுச் சிரிப்பது, அடக்கிக் கொண்டு திணறுவது, விட்டுவிட்டுச் சிரிப்பது என்று எவ்வளவோ விதமாகப் பலரிடம் காணப்படும்.



மனம் விட்டுச் சிரிப்பதுதான் விரும்பத்தக்கது. தொண்டையின் ஆழத்திலிருந்து வர வர அதிகரித்துக் கொண்டே போகும். கடைசியில் புதுப் புன்னகையில் முடியும். இவ்வாறு சிரிப்பவர்கள் தாராள மனப்பான்மை கொண்டவர்கள். உற்சாகமானவர்கள். மிருதுவான இயல்பும், எதிரிகளிடமும் அன்பாக நடந்து கொள்வதும் இவர்களது பண்பு. வியாபாரத் தொடர்பில் கண்டிப்பாக இருந்தாலும், கடுமையாக இருக்கமாட்டார்கள். எல்லோரிடமும் நாணயமாக நடந்து கொள்வார். தம்மைப் பற்றிப் பெருமையாகக் கருதிய போதிலும் கர்வத்தை இவர்களிடம் காணமுடியாது. எதையும் எளிதாக எடுத்துக் கொள்வார். பொறுமையை இழந்து விடாமலும், அவசரப்படாமலும் தமது காரியங்களைச் செய்வார்.

தொடர்ச்சியாக இல்லாமல் விக்கல் போல் விட்டுவிட்டுச் சிரிப்பது சிலரது வழக்கம். இவர்கள் சற்றுத் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள். மனம் குழம்பியவர்கள். தம்மிடம் முழு நம்பிக்கை இல்லாதவர்கள். எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். இலட்சியவாதி.

உச்சஸ்தாயியில் ஒலிக்கும் இசையைப் போல் சில பெண்கள் இனிமையாகச் சிரிப்பார்கள். நிதானமான குணம் கொண்டவர்களைக் குறிப்பது இது. கற்பனை வளமும், நகைச்சுவை உணர்வும் கொண்டவர்கள். விரைவாகச் செயற்படுவார்கள். விரைவில் பொறுமையை இழந்துவிட மாட்டார்கள்.

ஹா...ஹா....ஹா.... என்று உரக்க வாய்விட்டுச் சிரிப்பவர்கள், பேசலாமா என்று முடிவு செய்வதற்கே அதிக நேரம் எடுத்துக் கொள்பவர்கள். சட்டென்று எதிலும் இறங்கி விட மாட்டார்கள். இவர் இவ்வாறு கவனமாக நடந்து கொள்வதை ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாதவர் என்று தவறாக எண்ணி விடுவதுமுண்டு. ஆனால் அவர் எடுக்கும் எந்த முடிவும் தவறாக இருப்பதில்லை. இத்தகைய சிரிப்பு மார்பிலிருந்து வெளிப்படும்.

எரிமலை குமுறுவதைப் போல வயிற்றிலிருந்து புறப்படும் சிரிப்பொலியை வெளிப்படுத்துவது தமது சொந்த சௌகரியத்தில் அதிக கவனம் செலுத்துவதைக் குறிப்பதாகும். பிறர் கடுமையாக வேலை செய்வதைப் பார்த்து இவருடைய மனச்சாட்சி உறுத்துவதில்லை. மேலும் அவர்களை ஊக்குவிப்பார். திருப்தியாகச் சாப்பிட்டு உணவு ஜீரணமாகும் வரை ஓய்வு எடுத்துக் கொள்வதைப் பெரிதும் விரும்புகிறவர்.

சிரிப்பை அடக்கிக் கொண்டு திணறுகிறவர்கள் ஒரு ரகம். வாயை இறுக மூடிக் கொண்ட போதிலும் மெல்லிய ஒலிகள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். தம்மைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் பிறர் விஷயங்களில் தலையிடுகிறவர்கள். அறிவுக்குப் பொருந்தாத பல காரியங்களைச் செய்து கொண்டிருப்பார். இத்தகையவர்களில் ஆண்களை விடப் பெண்களே அதிகம்.

சிலர் சிரிக்கும் போது முகமெல்லாம் சிவந்துவிடும். அவர் சுதந்திரமான இயல்பு கொண்டவர். தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பாதவர். அவருக்கு அவசியமென்று தோன்றினால் சில விஷயங்களில் விடாப்பிடியாக இருப்பார். சிலர் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. ஏதாவது ஒரு பிரச்சனைக்கு அவரை நிர்ப்பந்தப் படுத்தினால் சுலபமாக அதற்குத் தீர்வு கண்டு விடுவார்.

# கோபம் கொஞ்சம் தேவை!

நீங்கள் வாழ்வில் வெற்றிபெறக் கோபம் அவசியம்!

என்ன இது? எல்லாரும், கோபம் வேண்டாம்; கோபப்படக்கூடாது என்றல்லவா சொல்வார்கள்? நீங்கள் என்னவென்றால் வெற்றி பெற வேண்டுமா? கோபப்படுங்கள் என்று சொல்கிறீர்களே? என்று ஆச்சரியப் படுகிறீர்களா?

'சினம் சேர்ந்தாரைக் கொல்லி', 'தன்னைத் தான் காக்கின் சினம் காக்க', 'செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்' என்றெல்லாம் வள்ளுவர் சினத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு' என்று இயேசுநாதர் கூறியிருக்கிறார்.

மகாத்மா காந்தியும் அஹிம்சையை வலியுறுத்தியுள்ளார். இப்படி எல்லாரும் கூறும்போது, நீங்கள் மட்டும் கோபப்படுங்கள் என்று கூறுவதை நாம் ஏற்க மாட்டோம் என்று சொல்வீர்கள். ஆனால் சற்று யோசித்துப்பாருங்கள்.

'என் தந்தையின் இல்லத்தை வியாபார கூடம் ஆக்காதீர்கள்' என்று கோபம் கொண்டு சாட்டையால் அடித்து வியாபாரிகளை விரட்டினார் இயேசு.


அஹிம்சாவாதியான காந்தியடிகள் தான் இந்தியாவை வெள்ளையரிடமிருந்து மீட்டே தீருவது என்று கோபம்கொண்டு 'வெள்ளையனே வெளியேறு' என்று போராடினார்.

எனவே கோபப்படுங்கள். கோபப்படும் போது சாதித்து முடிப்பதற்கான தன்மை உங்கள் உடலில் ஏற்படும். இரத்தம் சூடேறும். உடல் முறுக்கேறும். மனம் வெற்றிக்கான வழியை உருவாக்கும்.

கோபப்படுங்கள்! அது சாதிப்பதற்கான கோபமாக இருக்க வேண்டும். அவசியமான கோபமாக இருக்கவேண்டும். எடுத்ததற்கெல்லாம் கோபப்பட்டால் அதனால் அழிவு தான் ஏற்படும்.

வீட்டில் சாப்பாடு சரியில்லை என்று கோபப்படாதீர்கள். உண்மையாக ஒருவர் எப்போது கோபப்படவேண்டும் என்றால், கண்முன்னே கொடுமை நடக்கும்போது, அதனைக் கண்டு கோபப்படவேண்டும். குமுறி எழ வேண்டும். நமக்கென்ன என்று கண்டும் காணாமல் இருக்கக்கூடாது.

லஞ்சம் வாங்குபவர்களைப் பார்த்துக் கோபப்படுங்கள், பெண்களை விபச்சாரியாக்குபவர்களைப் பார்த்துக் கோபப்படுங்கள். பெரிய பதவிகளில் இருந்து அடாவடித்தனங்கள் செய்பவர்களைப் பார்த்துக் கோபப் படுங்கள். சாதியுங்கள்! சரித்திரம் படையுங்கள்! உங்கள் கோபம் இவற்றிற்குப் பயன்படட்டும்.



# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது–சுகந்தினி)

### புளி உப்புமா

இரண்டு ஆழாக்கு அரிசிமாவில் எலுமிச்சம் பழ அளவு புளியைக் கரைத்து தேவையான அளவு புளிநீரும், உப்பும் சேர்த்து நன்கு கெட்டியாக மாவைப் பிசைந்து வைத்துக் கொள்ளவும்.

வாணலில் இரண்டு கரண்டி எண்ணெய் விட்டு, கடுகு ஒரு தேக்கரண்டி, இரண்டு கரண்டி கடலைப்பருப்பு, உளுத்தப்பருப்பு போட்டுச் சிவந்ததும், ஆறு வற்றல் மிளகாயைப் போட்டுத் தாளித்ததும், பிசைந்த மாவைப் போட்டு உதிர்த்தாற்போல் கிளறிக் கொண்டே இருக்கவும். தேவையான அளவு எண்ணெய் ஊற்றி நன்கு மொரமொர என்று ஆனதும் இறக்கவும்.

# வாரம் ஒரு இயற்கை வைத்தியம்

### நரம்புத் தளர்ச்சி

கோப்பி, தேனீர் ஆகியன அடிக்கடி அருந்துவதாலும், வெந்நீரிலேயே குளிப்பதாலும் நரம்புகள் தளர்ச்சியடைகின்றன. எனவே இந்நோயைத் தவிர்க்க கோப்பி, தேனீர் அருந்தும் பழக்கத்தை நிறுத்தி, சுக்குக் கோப்பி, மல்லிக்கோப்பி போன்ற- நரம்பைப் பாதிக்காத பானங்களை அருந்தலாம்.

மேலும், கீழ்க்கண்டவாறு தங்களது உணவுத் திட்டத்தை வகுத்து விரைவில் குணம் பெறலாம்:

<u>காலை 6 மணி–</u>

அறுகம்புல்சாறு, வல்லாரை இலைச் சாறு, நெல்லிச்சாறு ஏதேனும் ஒன்று அருந்தலாம்.

<u>காலை 9 மணி–</u>

முளை வந்த தானியங்களும், பழங்களும் உண்ணலாம்.

<u>மதியம் 1 மணி–</u>

பசுங்காய்கறிக் கலவையும், பழங்களும் உண்ணலாம். இல்லையேல் இனிப்பு அவல், கார அவல் உண்ணலாம்.

<u>மாலை 4 மணி–</u>

அப்பிள் பழச்சாறு, தேன் கலந்த எலுமிச்சம் பழச்சாறு ஏதேனும் ஒன்று அருந்தலாம்.

<u>இரவு 7 மணி–</u>

தேங்காயும், பழங்களும் உண்ணலாம்.

<u>பொது:</u>

நோய் குணமாகும் வரை நாள்தோறும் எனிமா எடுத்தல், சூரியஒளிக்குளியல் எடுத்தல் நல்லது.

அத்திப்பழம் இந்நோயைக் குணப்படுத்த வல்லது. பப்பாளிப்பழத்துடன் வெங்காயச் சாறு, தேன் கலந்து சாப்பிடுவது இந்நோயை விரைவில் குணப்படுத்தும். சுமார் 15 முதல் 30 நாட்களில் குணப்படுத்தலாம்.

நாள்தோறும் யோகாசனங்கள் செய்யலாம்.

# வயிற்றுக்குள் ஒரு ஊசி



1968ம் ஆண்டு பிரெண்டாவுக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது. அதன்பிறகு தான் பிரெண்டாவுக்குத் தலைவலியே தொடங்கியது.

பிரெண்டாவால் முன்பு போல் உட்கார முடியவில்லை. குழந்தைக்குப் பாலூட்ட முடியவில்லை. எடை குறைந்தது. வயிற்றில் தொடர்ந்து வலி இருந்தது. வயிற்றில் இரத்தக் கசிவு இருப்பதாக டாக்டர் தெரிவித்தார். ஆனால் ஏன் என்று எந்த வித மருத்துவ சோதனைகளும் செய்து கொள்ளவில்லை பிரெண்டா.

சுமார் இருபது ஆண்டுகள் இரண்டு பிள்ளைகளுடன் தவித்தபடியே வாழ்க்கையை ஓட்டினார் பிரெண்டா. திடீரென இடுப்பில் மூட்டு வலி அதிகமாகி எலும்பு நிபுணரிடம் போன பிரெண்டா எக்ஸ்–ரே எடுக்க டாக்டரால் வற்புறுத்தப்பட்டார்.

இடுப்புப் பகுதியை எக்ஸ்–ரே எடுத்த போது பிரச்சனை என்னவென்று புரிந்தது. குதிரை லாட வடிவிலான ஒப்பரேஷன் ஊசி இடுப்பு மூட்டில் சிக்கி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

பிரசவத்தின்போது தையல் போட்ட டாக்டர், கவனமாக ஊசியையும் உள்ளே வைத்துத் தையல் போட்டுவிட்டார். அது தான் பிரெண்டாவின் இந்த அவஸ்தைகளுக்கு எல்லாம் காரணமாகும்.

பிறகென்ன; இரண்டு அறுவை சிகிச்சைகள் மூலம் ஊசி அகற்றப்பட்டது. கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் கழித்து– 1987ம் ஆண்டு ஊசி அகற்றப்பட்டபின் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறார் பிரெண்டா.

நீதிகேட்டுப் போராடிய போது முதலில் 3000 பவுண்ஸ் (2,58,000 ரூபாய்) தருவதாக ஒப்புக்கொண்ட மருத்துவமனை, பின்னர் வெறும் 800 பவுண்ஸ் (68,800 ரூபாய்) மட்டும் கொடுத்து விட்டு ஒதுங்கிக் கொண்டது. மேலே வழக்குத் தொடர பணமில்லாதபடியால் பிரெண்டா மௌனமாகி விட்டாராம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AJ

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-10-1996**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# லிப்ஸ்ரிக் தகவல்கள்

லிப்ஸ்ரிக் தடவுவதற்கு முன் உதடுகளில் ஈரமோ, பழைய லிப்ஸ்ரிக்கின் சாயமோ இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பிறகு சிறிதளவு டல்கம் பவுடரை எடுத்து உதடுகளின் ஓரங்களில் லேசாகத் தடவவேண்டும். லிப்ஸ்ரிக் தடவும்போது அது உதடுகளின் ஓரங்களைத் தாண்டமல் இருக்க உதவும். பிறகு லிப் பிரஷ்ஷின் உதவியால் லிப்ஸ்ரிக்கை எடுத்து உதடுகளில் தடவவேண்டும்.

முதலில் மேல் உதட்டின் நடுவில் இருந்து தொடங்கி வாயின் ஓரம் வரை வரைய வேண்டும். மேலுதட்டின் மேற்புறம் தடவிய பிறகு மீதமுள்ள இடங்களில் தடவ வேண்டும். இதே போன்று கீழுதட்டிலும் பூச வேண்டும். மேலுதட்டிலும், கீழுதட்டிலும் தனித்தனியாகப் பூச வேண்டுமே தவிர, ஒரு உதட்டில் பூசி, மற்றொன்றின் மீது வைத்து அழுத்தக்கூடாது. சிரிக்கும்போதோ, பேசும்போதோ, உதடுகள் விரியும்போது, எந்த இடத்திலும் விட்டுப்போகாதபடி லிப்ஸ்ரிக்கைத் தடவவேண்டும். முழுவதும் தடவி முடித்ததும் சில நிமிடங்களுக்கு உதடுகளை ஒன்றோடொன்று ஒட்டாதபடி பிரித்து வைத்திருந்தால், லிப்ஸ்டிக் நீண்ட நேரத்திற்கு அழியாமல் இருக்கும். உதடுகள் பளபளப்பாக இருக்க வேண்டும் என்றால் லிப்கிளாஸ் உபயோகிக்கலாம்.

இதோ மேலும் சில லிப்ஸ்ரிக் டிப்ஸ்:



- ★ பெரிய அகன்ற உதடுகளை உடையவர்கள் கரும் நிற லிப்ஸ்ரிக்கள் உபயோகிப்பதைத் தவிர்த்து வெளிர் நிறங்களை உபயோகிக்கலாம்.
- ★ இயற்கையிலேயே சிவந்த உதடுகளை வாய்க்கப் பெற்றவர்கள் வண்ண லிப்ஸ்ரிக்குகளை உபயோகிப்பதைத் தவிர்த்து, நிறமற்ற லிப்ஸ்ரிக்கை உபயோகிக்கலாம்.
- ★ அடிக்கடி உதடுகளை நாக்கினால் ஈரப்படுத்திக் கொண்டே இருந்தால், உதடுகளில் உள்ள இயற்கையான எண்ணெய்ப்பசை நீங்கி உதடுகள் வறண்டு போகவும், ஒவ்வாமை (அலர்ஜி) ஏற்படவும் கூடும். எனவே அந்தப் பழக்கத்தைத் தவிர்ப்பது நல்லது.
- ★ லிப்ஸ்ரிக்கை அழிக்க முதலில் உதடுகளின் மீது சிறிதளவு பாலாடையைத் தடவி, பிறகு மென்மையான டிஷ்யு பேப்பரால் துடைத்தெடுக்க வேண்டும்.
- ★ கிளிசரினும், தண்ணீரும் கலந்த கலவையில் தினமும் உதடுகளை மசாஜ் செய்துவர, அவை மிருதுவாகவும், வழவழப்பாகவும் மாறும். பாலாடையில் மசாஜ் செய்துவர, உதடுகளின் ஓரங்களில் உள்ள கறுப்பு மறையும்.
- ★ தினமும் இரவு படுப்பதற்கு முன் உதடுகளில் கொத்தமல்லி இலைச் சாற்றைத் தடவி வந்தால், நாளடைவில் உதடுகள் கோவ்வைப்பழம் போல சிவப்பாக மாறும்.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**பெல்மதுல்லை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**மு. சத்திய தேவி**

நாரங்கொட தோட்டம், பெல்மதுல்லை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## புலராத (புது) வசந்தம்

இனியவளே!
இரண்டு மாதத்தில்
இன்னொரு புதிய வசந்தம்
இந்த
அரபு மண்ணில் வந்துவிடும்;

ஆறாண்டுகள் கழிந்தும் சொந்த
மண்ணிற்கு வராது போனது
நான் மட்டுமல்ல;
இன்னும் எத்தனை 'நான்'களுமோ?
எனக்குள் உன் ரேகைகள் போல்,
அவர்களுக்குள்ளும்
என்ன காயங்களோ?

மாசம் ஒருதரம் வரும்
உன்னிடமிருந்து கடிதம்!
ஆறு வருஷ
அர்த்த ராத்திரிகள் ஒவ்வொன்றிலும்
நீராடும் என் தலையணைகள்;
அன்றைய தினம் மட்டும்
உலர்ந்து ஓய்வெடுத்துக் கொள்ளும்!

இந்த மூன்று மாசத்திலும்
எதுவுமே வரவில்லை; உன்னிடமிருந்து
இன்று–
அம்மாவின் கடிதம் வந்தது.

விரும்பி
போட்டுக் கொள்ளவில்லை விலங்கை;
வில்லங்கமாக
நுகத்தில் பூட்டப்பட்டிருக்கிறாய்!
ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் மனசு
இழுத்துக் கொண்டு போவதுதானே நியதி?
காதல் பறவைகள் ஒரு போதும்
கண்ணியில் சிக்குவதில்லை;
காலம் எறிந்த கற்களால்தான்
காயம்பட்டிருக்கின்றன!

ஒரு
சூரியக் கதிர் நடவடிக்கையில்
அதிகாரப் பரவலாக்கலின்
சூடே தணிந்து விட்டபோது,
ஆறு வருஷ நிர்ப்பந்தத்தில்
உனக்குள் நீ உடைந்து போனதிலும்
என் நினைவுகளை
உதிர்த்துப் போட்டதிலும்
தப்பொன்றும் இல்லைதான்!

இலவு காத்த கிளியாய்
எத்தனை நாள்தான்
நீ உபவாசமிருப்பாய்?

இன்னும் இரண்டு மாதத்தில்
இன்னொரு புதிய வசந்தம்
இந்த மண்ணில் வரும்!

அதிகாலையில் பனி மூட்டமும்
அந்திவேளையில்
மென் மழை தூறலும்
நள்ளிரவில் கூரையில் உதிரும்
வெண்பனிக் கட்டிகளும்
இம்முறையும்
புது வசந்தம் கொண்டுவரும்.

இரா. செபமாலை– சவுதி அரேபியா.

## உத்தியோகப் பற்றற்ற என் இரண்டாவது காதல் தூது விடுக்கு...!

நமது உறவுகள்
உன் மனதில்
விதைத்த ஆசை
விதையினால்
உனக்குள் நானோர்
விருட்சமாகியிருக்கலாம்!

பருவம் வழங்கிய
கனவுக் கரும் பலகையில்,
உன்னை உன்
ஜீவிதமாய்– நீ
வரைந்து பார்த்திருக்கலாம்!

இளமை உன்
எண்ணக் கழுத்தில்
ஏற்றிய உணர்வுப்
பூமாலைகளால்,
நீ எனது
இதயத்தொகுதியில்
காதலிப்பதவிக்குப்
போட்டியிட்டு
கல்யாணத் தேர்தல்
காணும் முன்பே
தோற்றுப் போயிருக்கலாம்!

காதல் ஆட்சியில்
தேர்தலே இன்றி இதய
சிம்மாசனத்தில்
குந்திவிட்ட என்
மகாலக்ஷ்மியின்
பதவி கண்டு
வெகுண்டெழுந்தவளே...!

இதயத்தில்
முகையவிழ்த்து
கண்களில் விரிந்த
உன் காதல் மலரை
இமைகளால்
மூடவேண்டிய
நிர்ப்பந்தத்திற்காய்
என் மீது பழிபோடும்
தோழியே...!

நீ கண்ணகியாக
இருக்கலாம்; என்றாலும்
உன் கவிதைகளால்
எரிந்து போக,
என்னிதய மொன்றும்
மதுரையல்ல!

முல்லைக் கொடியாக
இருக்கும் உனக்கு
வழங்கிட என்னிடம்
இன்னொரு
இதயத்தேருமில்லை!

பூண்டுலோயா–
மெய்யன் நடராஜ்.

## இனி எங்களை எங்கே புதைப்பது?

நாங்களோ
பட்டிமாடுகள்–
எங்களை
மேய்ப்பவர்கள்
கையிலே
சவுக்கோ
தடிகளோ
இல்லை;
துப்பாக்கி!

எங்களின்
உணவு
தவிடும்
புண்ணாக்கும்
அல்ல;
புழுக்கூடுகள்
நிறைந்த
அரிசியும்
மாவும்!

அதுவும்
வரிசைப்படி...!
பிந்தினால்
இல்லை!
பெருமூச்சோடு
வருவோம்;
நாங்களும்
அகதிகள்தான்!

தேன்கதலி
எலுமிச்சை
தோடை
பலா
என
வளமார்ந்த
எங்கள்
மண்ணில்
எருக்கலை
பூத்திருக்கு!

தென்னையிலே
விட்டமிட்டுத்
தேர்போல
ஊஞ்சல்கட்டி
சேலார் விழி
மாதர் கூடித்
தெம்மாங்குப்
பாட்டிசைத்துச்
சேர்ந்து விளை
ஆடிய மண்!

செம்மாங்
கனி குலுங்கித்
தித்திக்குந்
தேன் சுவைகள்
நிறைந்த
எங்கள்
மண்ணில்
கோரப்பசியில்
ஊளையிடும்
நாயோசை!

நாயென்ன...?
நாங்களுந்தான்;
உழைப்பில்லை,
உணவில்லை,
உறங்க ஒரு
வீடில்லை;
அரைகுறைப்
பட்டினியின்
அவல முனகல்.

எங்களுக்கும்
குடும்பக்
கட்டுப்பாடு!
இதுவுமோர்
இன அழிப்பு!
ஏலுமானவரை
பிள்ளைகள்
பெறுவோம்;
ஏலாவிட்டால்
சாவோம்!

இருப்பவர்கள்
எடுத்து
வளர்க்கட்டும்!
எங்கள் தமிழிற்கு
நாங்கள் செய்யும்
தியாகம்
இதுதான்!

செத்தாலும்
புதைக்க
இடமில்லை;
ஏற்கனவே
செத்தபிணங்களால்
எங்கள் மண்
நிரம்பி
விட்டது– இனி
எங்களை
எங்கே
புதைப்பது?

முல்லைக்கவி.

## வழமையானது

மெல்ல மெல்ல
அச்சம்
அதிகரிக்கும்.
**
யார்
யாரால்.....
எப்போது.....
எங்கே–எப்படி.....?
*
யாருக்குத் தெரியும்!
**
உன் காலும்
என் கையும்
ஒரு பையில் அள்ள
'ஒன்று' ஆவோம்!
**

அனுதாபமும்
அறிக்கைகளும்
வீடுகளில்
குவியும்!
**
"ச்சே...
இப்படியாமே....?"
எங்கும்
பேச்சாகும்!
**
"இதை நாம்
வன்மையாகக்
கண்டிக்கிறோம்...!"
அறிக்கை வரும்.
**

"மிலேச்சத்தனமானது
மிருகத்தனமானது
ஆழ்ந்த
அனுதாபங்கள்"
**
விடயம்
மெல்ல
அமுங்கும்
அடுத்தது
எழும்வரை
**

சுபா வரன்– கண்டி.

## பிணங்களும் பிணமும்

"நீ"
உடுத்தியிருந்த
சாரனும் சட்டையும்
முன்னர் ஏதோ இரு நிறங்களில்
வாழ்ந்திருக்க வேண்டும்!
இன்று
நிறம் சொல்லத் தெரியாத
உருவில்.....!
**

கண்ணீரில் வாழ்வை அலம்பி,
துன்ப(ச்) சகதியில் துவண்டு,
வறுமை வேர்களுள் சிக்குண்டு,–உன்
சதைகள் கிழிந்து
இரத்தம் வழிந்தும் வழியாமலும்,
இறுகி(க்) கட்டியாகி
ஈக்களும் கொசுக்களும்–உன்
காயங்களை
பருந்தாக வட்டமிட.....!

பிதுங்கி நின்ற–உன்
கண்களும்,
பயமாக(க்)கடிபட்ட–உன்
பற்களுக்கிடையே
நாக்கு வெளித் தள்ளியிருக்க,
கடைவாயில் குமிழி குமிழியாக
எச்சில் நுரைத்திருக்க;
நீல நிறம் பூசி(க்) கொண்டு,
வெளிறியிருக்கும் உடம்பு–உன்
சொந்தங்களுக்கு அறுந்து போன கயிறு!

**
உன் பெயர் இனி
மனிதர்களுக்கு முக்கியமில்லை;
அது–உன்
கடைசி மூச்சுடன்
அழிந்து போயிற்று!
உயிருள்ள பிணங்கள்
உனக்கு(ச்) சூட்டிய பெயர்– பிணம்!

மாவனல்லை– அப்பால்.



↑ அமரர் ராஜீவ்காந்தியுடன் நின்று புன்னகைக்கும் இந்தச் சுட்டிக்குழந்தை யார் என்று தெரிகிறதா? இன்று கலக்கிக் கொண்டிருக்கும் முன்னணி நடிகை மீனாதான். அருகே மீனாவின் அம்மா.

## அந்த நாள் ஞாபகம்



பரிசுக்கோப்பையுடன் காணப்படும் இந்தக் கொஞ்சும் குழந்தை இன்றைய இந்தித் திரையுலக நம்பர் வன் நடிகை மாதுரி டிக்ஷித்.







↑ நடிகர் ரஜினிகாந்த இப்படி வயதான தோற்றத்துடன் காட்சிதருவது எந்தப்படத்தில்? என்று யோசிக்கிறீர்களா? தப்பு! ரஜினிகாந்தின் அப்பா ராஜோஜிராவின் படம்தான் இது. அருகில் இருப்பது ரஜினியின் அம்மா ராம்பாய்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.09.96 தொடக்கம் 05.10.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன், இராகு. |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி, (வக்கிரம்) |
| மீனம் | - கேது. |
| கர்க்கடகம் | - வெள்ளி, செவ்வாய். |

சுபநேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது

★ சந்திரன்- மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | மனக் குறையதிகம், உறவினர் பழி. | மு.ப. 10 மணி |
| புதன்- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பொருள் வரவு குன்றும். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், கடன் படல். | பகல் 11 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. 3 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | வீண் குழப்பம், கடன் படல். | பி.ப. 1 மணி |
| புதன்- | துன்ப மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், பயனுள்ள செயல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | மு.ப. 9 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, அற்ப இலாபம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், மனக் குழப்பம். | பி.ப. 1 மணி |
| புதன்- | இனசன நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியரால் நன்மை, பணவரவு. | பி.ப. 4 மணி |
| சனி- | வீண் தொல்லை, பெரியார் நட்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நஷ்டம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | துன்பம் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. 10 மணி |
| புதன்- | எடுத்தகாரியம் வெற்றி, மனமகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, பணவரவு. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- | மனக் கலக்கம், உறவினர் உதவி. | பகல் 2 மணி |
| சனி- | தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், அலைச்சல் மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | கடன் தொல்லை, மனப் பயம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | பிரயாணக் கஷ்டம், இனசன நன்மை. | பி.ப. 3 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பலவித பேறு | பகல் 11 மணி |
| வியாழன்- | ஆடம்பர வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | இனசன நன்மை, பொருள் பேறு. | மு.ப. 10 மணி |
| சனி- | தொழில் விருத்தி, பண வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- | இனசன நன்மை, கௌரவம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- | பணவரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், தொழில் மந்தம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 3 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், பயனுள்ள செயல். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, பண வரவு. | பகல் 12 மணி |
| புதன் - | காரிய சித்தி, கௌரவம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, கடன் படல். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- | பெரியோர் பகை, செலவு மிகுதி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- | பொருள் விரயம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| சனி- | வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பொருள்வரவு குன்றும். | பி.ப. 3 மணி |
| திங்கள்- | இனசன நன்மை, கௌரவம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| புதன்- | மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வீண் முயற்சி, அந்நியர் உதவி. | மு.ப. 10 மணி |
| சனி- | புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கடன் சுமை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | பிரயாண மிகுதி, மனக் குழப்பம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் துன்பம், மனப் பயம். | பி.ப. 2 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, மனச்சுமை நீங்கும். | காலை 8 மணி |
| வியாழன்- | வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் கஷ்டம், அந்நியர் சகவாசம். | பி.ப. 2 மணி |
| சனி- | பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | இனசன நன்மை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பொருள் பேறு, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | முயற்சி பலிதம், பெரியோர் நட்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, பிரயாணக் கஷ்டம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழிலில் பிரச்சனை, மனக் குழப்பம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, பணவரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி. | பகல் 11 மணி |
| வியாழன்- | தொழில் கேடு, மனப்பயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிடவாசம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- | துயர் அதிகம், உயர்ந்த வாழ்வு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4


படிப்பகம்

www.padippakam.com





## ஒழுக்கம் உயர்வு தரும்

அன்பில் நிறைந்த சிறுவர்களே
அறிவாய் கேட்டு நடப்பீரே.
நாமும் உயர்வாய் வாழ்வதற்கே
நாட வேண்டும் ஒழுக்கத்தையே.

பெற்றார் சொல்லைக் கேட்டிடுவீர்
பெரியோர் மனதை வென்றிடுவீர்.
ஆசான் புகட்டும் பாடங்களை
ஆவலாய் கேட்டு பயின்றிடுவீர்.

உண்மையை நிதமும் பேசிடுவீர்
பொய்யினை கனவிலும் மறந்திடுவீர்
நல்லதை நாளும் செய்திடுவீர்
தீயதை கண்டு விலகிடுவீர்.

ஒழுக்கத்தில் உயர்ந்து வாழ்வோரே
உலகத்தில் சிறந்தோர் ஆவாரே
உயிரினும் மேலாய் ஒழுக்கத்தையே
வாழ்வினில் கொண்டு உயர்வோமே.

திருமதி.சிவமலர் மனோகரன்.

நாலு வகுப்பும் இங்கு ஒன்றே; இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்,
வேலை தவறிச் சிதைந்தே-செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி!
–சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை



# அக்பரும் பீர்பாலும்

முகலாயச் சக்கரவர்த்தி அக்பர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர். அவரது அவையில் இருக்கும் பீர்பால் இந்து மதத்தைச் சேர்ந்தவர். இருவரும் மதத்தால் வேறுபட்டிருந்தாலும் மனத்தால் ஒன்றுபட்டிருந்தனர்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் அக்பர், பீர்பாலிடம் இந்து மதத்தைப் பற்றியும், இந்து மதக் கடவுள்களைப் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொள்வார்.

ஒருநாள் ஓய்வாகத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார் அக்பர். அந்த நேரத்தில் பீர்பால் அவ்விடம் வந்தார்.

பீர்பாலைக் கண்ட அக்பர்,

"பீர்பால்! எங்களுக்கு அல்லாதான் கடவுள், கிறிஸ்தவர்களுக்கு இயேசு தான் கடவுள், பௌத்தர்களுக்கு புத்தர்தான் கடவுள். ஆனால் உங்களுக்கு மட்டும் ஏன் இத்தனை கடவுள்கள்?" என்று கேட்டார்.

"அரசே! எல்லாக் கடவுள்களும் ஒன்றுதான். அவரவர் விருப்பத்திற்கேற்ப அவரைப் பெயரிட்டு அழைக்கிறார்கள். ஆனால் எல்லாரும் ஒன்றுதான்" என்று கூறினார் பீர்பால்.

"இதனை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. சரியான முறையில் நீ எனக்கு நிரூபிக்காவிட்டால் இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார் அக்பர்.

"இப்பொழுதே உங்களுக்கு இதை நிரூபித்துக்காட்டுகிறேன்," என்ற பீர்பால், அரண்மனைச் சேவகர்களில் ஒருவனை அழைத்தான். அவனிடம் தன் தலைப்பாகையைக் கழற்றிக் காட்டி,

"இது என்ன?" என்று கேட்டார்.

அதற்கு அவன் "தலைப்பாகை," என்றான்.

சரி என்று அவனை அனுப்பி விட்டுத் தலைப்பாகையை அவிழ்த்துத் தோள்களில் போர்த்துக் கொண்ட பீர்பால், சிறிது நேரத்தின் பின்னர் அதே சேவகனை அழைத்தார். அவனைப்பார்த்து,

"இது என்ன?" என்று கேட்டார்.

"போர்வை," என்று பதிலளித்தான் சேவகன்.

அவனை அனுப்பியபின் தோள்களில் போர்த்தியிருந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டினார் பீர்பால். மூன்றாவது முறையாக அந்த சேவகனை மறுபடி கூப்பிட்டு,

"இது என்ன?" என்று கேட்டார்.

"இது வேட்டி," என்று பதிலளித்தான் சேவகன்.

அவன் சென்றதும் பீர்பால் அக்பரைப் பார்த்து,

"பார்த்தீர்களா அரசே! ஒரே ஒரு பொருள் இடத்திற்குத் தக்கவாறு பெயரில் மாற்றம் அடைகிறதென்று. இது ஒரு துணி. இது தலையில் இருக்கும் போது தலைப்பாகை என்று அழைக்கப்படுகிறது. தோள்களில் இருக்கும் போது போர்வையாக் மாறுகிறது. பின்னர் இடுப்புக்கு வந்ததும் வேட்டியாகி விடுகிறது.

இதைப் போலவே மழை நீர் வானத்தில் இருக்கும் போது மேகம் என்று அழைக்கப் படுகிறது. வானத்தில் இருந்து பொழியும் போது மழை என்று அழைக்கிறார்கள். மழை நீர் ஆற்றில் விழுந்து கடலில் கலந்தால் சமுத்திரமாகி விடுகிறது.

இதைப் போன்று தான் கடவுளும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படுகிறார். ஆனால் முடிவில் எல்லாமே ஒன்றுதான். இடத்திற்குத் தக்கவாறு கடவுளின் பெயர் மாறுபடுகிறது. அவ்வளவு தான்" என்று விளக்கமளித்தார் பீர்பால்.

பீர்பாலின் இந்தப் பதிலைக் கேட்ட அக்பர் பெரிதும் மகிழ்ந்தார்.

## வாரம் ஒரு நாடு

### போர்த்துக்கல்

| | |
|---|---|
| தலைநகர் | –லிஸ்பன் |
| பரப்பு | – 92,072 சதுர கிலோமீட்டர் |
| மக்கள் தொகை | – 1.03 கோடி |
| மொழி | – போர்த்துக்கீஸ் |
| எழுத்தறிவு | – 83% |
| சமயம் | – கிறிஸ்தவம் |
| நாணயம் | – எஸ்குடோ |
| தனிநபர் வருமானம் | – 7450 டொலர். |



**அமைவிடம்:-**

போர்த்துக்கல் ஒரு சிறிய செவ்வக வடிவமுடைய ஐபீரியம் தீபகற்பத்தின் தென் மேற்கு மூலையில் அமைந்துள்ள நாடு.

**வரலாறு:**

சுமார் 12ம் நூற்றாண்டில் இருந்து போர்த்துக்கல் சுதந்திர நாடாகவே உள்ளது. பல ஆண்டுகாலம் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளை தன்னடிப் படுத்தி ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது. போர்த்துக்கல். (1580–1640 வரை ஸ்பெயினின் ஆதிக்கம்) 1910 ல் குடியரசானது. 1932 முதல் 1968வரை அன்டனியோ ஸலாசரின் ஆட்சி. 1974ல் இராணுவக் கலவரம். 1975ல் தேர்தல். அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பாராளுமன்ற ஜனநாயகநாடு.

**பொருளாதாரம்:**

நாட்டின் 19 சதவிகித நிலம் காடுகளாகும். இக்காடுகளில் ஓக், செஸ்நட், கோர்க் முதலிய மரங்கள் அதிகளவில் உள்ளன. திராட்சைத் தோட்டம் எங்கும் நிறைந்துள்ளது. மது, ஒலிவ் எண்ணெய், பழங்கள் அதிகளவில் உற்பத்தியாகின்றன. முக்கிய கனிமப் பொருட்களான நிலக்கரி, செம்பு, வெண்களிமண், லிதியம், டிட்டானியம் போன்றவை இங்கு கிடைக்கின்றன. நெசவுப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், காகிதம் ஆகியவை உற்பத்திப் பொருட்கள். வைன், குங்கிலியம் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.10.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 160
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 158

பரிசுக்குரியவர்:
ஷ.ஃபியா பேகம்.
முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு–04.

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| செல்வி சாந்தபிரியா கோபாலசிங்கம்,<br>விபுலாநந்தா ம.க. தேசிகர் வீதி, காரைதீவு–10. | ஏ.ஸீ.எம். பாரிஸ்,<br>ஹிரும்புர குறுக்கு வீதி, காலி. |
| எஸ். டானியல் பிரசன்னா,<br>பரிசுத்த திரித்துவக் கல்லூரி, நுவரெலியா. | எஸ். அர்ச்சனா,<br>புனித சிசிலியா மகா வித்தியாலயம், மட்டக்களப்பு. |
| பத்மநாதன் பிரியா,<br>இரத்மலானை இந்துக்கல்லூரி. | எம். நஸ்லிக்,<br>3ம் குறுக்கு தெரு, 12ம் ஒழுங்கை, புத்தளம். |
| வி.கௌரிசங்கர்,<br>பிள்ளையார் கோவில் வீதி, குருமன்காடு. | செல்வி. எஸ். சர்மிளா,<br>நு/ நல்லாயன்-மகளிர் கல்லூரி, நுவரெலியா. |
| சி. வீணாதேவி,<br>நு/அ/சென் மேரிஸ் ம.க. பொகவந்தலாவ. | கே. பிரதாப்,<br>தொலவத்த, மாத்தளை. |

## ஒக்டோபஸ்

ஒக்டோபஸ் ஒரு கடல் வாழ் பிராணி. இவை பல அளவுகளில் காணப்படும். சில மனிதனின் கை அளவில் இருக்கும். எங்கே வேண்டுமானாலும் திருப்பக்கூடிய சம அளவிலான எட்டுக்கைகள் இதற்கு உண்டு. கைகளின் கீழ்ப்பகுதியில் இரண்டு வரிசையில் சதைத்துவாரங்கள் இருக்கும். எந்தப் பொருளையும் இறுக்கிப்பற்றிக் கொள்ள இது உதவும். ஒரு கிலோ மட்டுமே எடை கொண்ட ஒக்டோபஸால் 18 கிலோ எடையுள்ள ஒரு பொருளை அதிக பலத்துடன் இழுக்க முடியும். தண்ணீரில் மூழ்கி மரண மடையும் அளவுக்கு ஒரு மனிதனைத் தண்ணீருக்குள் வைத்திருக்க இதனால் முடியும்.

ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு நகரவும், நண்டு, மீன் போன்ற இரைகளைப் பிடிக்கவும், ஓடுகளை உடைக்கவும் தனது கைகளை ஒக்டோபஸ் பயன்படுத்தும். சில நேரங்களில் அதன் கைகள் துண்டிக்கப்பட்டால், உடனே அந்த இடத்தில் இன்னொரு கை வளர்ந்து விடும்.

ஒக்டோபஸ் 50 ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 80 ஆயிரம் வரை முட்டைகள் இடும். அந்த முட்டைகளை பெண்



ஒக்டோபஸ் அடைகாக்கும். அந்தச் சமயத்தில் அது எதுவும் சாப்பிடாது. அடைகாத்து முடிந்தவுடன் தாய் ஒக்டோபஸ் இறந்து விடும்.

சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்ப தன் நிறத்தை ஒக்டோபஸ் மாற்றிக் கொள்ளும். இது தனது உருவத்தைக் கூட மாற்றிக் கொள்ளும். எதிரி வந்தால் மை போன்ற கறுப்பு நிறத் திரவத்தை உமிழும். உடனே தண்ணீர் கறுப்பாகும். எதிரியால் இதைப் பார்க்க முடியாது. ஒக்டோபஸ் சுலபமாகத் தப்பி விடும்.

இந்திய பசுபிக் கடலில் காணப்படும் ஒக்டோபஸ்தான் மிக அபாயமானது. இவை கோபமடையும்போது தனது நிறத்தை நீல நிறமாக மாற்றிக் கொள்ளும்.

ஒக்டோபஸ்களுக்கு மூளை மிகப் பெரியது. இதற்கு இலகுவாகப் பயிற்சி கொடுத்துப் பழக்கிக் கொள்ளலாம்.

இதற்கு மூன்று இதயங்கள் உண்டு. இதன் மூலம் உடல் முழுவதும் இரத்தத்தைச் செலுத்தும்.

சீனா, மத்தியதரைக்கடல், வட அமெரிக்கா கடல், மேற்கிந்தியத் தீவுகளில் இவை அதிகம் உள்ளன.

## யாருக்கு ஆயுள் அதிகம்?

நமது உடலின் இடதுபக்கத்தை மூளையின் வலது பக்கம் ஆட்சி செய்கின்றது. அதே போல் வலது பக்கத்தின் செயற்பாடுகளை மூளையின் இடது பக்கம் பொறுப்பேற்கிறது. மனிதர்களில் பெரும்பாலானவர்களுக்கு இடது பக்க மூளை சிறப்பான வளர்ச்சி பெறுவதனால், வலது கைப்பழக்கம் உள்ளவர்களாக விளங்குகின்றார்கள். இடது கையை விட வலதுகையால் இவர்கள் வேலையை எளிதாகச் செய்வார்கள். சிலருக்கு மூளையின் வலது பக்கம் நன்கு வளர்ச்சி பெற்றதாக இருக்கும். இவர்கள் இடது கைப்பழக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

உலகில் ஆறு பேரில் ஒருவர் இடது கைப்பழக்கம் உள்ளவர் என்று ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. மக்களின் ஏராளமான பேர் வலது கைப்பழக்கம் உடையவர்களாக இருப்பது ஏன் என்று இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் வலது கைப் பழக்கம் உடையவர்கள் இடது கைப்பழக்கம் உடையவர்களைக் காட்டிலும் அதிக காலம் உயிருடன் வாழ்கிறார்கள் என்ற ஒரு கருத்து நிலவி வருகிறதது.

வலது கைப்பழக்கம் உடைய போர்வீரன் போரிடும்போது, வலது கையில் ஆயுதத்தையும், இடது கையில் பாதுகாப்புக் கேடயத்தையும் வைத்திருப்பான். உடலில் இதயம் இடது பக்கத்தில் உள்ளது. இடது கையில் பாதுகாப்புக் கேடயம் தாங்கிப் போரிட்டுக் காயமடைந்தவர்கள் பலர் உயிர் பிழைத்திருக்கிறார்கள்.




ஆனால் இடது கைப்பழக்கம் உடையவனோ, ஆயுதத்தை இடது கையிலும், வலது கையில் பாதுகாப்புக் கேடயத்தையும் வைத்துப் போரிட்டிருப்பான். இதனால் இவனுக்கு இதயத்தைச் சுற்றிக் காயம்பட அவன் இறந்திருப்பான். இவ்வாறு முன்னர் கூறப்பட்டது. இதற்கான காரணமும் இன்னமும் சரியாக அறியப்படவில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# அசத்தல் 3

# மறுபடி

"மிஸ்டர் பிராசிகியூட்டர், வழக்கை முதல்ல சுருக்கமா சொல்லிடுங்க."

"யெஸ் யுவர் ஆனர். மதன் இந்த கோர்ட்டுக்கு அறிமுகமானவர். மரியகீதா கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவர். போதுமான ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் விடுதலை செய்யப்பட்டவர். இவரின் காதலி கீதா. நாராயணசாமி என்னும் பிரபல தொழிலதிபரின் ஒரே மகள். மரியகீதா கொலை வழக்கில் சம்பவ இடத்தில் தன் காதலி கீதாவுடன் இருந்ததாக மதன் கூறினார். அதை நிரூபிக்க கீதாவை ஒரு சாட்சியாக சேர்க்க டிஃபன்ஸ் தரப்பு வழக்கில் கோபாலகிருஷ்ணன் முயன்றபோது அந்தப் பெண் சாட்சி சொல்ல வர மறுத்தாள். காதலையே உதாசீனப்படுத்தி விட்ட கீதாவின் மேல் ஆத்திரம் கொண்டவர் மதன். கோர்ட் அவரை விடுதலை செய்தவுடன் நேராகச் சென்று கீதாவுக்கு போன் செய்து மாலையில் பெஸண்ட் நகர் கடற்கரைக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்துவிட்டு ஒரு கத்தியை விலைக்கு வாங்கிக் கொண்டார். மாலையில் சொன்னபடி கடற்கரைக்குச் சென்று, நன்கு இருட்டின பிறகு, வாங்கிச் சென்ற கத்தியால் கீதாவின் நெஞ்சில் குத்திக் கொலை செய்து விட்டு நேராக அடையாறு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சரண் அடைந்துவிட்டார். நடந்த சம்பவத்தையும், கொலைக்கான காரணத்தையும், செய்த விதத்தையும் மதனே மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டு வாக்கு மூலம் கொடுத்துள்ளதைத் தாங்கள் பார்வையிட்டீர்கள். இந்த குற்றத்தை சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க அனுமதி அளிக்குமாறு கனம் நீதிபதி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

"என்ன மிஸ்டர் கோபாலகிருஷ்ணன், டிஃபண்ட் பண்றதுன்னு உறுதியா இருக்கீங்களா?"

"யெஸ் யுவர் ஆனர். ப்ளீஸ் பர்மிட் மி. மதன் ஒரு அப்பாவி. இந்தக் குற்றத்தை அவர் செய்யலை. வாக்கு மூலத்தில் முரண்பாடுகள் இருக்கு."

"ஓகே. லெட் அஸ் ஸ்டார்ட் த கேஸ் வித் த அக்யூஸ்ட்."

"இந்த புஸ்தகத்திலே கை வைங்க. சொல்லுங்க நான் சொல்வதெல்லாம் உண்மை."

"சொல்வதெல்லாம் உண்மை."

"பிராசிகியூட்டர் மே எஸ்டாபிளிஷ் ஹிஸ் கேஸ் நவ்."

"தாங்க் யூ யுவர் ஆனர். உன் பேரென்னப்பா?"

"எஸ். மதன்."

"போலீஸ் ஸ்டேஷன்ல நீ கொடுத்திருக்கிற வாக்குமூலம் உண்மைதானா?"

"உண்மைதான்."

"பாரு. இந்த கையெழுத்து உன்னுடையது தானே?"

"ஆமாம். நான்தான் எழுதினேன்."

"இப்படி எழுதச் சொல்லி யாரும் வற்புறுத்தினாங்களா?"

"இல்லை. நானே சுயமா எழுதினேன்."

"கீதா யாரு?"

"என்னோட காதலி."

"எத்தனை நாளா?"

"ஆறு மாசமா."

"நீ மட்டும் அவளைக் காதலிச்சியா?"

"இல்லை. அவளும் என்னை நேசிச்சா?"

"மரியகீதா கொலை சம்பவத்தப்போ நீயும் உன் காதலியும் கடற்கரையிலே இருந்திங்களா?"

"ஆமாம்."

"அதை கோர்ட்ல சாட்சி சொல்ல வரல்லையா அவ?"

"ஆமாம்."

"அதிலே உனக்கு ஆத்திரமா?"

"தாங்க முடியாத ஆத்திரம்."

"கொலை செய்றதுன்னு தீர்மானிச்சியா?"

"ஆமாம்."

"விடுதலையானதும் என்ன செஞ்சே?"

"ஒரு ஜவுளிக் கடையிலேர்ந்து போன் செஞ்சேன்."

"யாருக்கு?"

"கீதாவுக்கு."

"என்ன சொன்னே?"

"என்னை ஞாபகமிருக்கான்னு கேட்டேன். என்னை மன்னிச்சுடுங்க. தினம் உங்களைதான் நினைச்சேன்னா. இன்னிக்கு சாயங்காலம் அதே இடத்திலே சந்திக்கலாம்னு சொன்னேன். கண்டிப்பா வர்றேன்னா."

"அப்புறம் என்ன செஞ்சே?"

"பக்கத்திலே இருந்த ஒரு கத்திக் கடையிலேகத்தி வாங்கினேன்."

"அதோ மேஜையிலே இருக்கிற அதே கத்திதானா?"

"ஆமாம்."

"அப்புறம் என்ன செஞ்சே?"

"சாயங்காலம் கடற்கரைக்குப் போய்ட்டேன் கத்தியோட. சொன்னபடி கீதா வந்தா. ஒதுக்குப் புறமா, இருட்டா இருந்த இடத்திலே பேசிக்கிட்டு இருந்தோம். அவளைப் பார்த்ததும் என் ஆத்திரம் அதிகமாய்டுச்சி. கத்தியை எடுத்துக் குத்திட்டேன்."

"இரு. இருப்பா. குத்தினப்போ சட்டை போட்டிருந்தியா?"

"இல்லை. கழட்டி தனியா வச்சுட்டேன்."

"ஏன்?"

**இதுவரை** மதன்-கீதா காதலர்கள். கடற்கரையில் சந்திக்கின்றனர். அதே நாளில் கடற்கரையில் மரிய கீதா என்னும் பெண் கொலை செய்யப்பட்டு பிணமாகக் கிடக்கிறாள். கொலைப் பழி மதன்மீது விழுகிறது.

காதலி கீதா சாட்சி சொன்னால் மதன் விடுதலையாகிவிடலாம். கீதாவோ தந்தைக்குப் பயந்து காதலை மறைக்கிறாள்.

சட்டத்தரணியின் திறமையால் மதன் விடுதலையாகிறான். அதே கடற் கரையில் காதலி கீதாவை அழைத்து கொலை செய்கிறான். பொலிஸில் சரணடைகிறான்.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது சட்டத்தரணியின் புத்திச்சாலித்தனமான வாதங்கள் மதனை மீட்குமா.....? **இனி**





"ரத்தம் தெறிச்சிடக் கூடாதுன்னு. அப்படியும் ரெண்டு, மூணு துளி தெறிச்சிடுச்சி."

"சரி, அப்புறம் என்ன செஞ்சே?"

"கத்தியை கர்சீப்ல சுத்திக்கிட்டு, சட்டையைப் போட்டுக்கிட்டு நேரா அடையாறு ஸ்டேஷன் வந்துட்டேன். சரண்டர் ஆகிட்டேன்."

"ஸ்டேஷன்ல என்ன செஞ்சாங்க?"

"கத்தியை லாபுக்கு அனுப்பிட்டு, என் கிட்டே விவரங்கள் கேட்டுக்கிட்டு லாக்கப்ல வச்சுட்டாங்க. மறுநாள் நான் சொன்னதை எழுத்து மூலம் எழுதித் தரச் சொன்னாங்க."

"கீதாவை நீதான் கொலை செஞ்சேன்னு ஒத்துக்கறியா?"

"ஒத்துக்கறேன் சார்."

"தட்ஸ் ஆல் யுவர் ஆனர்."

"டிஃபன்ஸ் கவுன்சில் மே டேக் ஹிம்."

"தாங்க் யூ யுவர் ஆனர். மதன், நான் கேக்கிற கேள்விக்கெல்லாம் தைரியமா பதில் சொல்லுங்க. எதுக்கும், யாருக்கும் பயப்பட வேணாம். இந்த மாதிரி வாக்குமூலம் கொடுக்கச் சொல்லி போலீஸ்ல உங்களை மிரட்டினாங்களா?"

"இல்லை சார்."

"அப்படியா? சரி. சொல்லுவதெல்லாம் உண்மைன்னு சத்திய பிரமாணம் எடுத்துக்கிட்டிங்க. நீங்க. அதனால நீங்க சொன்னதைப் பூராவும் உண்மையா எடுத்துக்கலாமா?"

"உண்மை தான் பேசினேன்."

"இந்த மாதிரி பிரமாணம் எடுத்துக்கிட்டு மரிய கீதா வழக்கிலேயும் பதில்கள் சொன்னீங்க. அப்பவும் உண்மைகளைத்தானே சொன்னீங்க?"

"அப்ஜெக்ஷன் யுவர் ஆனர். நடப்பது கீதா கொலை வழக்கு. மரியகீதா வழக்கில் சொன்ன பதில்களைப் பற்றி இப்போ பேசறது நாட் ரெலவண்ட் ஐ திங்க்."

"நோ யுவர் ஆனர். மரியகீதா வழக்குக்கும், இந்த வழக்குக்கும் நேரடியான தொடர்பு இருக்கு. ரெண்டிலேயும் அக்யூஸ்ட் இந்த மதன். இவரோட வாக்குமூலத்திலே முரண்பாடுகள் இருக்கிறதை சுட்டிக் காட்ட வேண்டியது என் கடமை."

"அப்படின்னா அப்ஜெக்ட் பண்ணாதிங்க பிராசிகியூட்டர், கேட்கட்டும், விடுங்க."

"சொல்லுப்பா அப்போவும் உண்மை தானே பேசினே?"

"ஆமாம் சார்."

"ஒரு நிமிஷம். அந்த கேசிலே நீ பேசின பதில்கள் டைப் செய்யப்பட்ட காப்பி இதோ இருக்கு. கொஞ்சம் படிக்கிறேன், கேளு. நான் தான் கேள்வி கேட்டது. நீதான் பதில் சொன்னது."

"மதன், ஸ்டேஷன்ல உங்களை பெல்ட்டால அடிச்சாங்களா?"

"ஆமாம் சார்."

"நீங்க யாரையாச்சும் காதலிச்சிருக்கிங்களா?"

"இல்லவே இல்லை."

"அன்னிக்கு கோயிலுக்கு தனியாதானே போனீங்க?"

"தனியாதான் போனேன்."

"யுவர் ஆனர். ப்ளீஸ் நோட் திஸ். போன வழக்கிலே அப்படிச் சொன்னாரு. இந்த வழக்கிலே தன் காதலி கீதாவோட போனதா சொல்றாரு. தான் யாரையுமே காதலிச்சதில்லைன்னு சொன்ன அதே நபர் கீதாவை காதலிச்சதா சொல்றார். இதிலே எது உண்மை? காதலிக்கலை என்பதுதான் உண்மை. காதலிச்சேன்னு சொல்றது பொய். போலீஸ் தரப்பிலே மதன் கீதாவை காதலிச்சதுக்கான நிருபணமா ஏதாவது ஆதாரங்கள் சமர்ப்பிச்சிருக்காங்களான்னு நான் தெரிஞ்சுக்க விரும்பறேன்"

"நோ யுவர் ஆனர். மதனே தன் காதலை ஒப்புக் கொள்கிறார்."

"ஒப்புக் கொள்ள வைக்கப்பட்டிருக்கிறார் என்பது என் வாதம். மதன், ஜவுளிக் கடையிலேர்ந்து போன் செஞ்சிங்களா?"

"ஆமாம்."

"பக்கத்திலே கத்தி வாங்கினிங்களா?"

"ஆமாம்."

"சாயங்காலம் கடற்கரைக்கு வர்றதா உங்க ஸோ கால்ட் காதலி ஒத்துக்கிட்டாங்களா?"

"ஆமாம்."

"அதெப்படி? உங்க ஸ்டேட்மெண்ட்படி, உங்களை காப்பாத்துறதுக்காக சாட்சி சொல்ல வராத உங்க காதலி, உங்களை உதாசீனப்படுத்தின உங்க காதலி, உங்களை சந்திக்க வர எப்படி ஒத்துக்கிட்டா?"

"இன்னும் என்மேல அவளுக்கு காதல் இருந்ததாலே ஒப்புகிட்டா."

"யுவர் ஆனர், மரியகீதா வழக்கில் இதே மதனின் டிஃபன்ஸ் லாயராக நான் ஆஜரான காரணத்தினால், சில விஷயங்களை தெளிவுபடுத்த விரும்பறேன். கோர்ட்ல தனக்குக் காதலியே கிடையாதுன்னு மதன் சொன்னப்புறம், தான் எந்த காதலியைப் போய் சாட்சி சொல்ல கூப்பிடுவது? தான் சென்று சாட்சி சொல்ல அழைத்ததாகவோ இப்போது கொலை செய்யப்பட்ட கீதா மறுத்ததாகவோ ஒரு சம்பவம் நடைபெறவே இல்லை. ஆதாரங்களே இல்லாமல் இந்த அப்பாவி இளைஞனின் மேல் கேசை ஜோடித்திருக்கிறது போலீஸ் தரப்பு. மதனின் வாக்கு மூலத்தின் முரண்பாட்டை இன்னும் கூட என்னால் வெளிப்படுத்த முடியும். ஏன் மிஸ்டர் மதன், உங்க வாக்கு மூலப்படி கீதாவை கொலை செய்யணும்னு திட்டம்போட்டு, முடிவெடுத்துதானே கத்தி வாங்கினிங்க?"

"ஆமாம்."

"கொலை செஞ்சதும் போலீஸ்ல சரண் அடையணும்னு முதல்லயே தீர்மானிச்சிட்டிங்களா?"

"ஆமாம்."

"பின்னே எதுக்கு கொலை செஞ்சப்போ சட்டையை கழட்டி வச்சதா சொன்னிங்க? தப்பிக்க நினைக்கிறவன் தானே சட்டையைக் கழட்டி வச்சி தற்காப்பு தேடுவான்?"

"தப்பிக்கிறதா, இல்லை சரணடையறதான்னு எனக்கு குழப்பமா இருந்திச்சி."

"அதாவது உங்க வாக்கு மூலத்திலே உள்ள குழப்பம் மாதிரி."

"கோபாலகிருஷ்ணன், டோண்ட் கன்ஃப்யுஸ் ஹிம். என்ன சொல்ல வர்றிங்க?"

"யுவர் ஆனர், இது போலீஸ் ஜோடித்துள்ள பொய் வழக்கு. மதன் குற்றம் செய்யாதவர். அப்பாவி. அவரை வலுக்கட்டாயமாக பயமுறுத்தி வாக்குமூலம் எடுத்திருக்கிறார்கள். அதற்கு காரணம்-மரிய கீதா வழக்கில் மதன் தப்பிவிட்டதே. இனி வரும் சாட்சியங்களிலும் போலீஸ் தரப்பு சொல்ல இருப்பதை கவனிக்கக் காத்திருக்கிறேன். அதன் பின்னர் டிஃபன்ஸ் தரப்பு சாட்சியின் மூலம் என் வாதத்திற்கு வலு சேர்க்கவும் தயாராய் இருக்கிறேன். தட்ஸ் ஆல் யுவர் ஆனர்."

"அப்போ ப்ராசிகியூஷன், உங்க விட்னெசை ஆரம்பிச்சுக்கங்க."

"சப்-இன்ஸ்பெக்டர்தானே உங்க ரேங்க்?"

"ஆமாம்."

"பேர் என்ன?"

"சசிதரன்."

"கீதா கொலை செய்தி எப்படி வந்திச்சி?"

## தமிழக கிரைம் கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

"கண்ட்ரோல் ரூம்லேர்ந்து வந்திச்சி."

"என்ன செஞ்சிங்க?"

"ஸ்பாட்டுக்கு போய் பிணத்தை ஜி.ஹெச்சுக்கு அனுப்பினேன். ஸ்டேஷனுக்கு திரும்பி வந்தா கொலை ஆயுதத்தோட மதன் இருந்தார். தான்தான் கொலை செஞ்சதா சொல்லி சரண் அடைஞ்சார். உரிய நடவடிக்கை எடுக்கச் சொன்னார்."

"என்ன செஞ்சிங்க?"

"கத்தியையும், அவர் போட்டிருந்த சட்டையையும் லேபுக்கு அனுப்பினேன். விசாரிச்சேன். பூரா சொன்னார். என்ட்ரி போட்டு லாக்கப்ல வச்சேன். லேப்லேர்ந்து கைரேகை பொருத்தம் இருக்குன்னு ரிப்போர்ட் வந்ததும் ரிமாண்ட்ல வைக்க ஆர்டர் வாங்கினேன். விபரங்களை சேகரிச்சு கேஸ் ஃபைல் செஞ்சேன்."

"தாங்க் யூ."

"கோபாலகிருஷ்ணன், வாங்க வெத்தலை அப்புறம் போடலாம்."

"சப்-இன்ஃபெக்டர், கத்தியோட, மதன் போட்டிருந்த சட்டையையும் கழட்டச் சொல்லி லேபுக்கு அனுப்பினிங்களா?"

"ஆமாம்."

"ஏன்?"

"அதிலே ஒண்ணு ரெண்டு ரத்தத் துளிகள் இருந்திச்சி. கர்சீப்பையும் அனுப்பினேன்."

"எக்ஸிபிட் நம்பர் நைன் அன்ட் டென்தானே? அதோ அந்த சட்டை தானே? அந்த கர்சீப் தானே?"

"ஆமாம் சார்."

"அது யாரோட சட்டை.?"

"மதனோடது."

"கர்சீப்?"

"அதுவும் மதனோடது தான்."

"இப்போ மதன் போட்டிருக்கிற கதர் சட்டை?"

"நாங்க வாங்கிக் கொடுத்தது. அவர் கிட்டே வேற சட்டை இல்லாததாலே."

"சப்-இன்ஸ்பெக்டர், நீங்கள் லேபுக்கு அனுப்பின சட்டையும், கர்சீப்பும் மதனோடதுதான்கிறதிலே சந்தேகம் எதுவும் இல்லையே?"

"இல்லை."

"யுவர் ஆனர், அந்த கர்சீப்பையும், சட்டையையும் நான் பார்க்க விரும்பறேன்."

"பாருங்க, எடுத்துக் கொடுப்பா."

"யுவர் ஆனர், இந்த கர்சீப், இந்த சட்டை ரெண்டுலயும் ஆர்ன்னு சலவைக் குறி இருக்குதே. என்ன, சப்-இன்ஸ்பெக்டர் கவனிக்கலையா, நீங்க?"

"என்ன ஆரா?"

"பாருங்க, இது 'ஆர்' தானே? க்யூவுக்கு அப்புறம் வரும். எஸ்சுக்கு முன்னால் வருமே அதே 'ஆர்' தான். மதன் சட்டைன்னா "எம்"ன்னு தானே இருக்கணும்?"

"அப்ஜெக்ஷன் யுவர் ஆனர். என் பேர் நல்லசிவம். இனிஷியல் 'என்' என் குடும்பத்திலே ஆறு உறுப்பினர்கள். எல்லா துணிகளையும் ஒண்ணா எடுத்துட்டுப் போற சலவைத் தொழிலாளி எல்லாத்திலேயும் 'என்'ன்னு தான் போடறான். என் பையன் பேரு துரை. அவன் சட்டையிலேயும் 'என்'ன்னு தான் இருக்கும்."

"ரைட். நீங்க குடும்பத்திலே இருக்கிங்க. மதன் குடும்பத்திலே இல்லையே... ஜெயில் கஸ்டடியிலே ஒரு மாசம் இருந்தவர். விடுதலையானதும் தன் பழைய சட்டையை க்ளோத் ரூமிலேர்ந்து வாங்கிப் போட்டுட்டு வந்திருக்கணும். அப்புறம் போன் செஞ்சார். கத்தி வாங்கினார். சுத்தினார். கொலை செஞ்சார். சரணடைஞ்சார். சட்டையைப் பாருங்க சலவை மடிப்புக் கூட சரியா கலையலை. இது மதனோட சட்டை இல்லை. இந்த வழக்கு ஜோடனைக்காக போலீஸ் தரப்பு தயாரிச்ச பொய்யான சாட்சியம்தான் இந்த சட்டை."

"அப்ஜெக்ஷன் யுவர்..."

"இருங்க நல்லசிவம். எடுத்ததுக்கெல்லாம் அப்ஜெக்ட் பண்ணாதிங்க. கோபாலகிருஷ்ணன் சொல்றதிலே ஒரு பாய்ண்ட் தெரியுது. ஏனப்பா மதன், அது உன் சட்டைதானா?"

"இல்லை."

"பார்த்திங்களா? இது யார் சட்டை?"

"தெரியாது."

"அடப்பாவி! இந்த சட்டையைப் போட்டுட்டு தானேடா ஸ்டேஷனுக்கு வந்தே?"


"சசிதரன், விட்னெஸ் கூண்டுல நின்னுகிட்டு அக்யூஸ்டை இப்படி மிரட்டறது தப்பு. ஒழுங்கான விவரங்கள் இல்லாம நீங்க கேஸ் ஃபைல் பண்ணிட்டு இப்போ மீறுறதிலே அர்த்தமில்லை. கோபால கிருஷ்ணன், நீங்க கண்டினியு பண்ணுங்க."

"இந்த விட்னெசுக்கு இவ்வளவு கேள்வி போதும் யுவர் ஆனர்."


"நெக்ஸ்ட்.. இருங்க. டயம் தான் ஆச்சே. லஞ்ச் ப்ரேக் வச்சிக்கலாம் இத்தோட."

**(தொடர்ந்து வரும்)**


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: வி.நாதன்.
வயது: 26
முகவரி: 65, மெனிங் சந்தை, கொழும்பு-11.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.




பெயர்: ஆர்.இர்ஸாத்.
வயது: 23
முகவரி: 222, ஹொரவப்பொத்தானை வீதி, வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.




பெயர்: ஜி.இராசவேல்.
வயது: 26
முகவரி: ZENTRAL ST RASSE 40, 6030, EBIKON, SWITZERLAND.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, இயற்கை இரசித்தல்.



பெயர்: வி.அன்னலட்சுமி.
வயது: 17
முகவரி: மில்லவானைத் தோட்டம், பலகொல்ல டிவிஷன், மெல்சிரிபுர.
பொழுது போக்கு: கரப்பந்து.



பெயர்: எம்.றஸ்மி.
வயது: 19
முகவரி: 45சி, குமாரி முல்லை, பூகொட.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம்.ஷூறாக்.
வயது: 24
முகவரி: P.O.BOX-75069 DOHA, QATAR.
பொழுது போக்கு : வானொலி, ரீ.வி.

பெயர்: எம்.றினோஸ்.
வயது: 16
முகவரி: 425/7, முள்ளிப்பொத்தானை, கந்தளாய்.
பொழுது போக்கு: கிரிக்கெட்.

பெயர்: ஏ.முஹம்மது பாஹிம்.
வயது: 16
முகவரி: 342, பிரதான வீதி, அக்கரைப்பற்று-01.
பொழுது போக்கு: கிரிக்கெட், பேனா நட்பு.

பெயர்: ஏ.பிரகாஷ்.
வயது: 19
முகவரி: 41 யூ.சி.வீடு, மன்னார் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: எஸ். ராஜகுமார்.
வயது: 19
முகவரி: 14, எல்லை வீதி தெற்கு, தாண்டவன் வெளி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஏ.கணேசலிங்கம்.
வயது: 25
முகவரி: MEYER-STR-196, 28201 BREMEN, GERMANY.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், சினிமா.

பெயர்: டீ.நலீர்டீன்.
வயது: 19
முகவரி: 569/81, நப்பிரித்த, திஹாரிய.
பொழுது போக்கு: பேனா நட்பு, கதைப்புத்தகம்.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

தாய் தாய் தாய் தாய் தாய் தாய் தாய் தாய் தாய் தாய் தாய்

## மக்சீம் கார்க்கி

"ஜனங்கள் கொடியவர்களாயிருப்பதைவிட முட்டாள்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களது கண் முன்னால் உள்ள விஷயங்களைத்தான் அவர்கள் பார்க்கிறார்கள்; அதைத்தான் உடனே புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள். ஆனால் கையெட்டுந் தூரத்திலுள்ள எல்லாம் மலிவானவை; சாதாரணமானவை. தூரத்தில் உள்ளவைதான் அருமையானவை; அபூர்வமானவை. அந்தத் தூரந்தொலை விஷயத்தை நாம் எட்டிப் பிடித்து விட்டால், வாழ்க்கையே மாறிப்போய் மக்களுக்கு அறிவும் சுகமும் கிட்டுமானால், அதுவே எல்லோருக்கும் ஆனந்தம்; அதுவே சுகம். ஆனால் அந்த வாழ்க்கையை அடையவேண்டுமென்றால் கொஞ்சம் சிரமத்துக்கு ஆளாகியே தீர வேண்டும்."

திடீரென்று அவள் தாயின் முன்னால் வந்து நின்றாள்.

"நான் ஜனங்களை அதிகம் சந்திப்பதில்லை. யாராவது என்னைப் பார்க்க வந்தால், உடனே நான் பிரசங்கம் செய்யத்தொடங்கி விடுவேன். வேடிக்கையாயில்லை?" என்று தான் ஏதோ மன்னிப்புக் கோருவதைப் போலக் கூறினாள் அவள்.

"ஏன்?" என்றாள் தாய். அந்தப் பெண் அவளது அச்சு வேலைகளை எங்கு வைத்துச் செய்கிறாள் என்பதைக் கண்டுபிடிக்க விரும்பினாள் தாய். ஆனால் அங்கு எதுவுமே வழக்கத்துக்கு மாறாக இருப்பதாகத் தெரியவில்லை. தெருவை நோக்கியிருக்கும் மூன்று ஜன்னல்கள், ஒரு சோபா, ஒரு புத்தக அலமாரி, ஒரு மேஜை, சில நாற்காலிகள், ஒரு படுக்கை, அதற்கருகே ஒரு மூலையில் கை கழுவும் பாத்திரம் இருந்தது. இன்னொரு மூலையில் அடுப்பு இருந்தது. சுவர்களில் புகைப்படங்கள் தொங்கின. அங்குள்ள எல்லாப் பொருள்களுமே சுத்தமாகவும், புத்தம் புதிதாகவும் நல்ல நிலைமையிலும் ஒழுங்காக இருந்தன; இவை எல்லாவற்றின் மீதும், அந்த வீட்டுக்காரியான லுத்மீலாவின் சன்னியாசினி நிழல் படிந்திருந்தது. அங்கு ஏதோ ஒளிந்து மறைந்து கொண்டிருப்பதாக உணர்ந்தாள் தாய். ஆனால் எது எங்கே ஒளிந்து பதுங்கியிருக்கிறது என்பதைத்தான் அவளால் ஊகிக்க முடியவில்லை. அவள் கதவுகளைப் பார்த்தாள். அவற்றில் ஒரு கதவு வழியாகத்தான், சிறு நடை வழியிலிருந்து! இந்த இடத்திற்கு வந்தாள். அடுத்த படியாக, அடுப்பிருந்த பக்கத்தில் ஓர் உயரமான குறுகலான கதவு காணப்பட்டது.

"நான் இங்கு ஒரு காரியமாக வந்திருக்கிறேன்," என்று தன்னையுமறியாமல் சொன்னாள் தாய்; அதே சமயம் லுத்மீலாவும் தன்னையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதையும் அவள் கண்டாள்.


"தெரியும். என்னைத் தேடி வருபவர்கள் சும்மா வருவதில்லை."

லுத்மீலாவின் குரலில் ஏதோ ஒரு விசித்திர பாவம் தொனிப்பதாகக் கண்டறிந்தாள் தாய். அவளது முகத்தைக் கவனித்தாள். அந்தப் பெண்ணின் மெல்லிய உதடுகளின் ஓரத்தில் ஒரு வெளுத்த புன்னகை அரும்புவதையும், அவளது மூக்குக் கண்ணாடிக்குப் பின்னால், அவளது உணர்ச்சியற்ற கண்கள் பிரகாசிப்பதையும் அவள் கண்டாள். தாய் வேறொரு பக்கமாகப் பார்த்துக் கொண்டு பாவெலின் பேச்சின் நகலை நீட்டினாள்.

"இதோ. இதை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அச்சேற்றியாக வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்."

பிறகு அவள் நிகலாய்க்கு நேரவிருக்கும் கைது விஷயத்தைப் பற்றிச் சொன்னாள்.

> "பலாத்காரத்திலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்கு உரிமை உண்டு. நான் அடுத்தவர்களைச் சண்டைக்கு அழைக்கும்போது நானும் சண்டை போட்டுத்தானே தீரவேண்டும்!"
>
> -லுத்மீலா



**95**

> **"இந்த வாழ்க்கை அதன் பாட்டுக்குப் போய்க்கொண்டே இருக்கிறது. ஜனங்கள் துன்புறுகிறார்கள்; அவர்களை அடிக்கிறார்கள்; குரூரமாக வதைக்கிறார்கள்; அவர்களுக்கு எந்த இன்பமும் கிட்டாமல் போக்கடிக்கிறார்கள்" -தாய்-**

லுத்மீலா ஒன்றும் பேசாமல் அந்தக் காகிதத்தைத் தன் இடுப்புக்குள் செருகிக் கொண்டு, கீழே உட்கார்ந்தாள். அடுப்புத்தீ அவளது மூக்குக் கண்ணாடியில் பளபளத்துப் பிரகாசித்தது; நெருப்பின் அனல் அவளது அசைவற்ற முகத்தில் களித்து விளையாடியது.

"அவர்கள் மட்டும் என்னைப் பிடிக்க வந்தால், நான் அவர்களைச் சுட்டே தள்ளி விடுவேன்" என்று தாய் கூறியதையெல்லாம் கேட்டு விட்டு உறுதியோடும் அமைதியோடும் கூறினாள் லுத்மீலா. "பலாத்காரத்திலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்கு உரிமை உண்டு. நான் அடுத்தவர்களைச் சண்டைக்கு அழைக்கும்போது நானும் சண்டை போட்டுத்தானே தீர வேண்டும்!"

நெருப்பின் ஒளி அவள் முகத்திலிருந்து நழுவி மறைந்து விட்டது; எனவே மீண்டும் அவளது முகத்தில் அகந்தையும் கடுமையும் பிரதிபலித்தன.

'உன் வாழ்க்கை மோசமாயிருக்கிறது' என்று அனுதாபத்தோடு தன்னுள் நினைத்துக் கொண்டாள் தாய்.

லுத்மீலா பாவெலின் பேச்சை விருப்பின்றிப் படிக்கத் தொடங்கினாள்; ஆனால் படிக்கப் படிக்க அவளுக்கு ஆர்வம் அதிகரித்து அந்தக் காகிதத்தின் மீதே குனிந்து விழுந்து படித்தாள்; அந்தப் பேச்சுப் பிரதியைப் பக்கம் பக்கமாகப் பொறுமையற்றுப் புரட்டினாள்; கடைசியாக, படித்து முடிந்தவுடன் அவள் எழுந்தாள்; தோள்களை நிமிர்த்தி நின்றாள்; தாயை நோக்கி வந்தாள்.

"அருமையான பேச்சு!" என்றாள் அவள்.

ஒரு நிமிடம் தலையைத் தாழ்த்தி யோசனை செய்தாள்.

"நான் உங்கள் மகனைப் பற்றி உங்களிடமே பேச விரும்பவில்லை; நான் அவனைச் சந்தித்ததும் இல்லை. ஏன் துயரப்பேச்சில் ஈடுபட வேண்டும்? எனக்கு அது பிடிப்பதில்லை. உங்களுக்கு மிகவும் வேண்டிய ஒருவனை, தேசாந்திர சிட்சை விதித்து அனுப்புவதால் உங்களுக்கு ஏற்படும் வேதனை என்ன என்பதை நான் அறிவேன். ஆனால் ஒன்று கேட்கிறேன்- இந்த மாதிரிப் பிள்ளை பெற்றிருப்பது நல்லதுதானா?"

"ரொம்பவும்..." என்றாள் தாய்.

"பயங்கரமாயில்லையா?"

"இப்போது இல்லை" என்று அமைதி நிறைந்த புன்னகையோடு சொன்னாள் தாய்.

லுத்மீலா தனது பழுப்புக் கரத்தால் தன் தலைமயிரைக் கோதித் தடவிக் கொடுத்தவாறே ஜன்னல் பக்கம் திரும்பினாள். அவளது முகத்தில் ஏதோ ஒரு சாயை படர்ந்து மறைந்தது; ஒரு வேளை அவள் தன் உதட்டில் எழுந்த புன்னகையை மறைக்க முயன்றிருக்கலாம்

"சரி. நான் விறுவிறென்று அச்சுக் கோத்து விடுகிறேன். நீங்கள் கொஞ்சம் படுத்துத் தூங்குங்கள். இன்று பூராவுமே உங்களுக்கு ஒரே ஆயாசமும் சிரமமுமாயிருந்திருக்கும். இதோ இந்தப் படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள். நான் தூங்க மாட்டேன். ஒரு வேளை நடுராத்திரியில் உதவிக்காக உங்களை எழுப்புவேன்.... படுத்தவுடனே விளக்கை அணைத்து விடுங்கள்."

அவள் அடுப்பில் இரண்டு விறகுகளை எடுத்துப் போட்டு விட்டு, அந்தக் குறுகிய கதவைத் திறந்து கொண்டு அப்பால் சென்றாள்; கதவையும் இறுக மூடி விட்டுப் போனாள். தாய் அவள் போவதையே கவனித்துக் கொண்டிருந்தாள். பிறகு உடுப்புக்களைக் களைந்தாள்; அவளது சிந்தனை மட்டும் லுத்மீலாவைச் சுற்றியேவந்தது.

'அவள் எதையோ எண்ணி வருந்திக் கொண்டிருக்கிறாள்...'

தாய்க்குக் களைப்புணர்ச்சியால் தலை சுற்றியது. எனினும் அவளது உள்ளம் மட்டும் அற்புதமான அமைதியோடு இருந்தது. அவளது கண்ணில் பட்ட ஒவ்வொன்றும் அவளது இதயத்தை ஒளி செய்து நிரம்பிப் பொழிந்தன. இந்த மாதிரியான அமைதி அவளுக்குப் புதிதானதல்ல. ஏதாவது ஒரு பெரும் உணர்ச்சிப் பரவசத்துக்குப் பிறகுதான் இந்த மாதிரி அவளுக்குத் தோன்றுவதுண்டு. முன்னெல்லாம் அந்த உணர்ச்சி அவளைப் பயந்து நடுங்கச் செய்யும். இப்போதோ அந்த உணர்ச்சியமைதி அவளது இதயத்தை விசாலமுறச்செய்து, அதில் ஒரு மகத்தான-உறுதிவாய்ந்த உணர்ச்சியைக் குடியேற்றி வலுவேற்றியது. அவள் விளக்கை அணைத்து விட்டு, குளிர் படிந்த படுக்கையில், போர்வையை இழுத்து மூடிச் சுருட்டி முடங்கிப் படுத்துக் கொண்டாள். படுத்தவுடனேயே அவள் சீக்கிரத்தில் ஆழ்ந்த தூக்கத்துக்கு ஆளாகிவிட்டாள்.

அவள் கண்களை மீண்டும் திறந்த போது அந்த அறையில் மாரிக்காலக் காலைப் பொழுதின் வெள்ளிய, குளிர்ந்த ஒளி நிறைந்திருந்தது. கையில் ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு சோபாவின் மீது சாய்ந்திருந்த லுத்மீலா அவளைப் பார்த்தாள்; புன்னகை செய்தாள்.

"அடி கண்ணே!" என்று கலங்கிப் போய்க் கூறினாள் தாய். "நான் என்ன பிறவியிலே சேர்த்தி? ரொம்ப நேரம் ஆகிவிட்டதோ?"

"வணக்கம்!" என்றாள் லுத்மீலா. "மணி பத்தடிக்கப் போகிறது. எழுந்திருங்கள். தேநீர் சாப்பிடலாம்."

"நீங்கள் ஏன் என்னை எழுப்பவில்லை,"

"எழுப்பத்தான் வந்தேன். ஆனால் நான் வந்தபோது தூக்கத்தில் அமைதியாகப் புன்னகை செய்து கொண்டிருந்தீர்கள். அதைக் கலைக்க எனக்கு மனமில்லை."

அவள் தன் சோபாவிலிருந்து நாசூக்காக எழுந்திருந்தாள். படுக்கையருகே வந்து, தாயின் பக்கமாகக் குனிந்தாள். அந்தப் பெண்ணின் ஒளியற்ற கண்களில் ஏதோ ஒரு பாசமும் பரிவும் கலந்த, தனக்குப் பரிச்சயமான உணர்ச்சி பாவம் பிரதிபலிப்பதைத் தாய் கண்டாள்.

"உங்களை எழுப்புவது தப்பு என்று பட்டது. ஒருவேளை இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தீர்களோ."

"நான் கனவு காணவில்லை."

"எல்லாம் ஒன்றுதான். எப்படியானாலும் நான் உங்கள் புன்னகையை விரும்பினேன். அது அத்தனை அமைதியோடு அழகாக இருந்தது... உள்ளத்தையே கொள்ளை கொண்டது."

லுத்மீலா சிரித்தாள்; அந்தச் சிரிப்பு இதமும் மென்மையும் பெற்று விளங்கியது.

"நான் உங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். உங்கள் வாழ்க்கை என்ன, சிரமமான வாழ்க்கையா?"

தாயின் புருவங்கள் அசைந்து நெளிந்தன; அவள் அமைதியாகத் தன்னுள் சிந்தித்தாள்.

"ஆமாம், சிரமமானதுதான்" என்றாள் லுத்மீலா.

"எனக்கு அப்படி ஒன்றும் தெரியாது" என்று மெதுவாய்ப் பேசத் தொடங்கினாள் தாய். "சமயங்களில் இந்த வாழ்க்கை சிரமமாகத்தான் தோன்றுகிறது. ஆனால் இந்த வாழ்க்கைதான் பூரணமாயிருக்கிறது. இந்த வாழ்வின் சகல அம்சங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாயும் வியப்புத் தருவனவாயும் இருக்கின்றன. ஒவ்வொரு விஷயமும் ஒன்றையொன்று விறுவிறுவென்று தொடர்ந்து செல்கின்றன..."

அவளது இயல்பான துணிச்சல் உணர்ச்சி மீண்டும் அவள் நெஞ்சில் எழுந்தது. அந்த உணர்ச்சியால் அவளது மனத்தில் பற்பல சிந்தனைகளும் உருவத் தோற்றங்களும் தோன்றி நிரம்பின. அவள் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு தனது சிந்தனைகளைச் சொல்லில் வார்த்துச் சொல்லத் தொடங்கினாள்.

"இந்த வாழ்க்கை அதன் பாட்டுக்குப் போய்க் கொண்டே இருக்கிறது. ஒரே முடிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.... சமயங்களில் இது மிகவும் சிரமமாய்த்தானிருக்கிறது. ஜனங்கள் துன்புறுகிறார்கள்; அவர்களை அடிக்கிறார்கள்; குரூரமாக வதைக்கிறார்கள்; அவர்களுக்கு எந்த இன்பமும் கிட்டாமல் போக்கடிக்கிறார்கள். இதைக் கண்டால் மிகுந்த சிரமமாயிருக்கிறது!"

**(தொடர்ந்து வரும்)**

# தற்கொலை




"மலர்ரீச்சர் எவ்வளவு நல்லவ அவ இல்லாட்டி நான் எங்கையோ போயிருப்பேன்"

திருமனுக்கு தலை கால் தெரியாத சந்தோஷம். எட்டாவது ஆண்பிள்ளையாகக் கிடைத்துவிட்டதே. குமரன் என்று பெயர்வைத்து சந்தோஷப்பட்டான்.

குமரன் என்ன அழகு! சரியான துடுக்குத்தனம். அவனின் குளப்படிகளை பாக்கியத்தால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

"வளர வளர புள்ளையளுக்கு குளப்படி குறையுறது. இதென்னடா எண்டால் உந்த வெறுவாய்க்கிலை கெட்டதுக்கு இன்னும் கூடிக் கொண்டெல்லே போகுது."

அம்மாவிடம் பேச்சு வாங்காமல் எந்த ஒரு காலையும் அவனுக்கு விடிவதில்லை. அம்மா பேசட்டும் எண்டு கொண்டு சும்மா இருக்கவும் முடிவதில்லை. எதையாச்சும் செய்து போடுவான். என்ன செய்யுறதெண்டு அவனுக்கே விளங்குவதில்லை.

★★

"ஐயோ என்ரை ராசா... என்னை விட்டுட்டுப் போயிட்டீங்களே... இந்த ஏழு குமர்களையும் வைச்சுக் கொண்டு நானெங்கை போவன்?" அப்பா செத்த நேரம் அம்மா இன்னும் நாலைஞ்சு பேரோடை சேர்ந்து கொண்டு கட்டிப் பிடிச்சு ஒப்பாரி வைச்சா. ஆனால் எனக்கு என்னவோ எல்லாம் வெறும் வாய்ப்பேச்சு மாதிரித்தான் பட்டுது. அம்மா, அப்பா உயிரோடை இருக்கேக்குள்ளே என்ன மாதிரி ஏட்டிக்குப் போட்டியாய் சண்டை பிடிப்பா. ஆனால் இப்ப மாய் மாலம் கொட்டுறா. இனி அம்மா என்ன அடிக்கேக்குள்ளே மறிக்க அப்பா வர மாட்டார். என்ரை அப்பா செத்துப் போனார்.

மூத்தக்கா பாவம். அது என்ன செய்யும்? அம்மா பேசினால் அது ஒண்டும் பேசாது. சும்மா இருக்கும். அம்மாவுக்கு என்னோடை ஏன் வெறுத்துப்போனது? ஏன் என்னை அம்மா அடிக்கிறா? நான் ஒருக்கால் அவவின்ரை பிள்ளை இல்லையோ? பயம்தான்; இண்டைக்கு ஒரு துணிச்சல் வந்தது. நானும் ஆம்பிளைப் பிள்ளைதானே. "அம்மா.... அம்மா..." வெடுக்கென்று திரும்பிப்பார்த்தா.

சிவன் கோயில் சூரன் போரிலை சூரன்ரை தலையை இப்பிடித்தான் திருப்புவினம். "அம்மா எனக்கு பொங்கலுக்கு உடுப்புவேணும்" ஒண்டும் பேசுறாவில்லை. "அம்மா பக்கத்து வீட்டிலை மயில்வாகனம், சுரேஷ், பிரேமா, சாந்தி எல்லாரும் புது உடுப்பு எடுத்துப் போட்டினம்."

"அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றாய். போ.. கழுதை.. இன்னும் போய் ஊரெல்லாம்பார். ஆர் ஆரெல்லாம் புதுடுப்பு வாங்கியிருக்கினம். ஆரெல்லாம் சும்மா நிக்கினம் எண்டுபார் போ. தாறதைத் திண்டுட்டு ஊரெல்லாம்திரி. இஞ்சை ஏழு குமருகள் ஒழுக்குக்கு வச்ச மச்சச் சட்டிமாதிரி வீட்டுக்குள்ளை கிடக்குதுகள். உனக்கென்னடா எண்டால் உடுப்பு." எகிறி விழுந்தாள்.

பள்ளிக்கூடத்திலை மலர் டீச்சர் எவ்வளவு நல்லவா. அவமட்டும் இல்லாட்டி எப்பையோ நான் எங்கையெண்டாலும் போயிருப்பன். என்ரை மூத்தக்காவும் நல்லவா. ஆனால்... அம்மா மட்டும் கூடவே கூடாது.

"குமரன் இஞ்சை வாங்கோ!" அம்மா எப்பவாவது இப்பிடிக் கூப்பிட்டவவே. "காலமை என்ன சாப்பிட்டனீங்கள்?"

"ஒண்....டு.... மி....ல்லை.... டீச்சர்..." கண்கள் பொலு பொலுவென்று கண்ணீரைச் சொரிந்தன. மனம் முழுக்க விம்மியது. வலதுகையில் பிடித்து தன்னோடு கிட்ட அணைத்து கொண்டுவந்து பிட்டும் பிலாப்பழமும் தந்தா. என்ன உருசை. அப்பா செத்திடம் இழுக்க கொஞ்சம் முன்னமும் பிலாப்பழம்தான் கேட்டவர். உடனே எங்கை போய் வாங்குறது? பிலாப்பழம் தின்னாமலேயே அப்பா செத்துப் போனார்.

"குமரன் ஏன் அழுறீங்கள்?" எனது கண்ணங்களை வாஞ்சையோடு வருடிவிட்டா. மலர் டீச்சருக்கு இன்னும் கலியாணம் ஆகேல்லை. அம்மாவை விட இவ எவ்வளவு நல்லவ.

"டீச்சர் ஒண்டு சொல்லவே?"

"என்ன குமரன் சொல்லுங்கோவன்."

"இண்டைக்கு நான் வீட்டுக்குப் போக மாட்டன்."

"அப்பிடி எண்டால் என்ன செய்யப் போறியள்?"

"டீச்சர் உங்களோடை வரப் போறன்."

"எப்பிடி குமரன்... என்னோடை வாறதெண்டாலும் உங்கடை அம்மா சம்மதிப்பாவே..?"

"அங்கை எனக்குப் போகேலாது... அங்கை நான் போனா அம்மா எனக்கு அடிக்கிறவ-பேசுறவ... அவவோடை இருக்கேலாது டீச்சர்."

"இண்டைக்குப் போங்கோ பேந்து உங்களை கட்டாயம் எங்கடை வீட்டுக்கு கூட்டிக் கொண்டு போறன் சரியா..?"

"பேந்து எப்ப டீச்சர்..?" முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு நின்றான் குமரன். கண்களில் நீர்முட்டி இருந்தது.

★★

சடார்... சடார்... சளார்... கயிறு அவிழ்ந்து கிணற்று வாளி அறுந்து அறுபது முழக்கிணற்றுக்குள் விழுந்து விட்டது. சத்தம் கேட்டு மூத்தக்கா வந்துவிட்டா. 'எக்கணம் அம்மா வந்தால் இண்டைக்கு முடிஞ்சுது.' கால்முகம் கழுவ தண்ணி எடுக்கப்போன குமரன் கிணத்துக் கட்டில் எந்தவிதச் சலனமுமில்லாமல் நின்று கொண்டிருந்தான். மனத்தில் ஒரு வைரம் பாய்ந்தது.

"அம்மா வந்தா என்ன... நான் என்ன வேணுமெண்டே போட்டனான். இந்தக்கயிறு அவிண்டு போச்சு. இல்லாட்டி அறுந்து போச்சு, நான் என்ன செய்யுறது." சத்தம்கேட்டு முத்தம் கூட்டிக் கொண்டு நின்ற அம்மா வந்தா.. "அடகுமரன் என்னடா செய்தனி? தறுதலை. ஒவ்வொரு நாளும் உன்னோடை என்ரை வாணாள் போகுதடா, உன்னை என்ன செய்யுறது?" ஓவென்று கத்தினா.

"உன்னை வயித்திலை வைச்சு அழிச்சிருந்தால் இத்தினை ஆய்க்கினை வந்திருக்குமே எனக்கு? குறுக்காலை போக எத்தினை கோதாரியளை எல்லாம் விழுங்கினன், நீ அழிஞ்சு போகேல்லையே.." தன் தலையில் அடித்துக் கொண்டாள் பாக்கியம். 'அம்மா உனக்கு என்னை உயிரோடை வைச்சுப் பாக்க விருப்பமில்லையா?' பேசவில்லை-நினைத்துக் கொண்டான். 'நான் செத்தாத்தான் உனக்கு நிம்மதியா? ஏன் என்னோடை மட்டும் இவ்வளவு கோபம் உனக்கு? அம்மா. என்ரை அப்பா இருந்திருந்தால் இவ்வளவு ஆக்கினைப்பட்டிருப்பனா? என்ன மாதிரி வளர்ந்திருப்பன். இப்பெல்லாம் எனக்கெண்டு யார் இருக்கினம். நான் அப்பாவும் இல்லாத அம்மாவும் இல்லாத அனாதைக் குழந்தை மாதிரித்தானே?

மூத்தக்காவும் மற்ற அக்காமாரும் என்ன செய்வினம்? ஒவ்வொரு நாளும் உன்ரை பேச்சுக்களையும், நச்சரிப்புகளையும் கேட்டுக் கொண்டே உயிர் வாழுகினம். ஆனால் என்னாலை மட்டும்.... அம்மா நான் செத்துப் போனாத்தானை உனக்கு நிம்மதியே!'

★★

அடுத்த நாள் காலையில் குமரன் வயல் கிணற்றில் பிரேதமாகக் கிடந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# மோகம் தந்த சோகம்

தமிழோவியன்

**அடிவானச் சிவப்பு மேனி. பூந்தளிர் மென்மையாய் பொலிவுற்ற உருவம். கண்டவர்களைக் கவரும் கன்னி பிரேமலதா.**

"ஆயம்மா அக்கா..."
"என்னா முத்தையா....?"
"சின்னத்துரை ரெண்டரை மணிக்கு கட்டாயம் பங்களாவிற்கு வரச் சொன்னார்."
"என்ன அவசரம்?"
"பெரிய தொரை உங்களுடைய பிள்ளைக் காம்புரா புத்தகங்களைப் பார்க் கணுமாம்?"
"அதற்கு...?"
"அதற்கு முன்னே சின்னத்துரை புத்த கங்களைப் பார்க்கணுமாம், செக் பண்ணி, கை ஒப்பம் போடணுமாம்"
"சரி சரி! நான் ரெண்டு மணிக்கு வாரேன்."-ஆயம்மா மெல்ல கண்ணைச் சிமிட்டினாள்.

முத்தையா சின்னத்துரையின் அப்பு; அதை அவனது பேச்சு- நடத்தை- எடுத்துக் காட்டும் படி, உலவுவது வழக்கம். சின்னத் துரை செனவிரத்ன தோட்டத்தில் இல்லாத நாட்களில் முத்தையா அப்பு துரையாகவே மாறி விடுவான். சொந்தத் தோட்டமாக நினைப்பு. செனவிரத்ன சின்னத்துரையின் அந்தரங்கச் செயலாளர்- தான் என்பதை ஐயாமார்கள் அறிந்து வைத்திருந்தார்கள்.

"எப்படி அப்பையா? சுகமா இருக்கிறிங் களா....?"

தோட்ட உத்தியோகத்தர்கள், முத்தை யாவை 'ஐயா' அடைமொழி சொல்லிப் பேசுவது இப்போதெல்லாம் நடைமுறை வழக்கம். இப்படியான மரியாதைக்கு முத்தையா அப்பு எப்படி உரித்தானான்? அதுதான் மேலிடத்து சங்கதி! 'அந்த இரகசியமெல்லாம் நமக்கு எதுக்கு?' என்று தோட்டத்து சனங்கள் சும்மா கண்ணை மூடிக் கொள்வார்கள். கண்டும் காணாத வர்களாக ஒதுங்கிப் போய்விடுவார்கள், மலை உத்தியோகத்தர்கள்.

பிள்ளைகள் காப்பகத்திற்கு பொறுப்பாளியாக பிரேமலதா வேலைக்கு வந்து ஆண்டுகள் இரண்டு.

"ஆயம்மா" என்று அவளைத் தோட்டத் தொழிலாளர் கள் சொல்வதும், அழைப்பதும் பரம்பரைப் பழக்கம். 'நான் இன்னும் செல்வி. குமரியை அம்மா என்கிறார்களே...?' -பிரேமலதாவின் மனம் ஆரம்பத்தில் ஒரு குறையாக எண்ணியதுமுண்டு. நாளாக நாளாக அது மாறிவிட்டது.

அடிவானச் சிகப்பு மேனி. பூந்தளிர் மென்மையாய் பொலிவுற்ற உருவம். கண்ட வர்களைக் கவரும் கன்னியாக பிரேமலதா தங்காப்பூ தோட்டத்தில் காட்சி தந்து வந்தாள்.

புதிதாக வந்த சின்னத்துரை செனவிரத்ன "பிரேமா! பிரேமா!" என்று ஆயம் மாவை கூப்பிடுவதில் குதூகலம் அடைந்தார். பார்க்க அழகியாக இருந்தாலும், படிப்பில் ஓ.எல். தரத்தைக் கூட எட்டிப் பார்க்காதவள் பிரேமா. மந்திரியின் சிபார்சில் ஆயம்மா ஆகிவிட்டாள்.

பிள்ளைகள் காப்பகத்தில் தனக்கு உதவி யாக இருக்கும் பேச்சாயி, பென்சன் வாங்கிய பாட்டியம்மா. காப்பகத்தில் ஒரு நாள் திடீரென நுழைந்த சின்னத்துரையின் விழிகள் பிரேமாவின் கயல்விழிகளை- காந்தமாகக் கவ்வின. அவளின் முக அழகு சின்னத் துரையை மயக்கியது.

"இதுக்கு வெள்ளை பூசி எத்தனை வருசம்?" சின்னத்துரை பிள்ளைகளின் காப்பகத்தைச் சுற்றி நடந்தபடி பிரேமாவைப் பார்த்தார்.

"ஒரு வருசத்திற்கு மேலாகுது."

புன்னகை பூத்தாள் ஆயம்மா. மனங் குளிர்ந்தவரானார், செனவிரத்ன. மெதுவாக அவளின் பக்கம் வந்தார். தொட்டிலில் உறங்கிய குழந்தையை மெதுவாகத் தொட்டுத் தட்டினார். பேச்சாயி இடம் கொடுத்து எட்டிப்போய் விட்டாள். 'இளவட்டங்கள் மனம் விட்டுப் பேசட்டுமே.' பரந்த நெற்றியில் விழுந்துகிடந்த சுருண்ட முடியின் அழகு, பிரேமாவை- சின்னத்துரையின் முகத்தையே பார்க்கத் தூண்டியது. "பெரிய துரையிடம் சொல்லி அடுத்த கிழமை இதற்கெல்லாம் வெள்ளையடிக்க ஏற்பாடு செய்கிறேன். பெயின்ட் பூசச் சொல்கிறேன்."

"நன்றி சேர்."

இனிமை வார்த்தைகளில் தவழ்ந்தது. அருகில் வந்த அவரின் ஆடைகளிலிருந்து வீசிய நறுமணம், அன்று முழுதும் ஆயம் மாவை கனவில் சஞ்சரிக்க வைத்தது.

பெரியதுரை வெள்ளிக்கிழமை தபால் பார்த்துவிட்டு, இரத்தினபுரிக்குப் போய் விடுவார். பிறகு சொல்வானேன்; புண்ணிய வான் சின்னத்துரை வைத்தது தான் தங்காப்பூ தோட்டத்தில் சட்டம்.

முடிசூடா மன்னனாக அங்குமிங்குமாக ஓடித்திரிவார். எல்லா வேலைகளையும்- வேலைக்காரர்களையும் தனக்கு இடைஞ்சல் இல்லாதபடி, வகைப்படுத்தி வைத்துவிடுவார். வாலிப விருந்து அருந்தி மகிழ, அழகி ஆயம்மாவை வசப்படுத்திக் கொண்டார். சின்னத் துரையின் பங்களாவை- தனது எதிர்கால இன்பமாளிகை என்றவள் எண்ணினாள். இறுமாந்தாள்.

சின்னத்துரையின் சல்லாப சரசத்தை பிரேமாமேல் கொண்ட காதலாக நினைத்து, மயங்கினாள். அவன் வார்த்தைகளை நம் பினாள். இருவரும் கணவன்- மனைவியை விட நெருக்கமாகப் பழகினார்கள்.

ஒருநாள் இப்படி இருவரும் படுக்கை யறையில் உல்லாசமாக இருக்கும்போது-

"சேர்! அம்மா காரிலே வந்துக்கிட்டு இருக்காங்க......"

-முத்தையா கதவைத் தட்டி, சொல்லி விட்டு ஓடிவிட்டான்.

'சின்னத்துரையின் அம்மா கண்டு விட்டால்...? தன் கதி.....நடுச் சந்தியிலே நிற்க வேண்டிய அதோ கதி தான்...!' ஒரு விதமாக வாயிலிலேயே அம்மாவை நீண்ட நேரம் நிற்க வைத்தவனாய்- என்னென்னமோ சொன்னான். காரியமும் கச்சிதமாய் நடந்து முடிந்தது. படுக்கையறை யன்னலைத் திறந்து, பிரேமாவைத் தூக்கி வெளியே இறக்கி விட்டார் செனவிரத்ன. தோட்டத்தில் நின்று ஒருவாறு ஆடையைச் சரி செய்து கொண்டு, ஒளிந்து ஒதுங்கி; தோட்டக்காரன் துணையோடு; வேலி தாண்டி; வீடு திரும்பினாள் ஆயம்மா.

பெற்ற மகனின் தலையைத் தடவியபடி பங்களாவின் உள்ளே நடந்தாள்; விருந்தினர் கூடத்திற்குள் நுழையவில்லை.

"நாளைக்கு பெண் வீட்டார்கள் பகல் சாப்பாட்டுக்கு இங்கே வாராங்க. எல்லா ஏற்பாடுகளையும் கச்சிதமாய் செய்



முத்தையா." அம்மாவின் குரல் சற்று கண்டிப்பாக இருந்தது. 'பெண் பிள்ளையின் செருப்பு எப்படி படுக்கையறைக்குள்ளே வந்தது...?' -என்று விசாரணை வைக்காதது, முத்தையாவை ஆனந்தத்தில் மிதக்கச் செய்தது.

"நம்ம சின்னத்துரைக்கு, வீடு, கார் எல்லாம் சீதனமாய் கிடைக்குது. அடுத்த மாதம் பலாங்கொடையில் கலியாணம் முத்தையா."-அம்மா மனம்பூரித்து சொன் னார். குளித்துவிட்டு வந்த செனவிரத்ன மனங்களித்து நின்றார்.

□□

**வ**யிற்றைத்தடவிக் கொண்டாள் பிரேமா. "மருந்தாக்கார மருதாயியை வரச் சொல்றேன். எல்லாம் காதோடு காதா முடிச்சிடுவா." பேச்சாயி அனுபவத்தைப் பாடமாகச் சொல்லி, ஆயம்மாவை ஆறுதல் படுத்தினாள்.

தோட்டம் மாறிச் செல்லும் சின்னத்துரை, துரைச்சாணியோடு சீதனம் கிடைத்த காரில் சிரித்தபடி பறந்தார்.

'ஒப்புக்குக்கூட தன்னிடம் வந்து ஒரு வார்த்தையும் பேசாமல் போறாரே!' ஆயம்மா பிரேமலதாவின் அந்தரங்க மனம் அலறியது. எவர் காதில் அது விழப் போகின்றது....?

---

# இடம்பெயர்வு...

- ரூபராணி -

*என் அன்புக்குரிய அப்புவுக்கு,*

*உங்கள் கடைக்குட்டி மகன் எழுதுவது, நான் ஏ.எல். பரீட்சையை எழுதிமுடித்து விட்டேன், முடிவு முருகன் விட்டபடி. நானும் அம்மாவும் சாவகச்சேரியில் இருந்து பிள்ளையார் கோயிலடிப்பக்கமாய் இடம் பெயர்ந்து விட்டோம். மரத்தடியிலிருந்துதான் படித்தேன். பரீட்சை சென்ரருக்கு இங்கிருந்து இருபத்தஞ்சு மைல் சைக்கிள் மிதிச்சு ஒவ் வொரு முறையும் போகைக்க பட்டபாடு...? என்ன செய்ய தலைவிதி, கஷ்டப் பட்டதுக்கு நாலு ஏ,எடுக்கவேணும்.*

*நீங்களும் சின்னக்காவும், பெரியக்கா வோடு ஆறுதலாய் இருப்பீர்கள் என்பதை நினைக்கச் சந்தோஷமாயிருக்கு, வயசுபோன காலத்தில் நீங்களாவது வயிறாரச் சாப்பிட்டு கட்டிலில் படுப்பீர்களென்ற நினைப்பு...*

பாதிக்கடிதத்தைப் படித்த சபேசனால் மீதியைப் படிக்கமுடியவில்லை. நெஞ்சு



கனத்தது. அவர் கண்களில் நிறைந்த நீர் வடிவதா வேண்டாமா என்று போராடியது. கடிதத்தை நான்காக மடித்துத்தலையணைக் கடியில் வைத்தார், அடிவயிற்றிலிருந்து தீச்சுவாலை நெஞ்சுவரை வந்து அவர் உடல்பூராவும் தகனஞ் செய்வது போல் இருந்தது. பக்கத்திலிருந்த பனைமட்டை விசிறியை எடுத்து அவசர அவசரமாக முகத்திலும் மார்பிலும் வீசிவிட்டு அதைத் தூரப் போட்டார். தோளில் தூங்கிக்கிடந்த துவாய்த் துண்டால் முகத்தை அழுந்தத் துடைத்தார். அவருடைய முகம் ஒரு கணத் துக்குமேல் சிவக்க மறுத்தது, கிறாதியன்ன லின் ஊடாகத் தெரிந்த தூரத்துப் பச்சை களை வெறிக்கப்பார்த்தார், தன்னைச் சுற்றிலும் 'சூனியம்' வலைபின்னி இருப்பது போல் உணர்ந்தார்.

சபேசன், மனைவியையும் மகனையும் பிரிந்து கொழும்புக்கு வந்தது நேற்றுப் போல் இருக்கிறது. பத்துமாதங்கள் பறந்து விட்டன. அவர் நினைவுகளில் விழுந்த சவுக்கடிகளை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தார்.

ஆரம்பத்தில் மூத்தமகள் மனோகரியுடன் சபேசனும் இந்துவும் சந்தோஷமாய் இருந்தார் கள் என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

**"அப்பு! உங்களுக்கு பென்ஷன் வருகுதுதானே? நீங்களும் இந்துவும் தனியாக சமைத்து சாப்பிடலாம்தானே?"**

மனோகரியின் கணவன், குமரன் ஒரு பட்டயக் கணக்காளன். மாதங்கள் மூன்றைக் கடந்தன. மனோகரியின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டும் காணாதவர் போலி ருந்தார் சபேசன், இந்து தன் அக்காவைப் புரிந்து கொள்ளமுடியாமல் திகைப்பில் இறுகிப்போனாள்.

"அப்பு, உங்களுக்குப் பென்ஷன் காசு வருகுதுதானே? நீங்களும் இந்துவும் தனியாச் சமையல் செய்து சாப்பிடலாமே!" மனோகரி சாதாரண மாய்ச் சொன்னாள். "ஓம் மோனே, உங்களுக்கு இடைஞ்சலெண்டா நாங்கள் எங்களின்ர சாப்பாட்டைப் பாத்துக் கொள்றம்." சபேசன் அமைதியாகச் சொன் னார்.

ஒரு மாதம் ஓடியது. உறவுகளிடையே மௌனராகங்கள். அதைக் கலைத்தாள் மனோகரி: "யாழ்ப் பாணமிருந்து குமரனின் மருமகள் வரப்போறா வாம். நீங்களும் இந்து வும் ஸ்ரோர் அறையைப் பாவித்தால் வாறவவுக்கு வசதியாய் இருக்கும் என்று பார்க்கிறேன்."

சபேசனின் கண்களில் ஸ்ரோர் றூம் எட்டிப்பார்த்தது. தட்டு முட்டுச் சாமான் களின் தங்குமடம்: ஓட்டடை தூசிகளின் சரணாலயம். எல்லாவற்றையும் ஒதுக்கி ஒண்டிக்கொள்ள இடம் எடுக்கவேண்டும்.

சபேசன் மனோகரிக்குப் பதில் சொல்ல வில்லை. அவரால் பதில் சொல்லவும் முடியவில்லை. மௌனம் சம்மதத்தின் அடை யாளந்தானே?

இந்து கடுகாய் வெடித்தாள்:

"எங்களை விட வாறவை உசத்தியோ?

"வாயை மூடு!"

மனோகரி குரலை உயர்த்தினாள்: "இதுக்குத்தான் எங்களைக் கூப்பிட்டதோ?"

"அதிகம் பேசாதே! யாருடைய தயவில் நீ இருக்கிறாய் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்!"

அக்காவும் தங்கையும் வாக்குவாதப்படு வதைப் பார்த்த சபேசனுக்கு வயிற்றைக் கலக்கியது, அவருடைய பார்வையின் கெஞ்ச லைக் கண்ட இந்து அமைதியானாள். சபேசனும் மகளும் ஸ்ரோர் அறைக்கு இடம் பெயர்ந்து இரண்டு மாதமாகிவிட்டது.

வீட்டுக்குள்ளேயும் ஒரு அகதிமுகாமா? தனக் குள் எழுந்த கேள்வியைத் தட்டி அடக்கினார் சபேசன்.

ஒரு கொடியின் இருமலர்கள் எப்படி நிறம் மாற முடியும்? அந்தத் தகப்பனால் சீரணிக்க முடியவில்லை. மாதங்கள் உருண் டோட மனோகரியின் மனதில் 'அந்நியம்' காடாக வளர்ந்து, தந்தை தங்கை உறவுகளைத் தங்கவிடாமல் தடுத்தது.

அன்று.... லண்டனில் இருந்து வந்த மனோகரியின் நண்பி நந்தினிக்கு மதிய விருந்து. மேற்கத்திய பாணியில் சமையல் தடபுடலாய் நடந்து கொண்டிருந்தது. பேச்சு வாக்கில் மனோகரி நந்தினியிடம் "அப்புவை வேறு ஒரு அனெக்ஸ் பாக்கச் சொல்லப் போறன். அடிக்கடி விசிற்றஸ் வாறபடியால் எங்களுக்குக் கஷ்டம்" என்று சற்று உரத்துச் சொன்னாள்.

ஒரு மூலையில் ஒதுங்கியிருந்த சபேசனுக் குப் பகீர் என்றது. 'நாங்க இடத்துக்குப் புதிசு. மகளை நம்பி வந்தம்.. இப்பவேறு இடம்பார் என்றால் நாங்கள் எங்கதேடு றது?' இப்படி மனோகரியைக் கேட்க நினைத்த சபேசனை ஏதோ ஒன்று கேட்கவிடாமல் தடுத்தது.

சபேசன் ஸ்ரோர் றூமுக்குப் போய்க் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தார், 'தமிழனுக்குக் கடவுள் தந்த தண்டனைதான் இது, வீட்டிலே இல்லாதது நாட்டில் எப் படிவரும்?, அவர் சிந்தனையும் அவரோடு சேர்ந்து நடந்தது.


மனோகரி குழந்தையாய் தன்தோளிலும் மார்பிலும் வள்ர்ந்ததை எண்ணினார். தன் முதுகிலே அவளைச் சுமந்து, தான் மாடுபோல் தவழ்ந்ததையும் எண்ணினார்.

மனோகரிக்கு அம்மை அள்ளிப் போட்ட போது மொட்டையடித்து ஈரத்துண்டோடு நூற்றி எட்டுமுறை அம்மன் கோயிலில் உருண்டு புரண்டதும் அவர் நினைவுக்கு வந்தது.

சபேசனின் தொண்டையில் சோகம் பந்தாக அடைத்தது. அதற்கு மேல் அவரால் எதையும் சிந்திக்க முடியவில்லை. 'ஏற நனைந்தவனுக்கு இனிக் கூதலென்ன குளி ரென்ன?' இந்துவும் சபேசனும் இடம் பெயர்ந்து செல்கிறார்கள்!

---

# சொல் மனமே



ஷர்மிளா இஸ்மாயில் கண்டி

*இருண்டிருந்தது*
*வாழ்க்கை வானம்;*
*வர்ண வில்லாய்*
*வந்து நின்றாய்!*

*வரண்டிருந்தது*
*வசந்தம்–அன்பின்*
*தளிர்களை*
*தழைக்க வைத்தாய்!*

*அழுகையெனும்*
*ஆற்றுக்குள் இறங்கி நின்றேன்;*
*அங்கும் வந்து நீ*
*அன்பினை*
*அள்ளித் தெளித்தாய்.....*

கவிதையாய் யோசித்துக் கொண்டிருந் தாள். டயறியைத் திறந்து எழுதினாள். புல் வெளியின் பசேலென்ற பரப்பில் இடைக் கிடை சிவப்பு, மஞ்சள், வெள்ளையாக சிறு பூக்கள். இரசித்தாள்

"எக்ஸ்கியூஸ் மீ..."

சிந்திப்பினின்றும் கலைந்து நிமிர்ந்தாள். அழகாய், உயரமாய் பளீரென்ற புன்சிரிப்போடு நின்றிருந்தான்.

"உங்களோட கொஞ்சம் பேசணும்..."

"ஓ. தாரளமாய் பேசுங்களேன்."

"வந்து... நான் இப்போ சொல்லப் போறதைக் கேட்டு கோபப்பட மாட்டீங் களே.?"

"இல்லை. நிச்சயமாய் இல்லை" டயறியை மூடி வைத்தாள். பக்கத்தில் சற்று தள்ளி அமர்ந்தவன் விரல்கள் புற்களைப் பிய்த்தெடுத்தன. சின்ன மலரொன்றைப் பறித்து பார்த்திருந்தான். பின் பேசினான்:

"கவிதை எழுதுறீங்களா? உங்க தனிமை யைக் கலைச்சுட்டேனா? கற்பனையைக் குழப் பிட்டேனா.?"

"ச்சீ.. அதெல்லாம் இல்லை."

"ரொம்ப நாளாவே நினைச்சிட்டிருந் தேன்... உங்கள எனக்கு ரொம்பவும் பிடிச் சிருக்கு. உங்க குணம், பண்பு எல்லாமே என்னை ரொம்பவும் கவர்ந்திருக்கு!...."

"...................."

என்ன பேசமாட்டீங்களா? நான் இத எப்படி உங்ககிட்ட சொல்றதுன்னு தவிச்சிட்டு இருந்தேன்.

"................"

"என்னவோ இன்னைக்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைச்சிது. எவ்வளவு காலம்... எத்தனை வருஷங்கள் உங்களுக்காக காத்திருக்கிகேன் தெரியுமா?"

"............."

"உண்மையாய்ச் சொல்றேன். என் நேசம் சத்தியமானது. உங்களப் பற்றிய கனவுகளை என் மனசின் அடிவாரத்தில வளர்த்து வெச்சிருக்கேன். உங்க அனுமதியில்லா மலே..."

"................"

"அது தப்பா? தப்பானா மன்னிச்சுடுங்க. ப்ளீஸ். ஒரு பதில் சொல்லுங்க. என்னை விரும்புறீங்களா இல்லையான்னு ஒற்றை வரியில ஒரு சொல்லாவது சொல்லிடுங்க... சொல்லுங்க. சொல்லிடுங்க..."

"...................."

"எங்க அந்த டயறிய தாங்களேன். என்ன எழுதியிருக்கீங்க? கவிதையா?"

"ம்..."

"நல்லாருக்கு. எனக்கு இப்பவே பதில் சொல்லணும்னு அவசியம் இல்ல; நல்லா யோசிச்சு மெதுவாகவே சொல்லுங்க... சரியா.. வர்றேன் வரட்டுமா?"

"தந்திட்டு போங்க."

"எதை... ஓ.. இந்த டயறியா? ஸொரி மறந்துட்டேன். இந்தாங்க."

"இல்ல. நான் கேட்டது என் இதயத்தை! அதையும் எடுத்திட்டு போறீங்களே...?"

கேட்டதும் மலர்ந்தான். மௌனமாய் அமர்ந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# வெள்ளத்தில் தோணி!

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்

செதுக்கியது போலிருக்கும் தேகம்.
சீறும் புலியைப் போலிருக்கும் தோற்றம்.
பதுக்கிய வாளிருக்கும் உறையுள்.
சீவும் அரிவாள் போலிருக்கும் மீசை உதட்டில்!

கைகள் இரண்டும் இரும்புத் துண்டுகள்.
கால்கள் இரண்டும் கருங்கல் தூண்கள்.
கண்கள் இரண்டும் கரு வண்டுகள்.
பெண்கள் கண்டாலவனை பெருமூச்சுப்பொங்கும்!

கட்டிளம் காளை.
வெட்டிவா என்றால் வென்றுவருவான் பகையை!
படைக்கு அவனே தளபதி-எந்தத்
தடைக்கும் தளராத குணத்துக்கு அதிபதி!

காதல் வலை வீசாதோர் இல்லை.
காளையவன் ஏறெடுத்தும் பார்ப்பதுவும் இல்லை.
முல்லைப்பல் காட்டுகின்ற பெண்கள்
தொல்லையடா சாமியென்று எண்ணுகின்ற காளை!

"முட்டவரும் முன்னிரண்டு கணைகள்
கெடுத்துவிடும் வீரத்தின் முனையை!
பித்தளிக்கும் பின்னிரண்டு அழகும்
மூட்டிவிடும் மோகத்தின் தீயை!
செத்தழியும் செருக்களத்து வீரம்!"
என்றவனும் நினைத்திருந்தான் மனதில்!

"என்னை இறைவன் படைத்தனன்
கண்ணை இமை காப்பதுபோல
வண்ணத்திருநாட்டை காவல் செய்யவே!"
சொன்னான் காளை, நண்பர்கள் வியந்தனர்!

"போடா மூடா!
வாலிப வயதில் வசந்தம் காதல்!
கண்தான் பெண்கள். கண்தான் பெண்கள்.
எண்சாண் உடம்பு அழிவதன் முன்னால்-அந்தக்
கண்கள் வழியே சொர்க்கம் காணடா!"
உயிரான நண்பர்கள் உபதேசம் செய்தனர்.

"ஊருக்கு சொல்லு உடனே கேட்கும்;
போருக்கு நாள் குறிப்பதாயிருந்தால்
யாருக்கும் அஞ்சாத என்னிடம் சொல்லு.
காதல் கதைகள் இங்கே வேண்டாம்.
மோதல் கதைகள்தான் என் காதுக்கு வேண்டும்!"

"செருக்களப் போரில் இரத்தம் சிந்தும்.
சிரித்திடும் பெண்ணுடன் காதல் போரில்
புதுப்புது இரத்தம் உடலில் ஊறும்!
படுகளப் போரில் வரவு மரணம்!
பாவையரோடு காதல் போரில்-
வரவு என்பது ஜனனம், ஜனனம்!"
நண்பன் இனிய விளக்கம் உரைத்தான்.

கேட்கும் நிலையில் காளையில்லை.
"பூக்கும் உனக்கும் காதல் ஒருநாள்,
தாக்குவாள் ஒரு மோகினி உன்னை!
தூங்கும் புலியே உன்னை இடற
ஏங்கவைக்கும் மாங்கனி வருவாள்!"
அலட்சியம் செய்தான் இலட்சியக் காளை!

'நானும் மயங்கும் நாள் ஒன்று வருமா?
காணும் பெண்களிடம் மயங்குபவன் நானா?'
வினா எழுப்பிப் பார்த்ததும் உண்டு.
"இல்லை, இல்லை நடக்காது ஒருநாளும்"
விடை குறித்து வைத்ததும் உண்டு.



நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்று!
நேர்மாறு நிகழ்வுகள் வாழ்க்கையில் சகஜம்.
தேன்கூடாய் இருந்த காளையின் மனதில்
கல்லெறி நடத்தவும் ஒருத்தி வந்தாள்!

போர்க்களம் ஒன்றில் விழுப்புண்பட்டான்,
போக்கிடவென்று வைத்தியரை நாடியவன்
தாக்குண்டுபோனான் மோகினி விழியால்!
புவனா அவள் பெயர். வைத்தியரின் பெண் அவள்!
கனாக்காணும் விழிகள். நிலாப்போல வதனம்!

"காயத்துக்கு வைத்தியம் மருந்தில் உண்டு.
மாயத்துக்காரி பைத்தியமாக்கிவிட்டாளே!
எந்த லோகத்தில் மருந்து உண்டு இதற்கு?"

காயம் ஆறிய பின்னரும்-
தினமும் மருந்து கேட்டுப் போனவனை
வைத்தியர் பார்வை சந்தேகமாய் மேய்ந்தது.
சாயம் வெளுத்துவிடுமோவென்று
நினைக்கவும்கூட
பித்தான மனதில் புத்தியில்லாமல் போனது!

வந்தது ஒருநாள் வாய்ப்பான தருணம்.
வைத்தியர் இல்லை, வடிவழகி இருந்தாள்!
மருத்துவர் இல்லை, மருந்து இருந்தது.
நோயைச் சொல்ல தயக்கமாய் இருந்தது.
பேயாய் மாறிவிடுவாளோ? பயமாய் இருந்தது!

வாருங்கள் என்றது வண்ணக்கிளி.
குரலினிமை, கூறும் பெண் இனிமை!
மனதுக்குள் மல்லிகைப் பூ வாசம்!
காளை கனவுக்குள் விழுந்து போனான்.

அவளுக்கோ வெட்கம்!
அவன் மௌனித்து நிற்பதாலும் துக்கம்!

"அமருங்கள்!" என்றாள் மௌனம் உடைத்து.
"அமரத்தானே வந்தேன், ஆசனம் உண்டா?"
ஒத்திகை பார்க்காமல் உதடு திறந்துவிட்டான்!

"ஏழையின் குடிசையிது
இங்கே ஆசனம் எப்படி இருக்கும்?"

"ஆசனம் கேட்டேன்;
புறத்தில் அல்ல, உன் அகத்தில்!"
சட்டென்று புரிந்ததும்
சந்தனமயில் குங்குமமாய் சிவந்தது.
தங்கநிலவு தரைநோக்கிக் குனிந்தது!

"மறுப்பா? விருப்பா?"
வினாதொடுத்தான் வீரக்காளை.
'குறு குறு பார்வைக்கு சொந்தக்காரி
சுடு சொல்வீசாமல் இருக்க வேண்டும்'
ஆண்டவனை உதவிக்கு அழைத்தான்.

நேரடியாக விடை சொல்லாமல்
தேனிலும் இனிய இதழ்கள் திறந்து
"ஆசனம் உண்டு, ஆனால் காலியில்லை!"
என்றாள் பாவை.
வாளால் வெட்டுண்ட சிரம்போல்
காளை துடித்து துவண்டு போனான்!

கடைக்கண் பார்வை செலுத்தி
கனியிதழ்மீது புன்னகை இருத்தி
பெண்ணவள் சொன்னாள்;
"ஆசனத்தில் நீங்கள்
அமர்ந்திருந்து கொண்டு
காலியாக இருக்கிறதா?
என்று கேட்பது கேலிதானே?"

காளை மனம் கரும்பாய் இனித்தது.
பகையை வென்ற படைபோலானான்.
"நீயே யாவும். நினைவெல்லாம் நீயே!
சேய்போல் நானும் உன்மடிவந்தேன்.
வாயின் அமுதம் பருகத் தருக!
வாழ்வின் வசந்தம் அறியத் தருக!"

போருக்கஞ்சாத தளபதி
பெண்மயில் முன்னால் கெஞ்சிக்கிடந்தான்.
விந்தையோ இது? வியப்போ இது?
இல்லையென்கிறார் திருவள்ளுவப் பெருந்தகை.

"நாணமும்- ஆண்மையும்
தோணிகளாகும்!
காதலும் காமமும்
வெள்ளமாகும்!
தோணிகளை வெள்ளம்
இழுத்துச் செல்லும்."

"காமக் கடும் புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னாம் புணை."
அதிகாரம்-114. குறள்-1134.

* கட்டணங்கள் அதிகரிக்கும் வேளையில் மின்சாரக் கட்டணமும் அதிகரிக்குமா?

எம்.எம்.ரிஸ்வான், தொம்பகஹாவெல

கும்! அதிகரிக்கும்! யுத்தம் இருக்கிறதே யுத்தம், அதற்கு பசியோ பசி. கொடுத்துக் கொண்டே இருப்பதற்காக எல்லாவற்றையும் அதிகரித்துக்கொண்டே இருக்க வேண்டும். எந்த ஆட்சி வந்தாலும் யுத்தக் காட்சி இருக்கும்வரை அதுதான் கதை.

* டியர் சிந்தியா! உங்களைப் புகழ்ந்தால் மயங்கிவிடுவீர்களா?

எம்.பி.தேவி, சின்ன செல்வகந்த.

புகழப்படும்போதுதான் மிக விழிப்பாக இருக்க வேண்டும்.

* கவிதை எழுதுபவர்கள் கவிஞர்களாக முடியுமா?

ஜெ.சங்கர், மஸ்கெலியா.

கவிஞர்கள்கூட சில சமயங்களில் எழுதுவதை கவிதையென்று ஒப்புக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

* இந்திய முன்னாள் கப்டன் அசாருதீனின் தற்போதைய நிலை எப்படியிருக்கிறது?

வி.விவேகானந்தன், கொழும்பு-5.

## சிந்தியா பதில்கள்

சகாரா கிண்ணப்போட்டியில் அசாருதீன் உஷாருதீன். கப்டன் பதவியின் சுமை கட்டிப்போட்டிருந்த அவரது திறமை மீண்டும் கட்டவிழ்ந்து பாய்கிறது. கப்டன் பதவி போய்விட்டதே என்று கண்ணைக் கசக்கிக் கொண்டிருக்கும் ரகம் அல்ல தான் என்பதையும் பளிச்சென்று புரியவைத்துக்கொண்டிருக்கிறார்.

* கலைஞர் கருணாநிதியின் மகன் ஸ்டாலின் சென்னை நகர மேயராகப் போட்டியிடுகிறாரே? மகனுக்கு பதவி கொடுக்க நினைப்பது சரியா?

எஸ்.சுதாகரன், மட்டக்களப்பு.

மகன் தந்தைக்குச் செய்யும் கடமையை ஸ்டாலின் செய்துவிட்டார். தந்தை மகனுக்காற்றும் கடமையைச் செய்ய முடியவில்லையே என்று கலைஞர் இனி கவிதை நடையில் கவலைப்படத்தேவையில்லை. அமைச்சரவையில் இடம் கொடுத்திருந்தால்கூட ஸ்டாலின் பத்தோடு பதினொன்றாகத்தான் இருந்திருப்பார். ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு. தமிழக தலைநகரின் மேயர் பதவி உறுமீன். கலைஞர் புத்திசாலி!

* கடன் வாங்கியவர்கள் அதனைத் திருப்பிக் கேட்டால்கூட கொஞ்சமும் கவலைப்படாமல் தவணை சொல்கிறார்களே! இதற்கு என்ன செய்யலாம்?

எம்.சன்முகநாதன், ஹட்டன்.

கடன் கொடுப்பதற்கு முன்னர் கேட்டிருக்க வேண்டிய கேள்வி இது. அப்படிக் கேட்டிருந்தால் என் பதில்: கடன் உறவுக்குப் பகையாகலாம். இப்போதெல்லாம் கடன் வாங்குபவர்கள் புத்திசாலிகளாகிவிட்டார்கள்.

ஒருத்தர் பத்துப்பேரிடம் கடன்வாங்கியிருந்தார். பத்துப்பேரும் வாங்கிய கடனைத் திருப்பித்தா என்று அவரைத் துரத்திக் கொண்டே இருந்தார்கள். அவர் பத்துப் பேருக்கும் ஒரே பதிலைச் சொல்லிச் சமாளித்துக் கொண்டிருந்தார்.

"இந்த மாதம் 30ம் திகதி கண்டிப்பாக உங்கள் பணத்தைக் கொடுத்துவிடுவேன்" என்பதுதான் பத்துப்பேருக்கும் அவர் சொன்ன பதில்.

அவரது நண்பர் ஒருத்தர் அவரிடம் கேட்டார்.

"எப்படி 30ம் திகதி பத்துப்பேருக்கும் பணம் கொடுக்கப்போகிறீர்கள்? அன்று அப்படி என்ன அதிசயம் நடக்கப்போகிறது?" என்று கேட்டார்.

"அதிசயம் 30ம் திகதியல்ல, அதுக்கு முதல் நாளே நடக்கப்போகுது," என்றார் அவர்.

"அப்படியா விவரமாச் சொல்லுங்களேன்," என்றார் நண்பர்.

"வேறு ஒண்ணுமில்லை, 30ம் திகதி தானே அவங்களையெல்லாம் வரச்சொல்லியிருக்கிறேன். அதுக்கு முதல்நாளே நான் புறப்பட்டு தலைமறைவாகிவிடுவேனே!" என்றார் பெருமையாக.

* சிந்தியா! ஒரு குட்டி ஜோக் சொல்ல முடியுமா?

ஆனந்தி ராமசாமி, கண்டி.

விரல்விட்டு எண்ணமுடியாத நடிகர் யார்? ஒருவிரல் கிருஷ்ணராவ்.

* அரசியல்வாதியாக வேண்டுமானால் என்ன தகுதிகள் வேண்டும்? தெரிந்தால் சொல்லுங்கள் பார்க்கலாம்?

மா.செல்வநாதன், திருக்கோணமலை.

அப்பா அரசியல்வாதி. மகன் அப்பாவிடம் போய், "அப்பா! உங்களைமாதிரியே நானும் அரசியலில் சேரவேண்டும். தலைவராக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எனக்கு அரசியல்பாடம் சொல்லித்தா!" என்றான்.



அவரும் 'சரி' என்றுவிட்டு ஒரு பெரிய ஏணியை எடுத்துக் கொண்டு வந்தார். ஒரு சுவரில் சாத்தினார்.

"மகனே! இந்த ஏணியில் ஏறிப்போய் அந்தப் பரண் மேலே இருக்கும் புத்தகத்தை எடுத்துக்கொண்டுவா!" என்றார்.

"ஏணி உயரமாக இருக்கே. பயமாக இருக்கு" என்றான் மகன்.

"பயப்படாதே... நான் பிடித்துக் கொள்கிறேன்" என்றார் அப்பா.

மகன் ஏணியில் ஏறினான். உச்சிக்குப் போனதும் அப்பா பிடியைவிட, ஏணி சரிந்து மகன் கீழே விழுந்தான். இடுப்பை பிடித்துக்கொண்டு எழுந்து:

"என்னப்பா இப்படி கையை விட்டுட்டிங்களே!" என்று கத்தினான். அப்பா நிதானமாகச் சொன்னார்:

"மகனே! இதுதான் அரசியலில் முதல் பாடம்" என்றார்.

"இதில் என்ன பாடம் இருக்கிறது?" என்று கேட்டான் மகன்.

அப்பா சொன்னார்:

"பெற்ற அப்பனாக இருந்தாலும் அவனை நம்பாதே. அதுதான் முதல்பாடம்!"

# கனடாவில் சகாரா கிண்ணப் போட்டி
# பாகிஸ்தான் அணியின் அமோக வெற்றி

கனடா 'சகாரா' கிண்ணத்துக்கான போட்டியில் பாகிஸ்தான் அமோக வெற்றியீட்டியுள்ளது.

சமீபத்தில் பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்திருந்தது. அங்கு நடைபெற்ற போட்டிகளில்-டெஸ்ட் தொடரில் வெற்றிபெற்றபோதும், ஒருநாள் போட்டித் தொடரில் தோல்வி கண்டிருந்தது.

இங்கிலாந்தில் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் ஏற்பட்ட தோல்விக்கும் சேர்த்து இப்போது ஈடுகட்டிவிட்டது. கனடாவில் சகாரா கிண்ணத்துக்கான ஐந்து ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணி மீண்டும் தனது உத்வேகத்தை மீளப்பெற்றுக் கொண்டது.

வாசிம் அக்ரம், சக்லீன் முஸ்டாக் ஆகியோரின் பந்துவீச்சில் இந்திய துடுப்பாட்ட வரிசை மளமளவென்று சரிந்தது.

இஜாஷ் அகமட், சயிட் அன்வர், சலீம் மாலிக் ஆகியோர் சகாரா கிண்ணப்போட்டிகளில் பிரகாசித்த பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களில் முதல்வரிசையில் இருக்கின்றனர்.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் பிரகாசித்த பாகிஸ்தான் நட்சத்திரங்களில் ஒருவரான சடாக் கபீர், சகாரா கிண்ணப் போட்டிகளில் ஏமாற்றிவிட்டார்.

### ஆட்டத்தில் தொய்வு.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர்களில் எதிரணிகளுக்கு கலக்கத்தை கொடுக்கும் ஆபத்தான ஆட்டக்காரர் இன்சமாம் உல்ஹக். கனடா சகாரா கிண்ணப் போட்டியில் இன்சமாமின் ஆட்டத்தில் ஒரு தொய்வு காணப்பட்டது. இறுதிப்போட்டியில் 19 பந்துகளை சந்தித்து 9 ரன்களை மட்டுமே தன் பங்குக்கு சேர்த்துக்கொடுத்தார் இன்சமாம்.

முதல் நான்கு போட்டிகளிலும் சுமாராக விளையாடிய அமீர் சொகைல் இறுதிப் போட்டியில் 44 ரன்களை சேகரித்தார். அதற்காக 96 பந்துகளை அவர் சந்திக்க வேண்டியிருந்தது.

முதல் நான்கு போட்டிகளிலும் துடிப்போடு ஆடியவர் இஜாஷ் அகமட். பாகிஸ்தான் அணியின் நம்பிக்கை நட்சத்திரமான இஜாஷ் அஹமட் இறுதிப்போட்டியில் விளாசமுடியாமல் திரும்பியது இரசிகர்களுக்கு ஏமாற்றம். 53 பந்துகளை சந்தித்த இஜாஷ் அகமட் 27 ரன்களை சேகரித்துக் கொடுத்தார்.

இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் சலீம் மாலிக் 47 பந்துகளில் துரிதமாக ஆடி 43 ரன்களை குவித்தார். சலீம் மாலிக்குக்கு இன்னொரு சந்தோசமும் சேர்ந்து கொண்டது. சகாரா இறுதிப்போட்டியில் குவித்த ரன்களோடு ஒருநாள் போட்டிகளில் ஆறாயிரம் ரன்களைக் கடந்தார். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக ரன்கள் குவித்தவர்கள் பட்டியலில் எட்டாவது இடத்தில் இருக்கிறார் சலீம் மாலிக். இதுவரை 6007- ரன்களை குவித்துள்ளார்.

### அசார் 6082

சகாரா கிண்ணப் போட்டியில் வைத்து ஆறாயிரம் ரன்களை கடந்த மற்றொரு வீரர் (சகாரா போட்டி உட்பட) அசாருதீன் இதுவரை குவித்துள்ள மொத்த ரன்கள் ஆறாயிரத்து எண்பத்திரெண்டு.

சகாரா கிண்ணப்போட்டிகளில் இரண்டு போட்டிகளில் இந்தியா வெற்றியீட்டியது. மூன்று போட்டிகளை கோட்டை விட்டது. அதிலும் நாலாவது போட்டியிலும், ஐந்தாவது



போட்டியிலும் இந்தியாவின் துடுப்பாட்டம் மகா மோசமாக இருந்தது. இறுதிப் போட்டியில் பந்துவீச்சும், பந்து தடுப்பும் சிறப்பாக இருந்தது. 50 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 213 ரன்களை எட்டியது. அதனால் இந்தியா கடுமையாக முயன்றால் வென்றுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆரம்பத்தில் களம் இறங்கிய டெண்டுல்கரும், ஜடேஜாவும் பொறுமையாக ஆடிக்கொண்டிருந்தனர். 23 ரன்களை எடுத்திருந்த நிலையில் சலீம் மாலிக் குறிதவறாமல் எறிந்த பந்தால் ரன் அவுட்டானார் டெண்டுல்கர்.

சகாரா கிண்ணப்போட்டிகளில் இந்திய அணியில் புதிய நம்பிக்கை நட்சத்திரமாகியிருப்பவர் ராகுல் திராவிட். ஆனாலும் இறுதிப்போட்டியில் 20 ரன்களோடு திரும்பினார். சகாரா கிண்ணப்போட்டியில் இந்திய அணியின் கௌரவத்தை காக்கும் விதமாக கைகொடுத்து ஆடியவர் அசாருதீன். அவரும் இறுதிப் போட்டியில் இரண்டு ரன்களோடு திரும்பினார்.

முதலாவது போட்டியில் அபாரமாக ஆடி 89 ரன்கள் குவித்து ஆட்டமிழக்காமல் வெற்றியோடு திரும்பியவர் டெண்டுல்கர். பின்னர் நடைபெற்ற நான்கு போட்டிகளிலும் டெண்டுல்கரின் ஆட்டம் சோபிக்கவில்லை. கப்டன் பதவி.... இந்திய அணி வீரர்களின் திறமைக்கு தடை. என்பதை அசாருக்குப் பின்னர் டெண்டுல்கரும் நிரூபிக்கப் போகிறாரா?

### பற்றாக்குறை

கப்டன்களை மாற்றுவதால் மட்டும் இந்திய அணியை தூக்கி நிறுத்த முடியாது. சவாலை எதிர்கொண்டு இறுதிவரை போராடும் உத்வேகம் இந்திய அணியிடம் பற்றாக்குறையாக இருக்கிறது. அதனை ஈடு செய்யும் வரை இந்திய அணிக்கு கிண்ணராசி இல்லை. சகாரா கிண்ணப் போட்டியும் அதற்கு ஓர் உதாரணம்.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் அனில் கும்ளேயின் பந்துவீச்சு படு மோசமாக இருந்தது. சிங்கர் கிண்ணப்போட்டியிலும் கும்ளேயின் பந்துவீச்சு வேலை செய்யவில்லை. சகாரா கிண்ணப்போட்டியில் மீண்டும் கும்ளேயின் பந்துவீச்சு வித்தை காட்டியது. ஐந்து போட்டிகளிலும் மொத்தம் 13 விக்கெட்டுக்களை கைபற்றினார். இறுதிப்போட்டியில் 47 ரன்களைக்கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

வினோத் காம்ளி, அணியில் தனது இடத்தை தக்கவைத்துக்கொள்ள கஷ்டப்படப்போகிறார். சகாரா கிண்ணப்போட்டியிலும் சோபிக்கவில்லை. அதனால் இறுதிப் போட்டியில் வினோத் காம்ளிக்கு பதிலாக கங்குலி சேர்க்கப்பட்டார். அவரும் 12 ரன்களோடு திரும்பியதுதான் சோகம்.

கப்டனை மாற்றினால் என்ன, வீரர்களை மாற்றினால் என்ன, போராடும் குணம் இல்லாதவரை இந்திய கிரிக்கெட் அணிக்கு எழுச்சி இல்லை. புதிய கப்டன் டெண்டுல்கர் களத்தில் வீரர்களை உற்சாகப்படுத்துகிறார். ஓடி ஓடி ஆலோசனை சொல்கிறார். அதனால் பந்துவீச்சும், பந்து தடுப்பும் மெருகேறியிருக்கிறது. ஆனால் துடுப்பாட்டம்...?

பாகிஸ்தான் அணிக் கப்டன் வாசிம் அக்ரமுக்கு சகாரா கிண்ணப்போட்டி மற்றுமொரு உற்சாக மாத்திரை. பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வரிசை துடிப்பானதாக இருப்பதும், சோர்ந்துவிடாமல் இறுதிவரை போராடிப்பார்க்கும் வேகமும் பாகிஸ்தான் அணிக்குப் பலம்.

சகாராப்போட்டியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணிக்கு பரிசுத்தொகையாக 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கிடைத்தன. நம்நாட்டு பெறுமதிப்படி 14இலட்சம் ரூபாய்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 50

இராமரும் இலக்குவனும் உருசியமுக மலையடிவாரத்தில் சுற்றித்திரிந்ததை சுக்கிரீவனின் ஒற்றர்களான சில வானரர்கள் கண்டு, சுக்கிரீவனிடம் தகவல் சொன்னார்களல்லவா? அவர்கள் வாலியால்-தன்னைக் கொல்வதற்காக- ஏவப்பட்டவர்களாக இருக்கலாம் என்று சுக்கிரீவன் அஞ்சுகின்றான்.

இராமரும் இலக்குவனும் அந்தப் பிரதேசத்தில் வலம் வந்து கொண்டிருந்ததை வாலியின் உளவாளிகளும் காண்கின்றனர். வாலியின் மகனான அங்கதனும் இத்தகவலை அறிந்து. இராம இலக்குமணரின் உருவத்தை ஒளிந்திருந்து காண்கிறான். இவர்கள் அனுமனின் உதவியுடன் சுக்கிரீவன் இருக்குமிடம் சென்றதையும் அங்கதன் அறிந்து கொண்டான். இத்தகவல்களைத் திரட்டிக் கொண்டு கிட்கிந்தை செல்கிறான். தாயைக் கண்டு தான் கண்டவை, கேட்டவைகளை தாரையிடம் கூறுகின்றான். தாரை கலங்குகிறாள்.

சற்று நேரத்தில் சுக்கிரீவன் போரிட வருமாறு வாலியை கோட்டைவாயிலில் வந்து நின்று அறை கூவி அழைக்கிறான். தசரதச் சக்கரவர்த்தியின் குமாரர்கள் இராமரும் இலக்குவனும் சுக்கிரீவனின் பின்னணியில் நிற்பதனால்தான், அண்ணனுக்குப்பயந்து ஓடி ஒளிந்த தம்பி சுக்கிரீவன், மீண்டும் போர் முழக்கமிட்டு வந்திருக்கிறான் என்பதை தாரை உணர்ந்தமையினால் அவளைப் பயம் பிடித்தாட்டியது. இராமர் மாபெரும் வீரர்-விவேகி மட்டுமல்ல பல அரக்கர்களைத் கொன்றொழித்தவர் என்ற கதைகள் பல வானரர்களிடமும் பரவியிருந்தது. இதனால் தான் தன் கணவனைப் போருக்குச் செல்ல வேண்டாம் என்று தாரை தடுக்க முற்பட்டாள்.

## தாரையின் தவிப்பு

"பிராணநாதா! அயோத்தியிலிருந்து இரு அரசகுமாரர்கள் வந்திருக்கிறார்களாம். உங்கள் தம்பியுடன் அவர்கள் வந்து சேர்ந்து கொண்டமையினால்தான் சுக்கிரீவன் தங்களுடன் போரிடத்துணிந்திருக்கிறான். ஆகவே இன்று தாங்கள் போர்க்களம் செல்ல வேண்டாம். உங்கள் தம்பியுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள். இருவருமே பகையை மறந்து முன்பு போல் கிட்கிந்தையை ஆட்சி புரியுங்கள்," என்று உருக்கமாகக் கூறினாள்.

இதைக் கேட்ட வாலி இடிபோல் சிரித்தான். "தாரா! உன் கணவன் வலுச்சண்டைக்குப் போகமாட்டான்; அதே வேளை வந்த சண்டையையும் விடமாட்டான். அயோத்தி அரசகுமாரர்களைப் பற்றிக் கூறினாயே! அவர்கள் இராமரும் இலக்குவனுமாகத் தான் இருக்க வேண்டும். இருவரும் இணையிலா வீரர்கள்: தர்ம நெறி தவறாதவர்கள். தவக் கோலம் பூண்டு தெற்கு நோக்கி வருகிறார்கள் என்ற தகவல் எனக்கு முன்பே தெரிந்ததுதான். அவர்கள் உருசியமுகம் வந்திருக்கலாம்: சுக்கிரீவனையும் கண்டி

இராஜகுமாரன்

ருக்கலாம். ஆனால் அவர்கள் சுக்கிரீவன் பக்கம் சார்ந்து நின்று என்னுடன் போரிட ஒரு போதும் முன்வரமாட்டார்கள். அண்ணனுக்கும் தம்பிக்குமிடையில் நடைபெறும் குடும்பச்சண்டையில் அந்நியர்களாகிய அவர்கள் ஏன் தலையிடப் போகிறார்கள்? அவர்களைப் பற்றி நீ அஞ்ச வேண்டாம். தம்பி சுக்கிரீவனுக்கு இம்முறை நல்ல பாடம் புகட்ட வேண்டும். கலக்கத்தை விடுத்து, ஒரு சுத்த வீரனின் துணைவி போன்று போருக்கனுப்பிவை என்னை!"

இவ்வாறு வாலி கூறியபின் தாரையால் எதுவுமே செய்ய முடியவில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு வாலியின் நெற்றியில் வீரத்திலகமிட்டு விடைகொடுத்தனுப்பி வைத்தாள். தன்னுடைய தளபதிகளில் இருவரை மட்டும் தன்னுடன் வருமாறு பணித்தான் வாலி. இருப்பினும் சண்டையில் எச்சந்தர்ப்பத்திலும் அவ்விருவரும் குறுக்கிடக்கூடாது என்று கட்டளையிட்டான்.

கிட்கிந்தைக் கோட்டையின் முன்புறம் சுக்கிரீவன் வாலியின் வருகைக்காகக் காத்திருந்தான். விரைந்து சென்ற வாலி "ஏனடா மீண்டும் வந்தாய்? பட்ட அடி போதாதா? பாவம் பிழைத்துப் போகட்டும் என்று உன்னைக் கொல்லாமல் விட்டுவிட்டேன். மீண்டும் வந்த உன்னை இன்று உயிரோடு விடமாட்டேன்," என்று கர்ஜித்தான்.

சுக்கிரீவன் எதுவுமே பேசவில்லை. வாலியின் வலிமை அறிந்தவன் என்பதனால் உள்ளூர அச்சம் இல்லாமல் போகவில்லை. இராமர் கொடுத்த வாக்கு அவனை தைரியம் கொள்ள வைத்தது. மாபெரிய வீரன் போல் பெரும் சப்தம் செய்து கொண்டு வாலியின் முன் பாய்ந்தான். இருவருக்கும் துவந்த யுத்தம் நடைபெற்றது. இருவரும் பெரிய மரங்களை வேருடன் பிடுங்கிக் கொண்டு தாக்கினார்கள். இருவரும் துள்ளிக்குதிக்கும் போதெல்லாம் பூமி அதிர்ந்தது. வனவிலங்குகளும் பயந்து அங்குமிங்கும் ஓடின.

# வீரன் வாலியின் வீழ்ச்சி!




## தடுமாறிப் போன இராமர்

இருவரும் போர் புரியும் முறை இராமரையும் இலக்குவனையும் வெகுவாகக் கவர்ந்தது. இராமர் ஒரு கணம், தான் ஏற்றிருந்த கடமையையே மறந்துவிட்டாரோ என்று இலக்குவன் நினைத்தான். திடீரென சுயநினைவு பெற்றவர்போல், கோதண்டத்தை எடுத்து கணையொன்றையும் தொடுத்து எய்வதற்கு வாலியை இலக்கு வைக்க முனைந்தபோது தான் அவருக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது.

உயரம், பருமன், அங்க அமைப்புக்கள் மட்டுமல்லாமல் ஆடை அணிகளில் கூட வாலியும் சுக்கிரீவனும் ஒருவருக்கொருவர் வேற்றுமை காணமுடியாத நிலையில் இருந்தனர். பல வினாடிகள் முயன்றும் வாலியை இனங்காண முடியாமல் இராமர் தடுமாறினார்.

இந்த இடைவெளியில் சுக்கிரீவன் வாலியிடம் பயங்கரமான அடி வாங்கினான். இராமபாணம் வாலியின் மார்பைக் கிழிக்க இதோ வரும்: அதோவரும் என்று காத்துக் காத்து நன்றாக களைத்துப் போய் விட்டான். இராமர் தன்னை ஏமாற்றிவிட்டாரோ என்ற எண்ணம் உண்டானது. இனிமேல் தாமதித்தால் வாலி தன் உயிரைப் போக்கி விடுவான் என்ற எண்ணம் வலுவடைந்ததும் வாலியின் பிடியிலிருந்து தன்னைப் பிய்த்தெடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். இராமர் நின்றிருந்த இடத்துக்கு நேராக ஓடி வராமல் சுற்றிவளைத்து இராமர் இலக்குமணனுடன் நின்றிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

சுக்கிரீவனின் உடலில் காயம் படாத இடமே இல்லை என்று சொல்லலாம். குருதியுடன் வியர்வையும் ஆறாகப் பெருகியது. இளைத்துக் களைத்து வந்தவன் இராமரைப் பார்த்த பார்வையிலிருந்து சுக்கிரீவனுடைய உள்ளத்திலெழுந்த உணர்வுகளை இராமர் ஊகித்தறிந்து கொண்டார். "நண்பா! கொடுத்த வாக்கைக் காப்பாற்றாத கயவன் இவன் என்று மட்டும் கருதி விடாதே! உண்மையில் அண்ணன் தம்பி ஆகிய உங்கள் இருவரில் யார் வாலி என்பதனை நிர்ணயிக்க என்னால் முடியாமல் போய்விட்டது. அவன் தான் வாலி என்று கருதி ஒருவர் மீது குறிவைத்ததும் அதே இடத்தில் திடீரென மற்றவரின் உருவம் தோன்றும். நாணேற்றிக் கணை தொடுத்து குறிபார்த்தும், அக்கணையை எய்ய முடியாத அனுபவத்தை இப்போதுதான் முதன் முதலில் அனுபவித்தேன். பாணத்தை எய்து அப்பாணம் வாலியைத் தாக்காமல் தவறுதலாக உன்மீது பாய்ந்திருந்தால் எப்பேற்பட்ட பழி ஏற்பட்டிருக்கும். கால தாமதமில்லாமல் உடனடியாக மீண்டும் போய் வாலியுடன் மோது!

"தம்பி இலக்குமணா! வாலியிடமிருந்து சுக்கிரீவனைப் பிரித்துக் காட்டுவதற்கேற்ற வகையில் காட்டுக் கொடியில் பூக்களைத் தொடுத்து சுக்கிரீவனின் கழுத்திலணிவித்து; மார்புடன் இணைத்துக் கட்டிவிடு. அப்போது சுக்கிரீவன் யார் என்பதை அறிந்து கொண்டு வாலி மீது பாணத்தைத் தொடுத்து விடுகிறேன்."

இராமர் இவ்வாறு கூறியதும் சுக்கிரீவனின் சந்தேகம் நீங்கிவிட்டது. இலக்குவனும் அண்ணனின் ஆணையினை ஏற்று உடனடியாக ஒரு சரம் தொடுத்து சுக்கிரீவனுக்கு அணிவித்தான். மீண்டும்-முன்பை விட மிகவும் வலுவுடைய கர்ஜனை புரிந்த வண்ணம் சுக்கிரீவன்- கோட்டைவாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த வாலியை அணுகினான்.

சுக்கிரீவனின் போராவேசக் குரல் மீண்டும் கேட்டதும் வாலி சற்றுத் துணுக்குற்றான். இத்தனை அடி உதைகளை வாங்கிக் களைத்துப்போய் பின்வாங்கி ஓடியவன், உடனடியாகவே மீண்டும் திரும்பி போர் முழக்கமிட்டு வருவதானால், இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும் என்று வாலி கருதினான். இருப்பினும், வீரனான அவன் தேடிவரும் போரில் குதிக்கத் தயங்கவில்லை.

## வீழ்ந்தான் வாலி

"ஏனடா அர்ப்பனே! உனக்கு உன் உயிரின் மேல் ஆசையில்லையா? இரண்டு தடவைகள் உனக்கு உயிர்ப்பிச்சை அளித்துத் துரத்தினேன், ஆனாலும் உன் கெடுபுத்தி கேட்டையே தேடுகிறது. மீண்டும் ஒருமுறை உனக்கு ஒரு சந்தர்ப்பம் தருகிறேன்: வந்த வழியே மீண்டும் திரும்பி ஓடிவிடு!" என்றான் வாலி.

"உயிர்விடப்போவது யார் என்பதை இன்னும் சற்று நேரத்தில் அறிந்து கொள்ளலாம். எனக்கு நீ இதுவரை கொடுத்த உபாதைகளுக்கெல்லாம் மொத்தமாக உனக்குத் தந்து உன் உயிரைப் பறிக்க நானே இயமனாக வந்துவிட்டேன். உன் இஷ்டதெய்வத்தை வணங்கிவிட்டு வா போரிட!" என்ற சுக்கிரீவன் ஓடி வந்து வாலிமீது பாய்ந்தான். எதிர்பாராத தாக்குதலுக்கு இலக்கான வாலி நிலை தளர்ந்து நிலத்தில் சாய்ந்தான். எனினும் சுக்கிரீவன் தன்மீது பாய்வதற்கு முன் எழுந்து நின்று கொண்டான். சுக்கிரீவன் அதே நேரத்தில் வாலியின் பரந்த மார்பில் தனது வலது கையால் தாக்கினான். அந்த அடி வாலிக்கு உறைக்கவேயில்லை. சுக்கிரீவனைக் கீழே சாய்த்துவிட்டு அவன் மீது தாவி ஏறினான். விழுந்தவனைத் தாக்க தனது வலது கரத்தை ஓங்கி உயர்த்தினான்.

இதுதான் சரியான தருணம் என்பதை உணர்ந்த இராமர் தன் கோதண்டத்திலிருந்து பாணத்தை எய்தார். அது நேராக வாலியின் இடது மார்பைத் துளைத்தது. வேரற்ற மரம் போல் தரையில் வீழ்ந்தான் வாலி.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 48

சரியானவிடை:- துந்துபி

1. செல்வி பாத்திமா சானாஸ் வபா. ஹஸன்ஸ்தான், நாங்கல்ல, துல்ஹரிய.
2. செல்வி ந.நீரஜா. மே/பா.க.நல்லரெத்தினம், ஆரைப்பற்றை-3
3. செல்வன் ம.சயேன். 172 ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.
4. ஏ.ஜே.எம்.ஜஃபர். 17, சேச் வீதி, மட்டக்குளி, கொழும்பு-15.
5. நலபியா பஹர்தீன். பெருக்குவட்டான் B,கேம்ப், கொத்தான்தீவு, புத்தளம்.

**போட்டி இல. 50** கேள்வி:- வாலியின் மனைவி பெயரையும் மகனின் பெயரையும் தருக?

ஒக்டோபர்.05 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.50, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# நாடு முன்னேற நல்ல யோசனைகள்

காதில பூ கந்தசாமி

நாட்டின் யுத்தமோ நின்றபாடில்லை. இந்நிலையில் விடுமுறை தினங்களைக் குறைப்பது மூலமாக முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம் என்று அரசாங்கம் நினைக்கிறது. மேலும் ஒரு மாற்றம் பற்றி கற்பனை செய்து பார்க்கிறார் காதிலை பூ கந்தசாமி.

## பாண் விலையைப் பரிசீலிக்கக் கமிட்டி

பாண் விலை உயர்வுக்கு மாவுவிலை உயர்வே காரணம். மாவுவிலை உயர்வுக்கு யார் காரணம்? உலக சந்தையில் மாவுவிலை அதிகமாகிவிட்டதுதான் காரணம். உலக சந்தையில் மாவு விலை உயர என்ன காரணம்? இது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியில் மாவும், பாணும் நியாயமான முறையில் விற்பனை செய்யப் பட்டதா என்பதைக் கண்டறிய தனியான விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

## 603 பக்க அறிக்கை கையளிப்பு

பாண்விலை, மாவு விலை உயர்வு பற்றி ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டி நேற்றுமாலை தனது 603 பக்க அறிக்கையைக் கையளித்தது.

கடந்த ஆட்சிக்காலத்தில் மாவுவிலையை கட்டுப்படுத்த தவறிவிட்டார்கள். அதனால்தான் தற்போதும் மாவுவிலையை எட்டிப்பிடித்து நிறுத்த முடியவில்லை என்று கமிட்டி கண்டுபிடித்துள்ளது.

கமிட்டியின் 603 பக்க அறிக்கையில் 550 பக்கங்களில் கடந்த கால ஆட்சியிலும் பாண், மாவுவிலை நியாயமாக இருக்கவில்லை என்பதை திட்டவட்டமாக புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில் மாவு, பாண் விலைகளைக் கட்டுப்படுத்த சிறப்பு யோசனைகள் சில தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த யோசனைகள் தீவிரமாக ஆராயப் பட்டு வருகின்றன.

யோசனைகள்மீது தாமதமில்லாமல் முடிவு எடுக்கப்படுமா? என்று கேட்டபோது, 'இது அரசியல் தீர்வு யோசனையல்ல, எதிர்க்கட்சியின் முடிவை அறியக் காத்திருக்கத்தேவையில்லை. உடனடியாக முடிவுக்கு வந்துவிடுவோம். எதிர்க்கட்சி முடியுமானால் எதிர்ப்புக் காட்டிப் பார்க்கட்டும்' என்று பதில் சொல்லப் பட்டது.

## பண்டிகை நாட்களில் பாண் இருக்காது!

மாவு, பாண் விலைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக கமிட்டி அமைத்து ஆராயப்பட்டது தெரிந்தே. அந்த கமிட்டி 603 பக்க அறிக்கையை பக்குவமாகக் கையளித்தமையும் அறிந்ததே.

இதனை அடுத்து கமிட்டியின் யோசனையின் அடிப்படையில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

தைப்பொங்கல், தீபாவளி, மகாசிவராத்திரி, ஹஜ் போன்ற பண்டிகை நாட்களில் பாண் உற்பத்திக்கு தடைவிதிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் இந்துக்களும், முஸ்லிம்களும் விரதம் அனுஷ்டிப்பதால் பாண் சாப்பிடும் அவசியம் இருக்காது என்பதை கமிட்டி கவனத்தில் எடுத்து ஸ்ரோங்காகச் சுட்டிக்காட்டியிருந்தது.

சீனா, ஜப்பான், மற்றும் திபெத் போன்ற நாடுகள் கிடு கிடுவென்று முன்னேறி வருகின்றன. அங்கெல்லாம் பாண் சாப்பிடுவோர் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருப்பதே காரணம் என்றும் கமிட்டி கண்டுபிடித்துள்ளது.

## பல தரப்பட்ட மக்களும் பாராட்டு

நேரம் ஆறுமணி. செய்திபரப்புக் கூட்டுத் தாபனம். செய்திகள்! வாசிப்பது-சிதம்பரநாதன்.

பண்டிகை நாட்களில் பாண் உற்பத்திக்கு தடை விதிக்கப்பட்டதை வெளிநாட்டு இராஜ தந்திரிகள் பலர் பாராட்டியுள்ளனர்.

உள்நாட்டிலும் பலதரப்பட்ட மக்கள் மத்தியில் அமோக வரவேற்புக் கிடைத்துள்ளது.

எமது நிலைய நிருபர் இன்று காலையில் பொதுமக்கள் பலரைப் பேட்டி கண்டார்.

பாடசாலை செல்லும் மாணவரான பரமேஸ்வரன் எமது நிருபரிடம் கருத்துச் சொல்லும் போது, பாண் சாப்பிடுவதால் இதுவரை பஸ்ஸை தவறவிட்டுக் கொண்டிருந்தேன். கரடு முரடான பாணைக் கடித்துச் சாப்பிட்டு முடித்து பஸ் நிலையம் வந்து சேருவதற்குள் பஸ் போய்விடுகிறது. பாணை உள்ளே சுலபமாக தள்ளிவிடுவதற்காக நாலு போத்தல் தண்ணீர் குடிப்பது வழக்கமாகும். குடித்த தண்ணீர் வயிற்றில் இருப்பதால் பஸ்ஸை துரத்திக் கொண்டு ஓட முடியாது. வயிற்றுக்குள் உள்ள தண்ணீர் பொலித்தீன் பையிலுள்ள தண்ணீர் போல குலுங்கிக் கொண்டிருக்கும்.

பாடசாலை மாணவர்களின் கஷ்டங்களை நன்கு அறிந்து எடுக்கப்பட்டுள்ள முடிவை நான் மட்டுமல்ல, மாணவர் சமுதாயமே மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது என்று கூறினார். இவரது கருத்தைப் போலவே மேலும் இருநூறு மாணவர்களின் கருத்தும் காணப்பட்டது.

காரோட்டும் சாரதியான கந்தப்புவிடமும் கருத்துக்கேட்கப்பட்டது. பாண் உற்பத்தியை நிரந்தரமாக நிறுத்திவிட்டு, காலையில் சுத்தமான பச்சைத் தண்ணீர் குடிப்பதுதான் நல்லது என்று அறிவிக்க வேண்டும். நாட்டுக்கும், நமது உடலுக்கும் ஆரோக்கியமாக இருக்கும் என்றார் அவர்.

## "மத வேறுபாடு கிடையாது"

பாண் உற்பத்தியை பண்டிகை நாட்களில் தடைசெய்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இதனையடுத்து பண்டிகை நாட்கள் எந்த மதத்தினரால் கொண்டாடப்படுகிறதோ அந்த மதத்தினர் மட்டுமே குறிப்பிட்ட பண்டிகை நாட்களில் பாண் சாப்பிடாமல் இருக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அறிவிக்க நேற்று பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது.

"இந்து, முஸ்லிம் மதத்தினர் மட்டுமே பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட இரு மதத்தினரின் பண்டிகை நாட்களை மட்டுமே கவனத்தில் கொண்டு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது ஏன்?" என்று ஒரு நிருபர் கேள்வி எழுப்பினார்.

"அது இனவாத வகுப்புவாத மதவாத விஷமிகள் கட்டிவிடும் கதை. சர்வதேச சிறுவர்கள் தினம், சர்வதேசப் பெண்கள் தினம் போன்ற நாட்களிலும் பாண் உற்பத்திக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மதவேறுபாடு, இன வேறுபாடு காட்டும் எண்ணம் எமக்கு கிடையாது' என்று பதிலளிக்கப்பட்டது.

## மறு பரிசீலனை

குறிப்பிட்ட பண்டிகை நாட்களில் பாண் உற்பத்தியை தடைசெய்வது முறையானதா? என்பதை ஆராய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது.

பாண் தடை காரணமாக மக்கள் மாவு வாங்கி பிட்டு, இடியப்பம், ரொட்டி போன்றவற்றை காலையில் ஒரு பிடிபிடிப்பதாக பொருளாதார ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.


இதனால் மாவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் பாண் விலை மளமள மளமள வென்று உயர்ந்துவிட்டது என்றும் தெரியவந்துள்ளது.

இதனை அடுத்த முன்புபோலவே பாண் உற்பத்திக்கு சுதந்திரம் வழங்கலாமா என்று ஆராய கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது.

## இனிப்பான செய்தி

நேரம் மாலை ஆறுமணி. செய்திகள்! வாசிப்பது-சிதம்பரநாதன்.

மாவுவிலை ஏற்றம் கட்டுப்படுத்தப் படும். தட்டுப் பாடும் விரைவில் நீக்கப்படும். மக்கள் யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை.




இன்று காலை திருமலைக் கடலில் நாலு பயங்கரவாதப் படகுகள் நிர்மூலமாக்கப் பட்டன.

கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் உணவுப்பொருள் கையாடல்கள் தொடர்பாக கண்டறிய விசாரணைக் கமிஷன் அமைக்கப்படலாம்.

## பாண் பாடல்

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் நேற்று பாடிய பாடல் ஒன்று பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இதோ அந்தப்பாடலில் சிலவரிகள்.

*பாணேதான் கடவுளடா–அந்த*
*பரமனுக்கும் அது தெரியுமடா*
*தினமும் சைஸ் மாறும் பாணே*
*உன்னை கைப்பற்ற நினைக்குது மனமே*
*நீ அமுங்கி அமுங்கிப் போகின்றாய்*
*ஒரே விழுங்கலில் மறைந்து போகின்றாய்.*
*–(பாணேதான்)*



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/24/NEWS/96)

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# மறுபடியும்






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


→ இலங்கையில் நடந்த சிங்கர் கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி கலந்துகொண்டது. அணியின் இரு தூண்களான மார்க் டெய்லரும், ஷேன் வோர்னும் கலந்து கொள்ளாத வெற்றிடம் போட்டிகளின்போது தெரிந்தது. அணியில் இடம்பெறாது விட்டதற்கு இருவரும் ஒவ்வொரு காரணம் கூறினாலும், உண்மையான காரணம் இலங்கை மண்ணில் இலங்கை அணியை எதிர்கொள்வதை தவிர்க்கவே இருவரும் விரும்பினார்கள். இயன் ஹீலியும் நல்ல கப்டன்தான். ஆனாலும் மார்க்டெய்லர் திறமையான கப்டன்.

இலங்கையில் இருந்து திரும்பியதும் மார்க்டெய்லர் மீண்டும் கப்டன் பொறுப்பை எடுத்துக்கொண்டார். மார்க் டெய்லர் தலைமையில் இந்தியாவில் ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடச் செல்கிறது அவுஸ்திரேலிய அணி. போடர், கவாஸ்கர் கிண்ணத்துக்கான அப்போட்டி ஒக்டோபர் 10ம் திகதி ஆரம்பமாகிறது.

ஷேன் வோர்ன் முதன் முதலாக விளையாடிய டெஸ்ட் போட்டியும் இந்தியாவுக்கு எதிரானதுதான். ஒரு குட்டி ஓய்வுக்குப் பின் ஷேன் வோர்ன் மீண்டும் பந்துவீசப்போவதும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில்தான். நல்ல பொருத்தம். இந்திய அணிக்கு பலத்த சவால் காத்திருக்கிறது.

## விளையாட்டுக் குணம்

## வியப்'பூ'



பார்வைக்கு வசீகரமான பூ இது. ஆனால் வாசனை தான் சுத்த மோசம். நறுமணத்துக்குப் பதிலாக நாற்றம் மூக்கில் அடிக்கும்.

இப் பூவின் பெயர் 'ரிற்றான் அரும்'. இந்தோனேஷிய மொழியில் அதன் அர்த்தம் 'பிரேதப்பூ'. இந்தோனேஷியா காடுகளில் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு தடவைதான் இப் பூ மலரும்.


படத்தில் உள்ள 'பூ இலண்டன் மாநகரில் கியூ என்னும் பகுதியில் உள்ள ரோயல் தாவரவியல் பூங்காவில் பூத்திருக்கிறது. இதனைக் காண தினமும் மக்கள் 'கியூ' வரிசையில் திரள்கின்றனர். எல்லோரும் மறக்காமல் ஒரு கைக்குட்டையை எடுத்துச் செல்லவேண்டும். மூக்கைப் பொத்திக் கொண்டு கண்களால் ரசிக்கலாம்.

## வாசிக்க வயதில்லை




தேங்காய்ப்பூ தாடி மீசைக்குள் வெள்ளைப் புன்னகை. கம்பீரமான இந்த முதிய வாலிபருக்கு 95 வயது. விரைவில் செஞ்சரி போடப்போகிறார். பிறந்தது: 1901.01.01. பெயர்: அலியார் முல்லை உதுமான் கண்டு. ஊர்: சாய்ந்த மருது.

1943 இல் ஜப்பான்காரன் குண்டு வீசிய காலத்தில் தொண்டராகப் பணிபுரிந்தவன் தான் என்று மீசையை முறுக்காத குறையாகக் கூறுகிறார். மனைவி நான்கு வருடங்களுக்கு முன்னர் மரணமாகிவிட்டார். குடும்பப் பெருக்கத்திலும் குறைவைக்கவில்லை. ஆண்மக்கள் ஆறுபேர். பெண்கள் ஐந்துபேர். அவர்கள் வழியாக பேரன்மார் 38பேர். பேத்திமார் 21பேர். பூட்டன், பூட்டிகள் 42 பேர். 'பூட்டன் பூட்டிமாருடன் ஜாலியாகப் பொழுதுபோனாலும் வாரம் தவறாமல் 'முரசு' படித்தால்தான் ஒரு திருப்தி' என்கிறார் இந்த முரசின் முதிய வாசகர். செஞ்சரி போட வாழ்த்துக்கள்.







Sprinter Linford Christie and 'Sexy Aleksei'

↑ பெண்கள் மட்டும்தான் கவர்ச்சி காட்டலாம் என்று சட்டமா என்ன? கட்டழகுக் காளைகளும் அங்கம் இது தங்கம் என்று கவர்ச்சி காட்டப் புறப்பட்டு விட்டனர்.

வெள்ளை காற்சட்டையுடன் இருப்பவர் அலெக்ஸ். ரசியா நாட்டின் ஜிம்னாஸ்ரிக் வீரர். அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டுவிட்டு தனது சட்டையை கழற்றி வீசி விட்டுப் போஸ் கொடுக்கிறார். உடனே அதனை தொலைக்காட்சியில் குளோசப்பில் காண்பித்தனர். அமெரிக்கப் பெண்கள் மெய்மறந்து ரசித்தனராம். அலெக்சுக்கு தனது கட்டழகை கண்களுக்கு விருந்தாக்குவதில் அலாதிப் பிரியம். அதனால் இவருக்கு 'செக்ஸி அலெக்ஸ்' என்று செல்லப் பட்டம் சூட்டியிருக்கிறார்கள்.

அடுத்தவர் லின்போர்ட் கிறிஸ்டி. அட்லாண்டா ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட அமெரிக்காவின் வீரர்களில் ஒருவர். போட்டி முடிந்ததும் திறந்த மார்போடு தரிசனம் கொடுத்தார். அவர் சட்டையைக் கழற்றி வீசுவதை கப்பென்று பிடித்து படமாக்கினார்கள் தொலைக் காட்சியினர்.

அமெரிக்கப் பெண்கள் மத்தியில் ஒரு போட்டியே ஏற்பட்டுவிட்டதாம். கட்டழகன் யார், அலெக்ஸா? லின்போர்ட் கிறிஸ்டியா? அதுதான் போட்டி. சபாஷ் சரியான போட்டி தாஜுங்களே!

இன்னொரு செய்தி. அமெரிக்கப் பெண்கள் ஆணழகன் போட்டிகளை தொலைக் காட்சிகளில் விரும்பிப் பார்க்கிறார்கள். அழகிப் போட்டிகளை ஆண்கள் மட்டும் கண்கொட்டாமல் ஜொள் விட்டுக்கொண்டு பார்க்கிறார்கள் அல்லவா? அதற்கு பழிக்குப் பழியாக பெண்களும் ஆணழகன் போட்டிகளை கண்டு களிக்கிறார்களாம்.

அமெரிக்கப் பெண்களின் ரசனை அறிந்து அட்லாண்டா ஒலிம்பிக்கில் கவர்ச்சி காட்டி அசத்திவிட்டார்கள் இந்த விளையாட்டுவீரர்கள். அமெரிக்க நாகரீகம் அப்படி. காலம் ரொம்பக் கெட்டுப் போச்சல்லோ!

## வாழ்க வளமுடன்



விஷாந்தி–நிஷாந்தி
(இரட்டையர்)

ராசயோகம்-மலர்விழி தம்பதியினரின் கண்மணிகள் விஷாந்தி-நிஷாந்தி இருவரும் தமது முதலாவது பிறந்தநாளை 24.9.96 அன்று மகரகமவில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் இரு கண்மணிகளும் தமிழும் சுவையும் போல வாழ்வாங்கு வாழ வசந்த வாழ்த்துக்களை வழங்கினார்கள்.

↓ இலங்கைத்தீவில் முன்னேற்றம் கண்டுவரும் ஒரே ஒரு சமாச்சாரம் யுத்தம். இரு தரப்புமே தமது படைக்கலங்களை நவீனப்படுத்துவதில் தீவிரமாக உள்ளன. படத்தில் காணப்படுவது பெண் கடற்புலிகளின் படகு. இதனை வடிவமைத்தவர்களும் கடற்புலிகள்தான். முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை பெண் கடற்புலிகள் தமது படகில் ஏற்றிக் கொண்டிருக்கும் காட்சிதான் இது.

அரச படைகளிலும் இப்போது பெண்கள் கணிசமானளவு சேர்ந்துள்ளனர். எதிர்காலத்தில் இரு தரப்பு பெண்கள் பிரிவுகளும் நேரில் மோதிக்கொள்ளும் நிலைகூட ஏற்படலாம். போரிடுவது ஆண்களுக்கு மட்டும் உள்ள கடமை என்றிருந்த காலம் மலையேறிவிட்டது.

## நந்திக்கடல் மீதினிலே





படிப்பகம்